1175
494811

சங்க நூல்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ★ MADRAS ★
No.
29 SEP 1928

சென்னை, பச்சையப்பன் காலேஜ் ஸ்கூல்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியார்

எழுதியது.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை] [விலை ரூ. 1-4

121022

O-,1A:8
N28

OFFICE OF THE REGISTRAR OF ... No. 29 SEP 1928 MADRAS

முகவுரை

சங்க நூற்களைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் மாணவர்களும், மாணவிகளும் ஒருங்குணரும்படி செய்யவேண்டு மென்னும் நோக்கமே சங்க நூல் என்னும்இந்நூலை யான் எழுதியதற்குக் காரணமாகும். இந்நூலைப் படிப்பவர்கள் சங்க நூற்களைப்பற்றி முன்னறியவேண்டுவனவற்றை எளிதில் ஒருங்குணர்ந்து கொண்டு அந்நூற்களைக் கற்றலில் விழைவுடையவர்களாவார்கள்.

இந்நூலை யான் முதலிற் சற்றேறக்குறையப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் செந்தமிழ்க் கழகத்தில் சுருக்கமாக எழுதிப் படித்தேன். பிறகு அதனைச் சற்று விரிவாக எழுதி எட்டு வருடங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்று வந்த கலா சிந்தாமணி என்னும் மாதாந்தப் பத்திரிகையில் வெளியிட்டு வந்தேன். 1922 வருடம் வெளி வந்த சத்திய வாணி என்னும் பத்திரிகையின் முதற் றெகுதி இரண்டாம் பகுதியினும் இந்நூலின் ஒரு சிறு பகுதி வெளியிடப்பட்டது. திருவாளர். கே. பழனியாண்டிப் பிள்ளை அவர்கள் இந்நூலை இப்பொழுது அச்சிட்டு வெளியிட்டனர்.

இப்புத்தகம் அச்சாகையில் என்னுடைய மாணவர்களில் ஒருவரும், சென்னை லூதரன் மிஷன் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமாகிய திருவாளர். மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை அவர்கள் ஒப்பு நோக்குதன் முதலிய உதவிகளை முற்றும் புரிந்தனர். அவருக்கு ஆயுளும் செல்வமும் அருங்கலைப் புகழும் நீடு பெருகுவன வாகுக.

இந்நூல் இனிது முடியும்படி திருவருள் புரிந்த செந்தமிழ் மொழிக்குத் தென்பா லெல்லையாம் பைந்துணர்ப் பொழில்சூழ் பணிவரை மேவிய ஆழி யங்கையன் அடித்துணை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

கா. ர. கோ.

OFFICE OF THE REGIS[TRAR]
No.
29 SEP 9[..]
MADRA[S]

முன்னுரை

இந்நூலைச் சங்க நூல் என்னும் பெயரான் எழுதினமையின், இதிற் சங்கத்து நூற்களைப் பற்றி எழுதினேனே யன்றி அந்நூற்களை யியற்றிய புலமிக்காரைப்பற்றி யாதும் எழுதிற்றிலேன். ஆயினும், முதலிற் சங்கம் யாரால் உண்டாக்கப்பட்டது? யாது காரணமாக உண்டாக்கப்பட்டது? என வெழும் வினாக்களுக்கு விடை கூறுதற்பொருட்டுத் தமிழர்கள் யாவரும் போற்றுதற்குரிய முனிபுங்கவராகிய அகத்தியரைப் பற்றிய செய்திகள் சிலவற்றைக் கூற வேண்டுவது இன்றியமையாததா யிருக்கின்றது; ஆதலின், அவற்றை ஈண்டுக் கூறுகின்றேன்.

மேற்கூறியவற்றைக் கூறப்புகின், முதலில் அகத்தியர் வடபாலிருந்து தென்னாடு போந்து சங்க மிரீஇய செய்தியைக் கவனித்தல் வேண்டும். அது வருமாறு: கண்ணுதற் கடவுளானவர் மலையரையன் மகளாரை மணம்புரிய வடபெரும் வரையாகிய பனிவரைக்கண் எழுந்தருளிய போது தேவர்களும், முனிவர்களும் ஆண்டு வந்து குழுமினர். அதனால், வடபால் தாழ்ந்து, தென்பால் உயர்ந்தது. அவற்றைக் கண்டு கறைமிடற்றிறைவர் அவ்வுயர்வு தாழ்வுகளை நீக்கி நிலத்தினைச் சமமாக்கும் வழியை நாடி அறிந்து, அருந்தவ முனிவருட் சிறந்தோ ராகிய அகத்தியரை விளித்து, 'ஐய, வடபாலும் தென்பாலும் சமமாதற்

பொருட்டு நீ தென்பாற் சென்று பொதியவரைக்கண் தங்குக,' என்று பணித்தனர். அகத்தியர் அதனைக் கேட்டு அந்தி வண்ணரைப் பணிந்து, 'எம்மிறைவரே, தென்னாட்டின்கண் வழங்கு மொழியாகிய தமிழ் மொழியை யானறியேனே! அந்நாட்டில் தமிழ் மொழியில் உள்ள பல கலைகளை நன்குணர்ந்த சான்றோர் பலர் இருக்கின்றனர் எனக் கேள்வியுற்றுளேன். அங்ஙனமிருக்க, அம்மொழியின் உணர்ச்சி யின்றி யான் அந்நாட்டிற் சென்றுறைதல் எங்ஙனம் இயைவதாம்?" என்று கேட்டனர். உடனே கங்கைச்சடையர், தமிழ் மொழியையும் தமிழ் இலக்கணத்தையும் அகத்தியருக்கு அறிவுறுத்தி, அவரைத் தென்னாட்டிற் கனுப்பினர். அகத்தியர் புறப்பட்டுத் தென்னாடு நோக்கி வருகையில், செருக்குற்று வானுற வோங்கி வளரா நின்ற விந்திய வரையினை அடக்கிப் பின்னர்த் தென்னாடு போந்து, பொதிய வரைக்கண் தங்கித் தம் பெயரான் ஓரிலக்கணத்தை இயற்றி, அதனைப் பலருக்குங் கற்பித்து, அக்காலத்துப் பாண்டிய மன்னரைக் கொண்டு சங்கமிரீஇயினர் என்ப.

பரதகண்டம் எனப்படும் இந்து தேயம், நிலப்பகுதியும் நீர்ப்பகுதியுமாயுள்ள இப்பூமியின் நிலப்பகுதியாகிய ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா என்னும் கண்டங்கள் ஐந்தனுள் ஒன்றாகிய ஆசியாக் கண்டத்திலுள்ள பல தேயங்களுள் ஒன்றாகும். இந்து தேயத்தின் வடகோடியில் இமய வரை இருக்கின்றது. இதில் தேவர்களும், முனிவர்களும் பிறரும் வந்து குழுமியதனால், இத்தேயத்தின் வடபால் உயர்ந்து, தென்பால்

தாழ்ந்தத் என்பது ஏற்புடையதாகுமோ? ஆதலின், அதினின்றும் நாம் ஆய்ந்தறிதற்குரிய செய்தி ஒன்றுளது என்பது அறிஞர் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே யாகும். அதனை நாம் ஆய்ந்தறிய வேண்டின், நாம் முன்னே, 'தமிழர்கள் யார்? அவர்கள் பண்டைய ஒழுக்க வழக்கங்கள் யாவை? அகத்தியர் யாவர்?' என்பனவற்றை அறிதல் வேண்டும்.

தமிழர்கள் ஆசியாவின் மத்திய பிரதேசத்தினின்று இத்தேயத்திற்கு ஆரியருக்கு முன்னே வந்தவர்கள் என்று ஒரு சாராரும், இத்தேயத்திற்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நிலத்தொடர் பிருந்தது. அதுவே மக்கள் தோற்றத்திற்கு முதலிடம். அதுவே தமிழர்கள் தோன்றிய இடம் என ஒரு சாராரும் கூறுகின்றனர். அவை நிற்க. இனித் தமிழர்களின் பண்டை ஒழுக்க வழக்கங்களைக் கவனிப்போம்: தமிழர்கள் மிகவும் பழைய காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு நிலங்களில் வசித்து வந்தார்கள். மலையையும் மலை சார்ந்த இடத்தையும் குறிஞ்சி நிலம் என்றும், காட்டையும் காடு சார்ந்த இடத்தையும் முல்லை நிலம் என்றும், வயலையும் வயல் சார்ந்த இடத்தையும் மருத நிலம் என்றும், கடலையும் கடல் சார்ந்த இடத்தையும் நெய்தல் நிலம் என்றும் தமிழர்கள் நிலத்தை நான்கு பகுதிகளாக வகுத்து வழங்கி வந்தார்கள். இவற்றால் பூமிக்கு நானிலம் என்னும் பெயர் தமிழில் வழங்குவதாயிற்று. குறிஞ்சி நிலத்தினும், முல்லை நிலத்தினுஞ் சில பகுதிகள் சூரியனது வெப்பமிகுதியால் தம்

மியல்பழிந்து மணல் வெளியாக மாறுதலு முண்டு; அதனைப் பாலை நிலம் என்ப. அவ்வந்நில மக்களுக்கு இவர் இவர் இன்ன இன்ன நிலத்தில் உறைபவர் என்பதைக் குறிக்கும் பெயர்கள் உண்டு. அப் பெயர்கள் ஆடவருக்கும் மகளிர்க்கும் வெவ்வேருக வழங்கின.

1. குறிஞ்சி நில மக்களுள் கல்வி, கேள்வி, வீரம் முதலியவற்றுல் ஒப்புயர்வற்றவனுகிய ஆடவன் பொருப்பன், வெற்பன், சிலம்பன் எனப்படுவன். இவனே இந்நில மக்களின் தலைவன். மற்றை ஆடவர் குறவர், கானவர் எனப்படுவர்.

கல்வி முதலியவற்றுன் அங்ஙனஞ் சிறந்த பெண் குறத்தி, கொடிச்சி எனப்படுவாள்; இவள் இந்நிலத் தலைவன் மனைக்கிழத்தி. மற்றைப் பெண்க்ள் குறத்தியர் எனப்படுவார்கள்.

2. முல்லை நில மக்களுள் முற்கூறியாங்குச்சிறந்த ஆடவன் குறும்பொறை நாடன், தோன்றல் எனப்படுவன்; இவன் இந்நில மக்களின் தலைவன். மற்றை ஆடவர் இடையர், ஆயர் எனப்படுவர்.

முற்கூறியாங்குச் சிறந்த பெண் மனைவி, கிழ்த்தி எனப்படுவாள். இவள் இந்நிலத் தலைவன் மனைவி. மற்றைப் பெண்கள் இடைச்சியர், ஆய்ச்சியர் எனப் படுவார்கள்.

3. மருத நில மக்களுள் அங்ஙனம் உயர்ந்த ஆடவன் ஊரன், மகிழ்நன் எனப்படுவன்; இவன் இந்நில மக்களின் தலைவன். மற்றை ஆடவர் உழவர், கடையர் எனப்படுவர்.

முற்கூறியாங்குச் சிறந்த பெண் கிழத்தி, மனைவி எனப்படுவாள்; இவள் இந்நிலத் தலைவன் இற்கிழத்தி. மற்றைப் பெண்கள் உழத்தியர், கடைச்சியர் எனப் படுவார்கள்.

4. நெய்தல் நில மக்களுள், முற்கூறியாங்குச்சிறந்த ஆடவன் சேர்ப்பன், புலம்பன் எனப்படுவன்; இவன் இந்நில மக்களின் தலைவன். மற்றை ஆடவர் பரதர், அளவர், நுளையர் எனப்படுவர்.

முற்கூறியாங்குச் சிறந்த பெண் பரத்தி, நுளைச்சி எனப்படுவாள்; இவள் இந்நிலத் தலைவன் மனைவி. மற் றைப் பெண்கள் பரத்தியர், அளத்தியர், நுளைச்சியர் எனப்படுவார்கள்.

5. பாலை நில மக்களுள் முற்கூறியாங்குச் சிறந்த ஆடவன் விடலை, காளை, மீளி எனப்படுவன்; இவன் இந்நில மக்களின் தலைவன். மற்றை ஆடவர் எயினர், மறவர் எனப்படுவர்.

முற்கூறியாங்குச் சிறந்த பெண் எயிற்றி எனப் படுவாள்; இவள் இந்நிலத் தலைவன் மனையாள். மற் றைப் பெண்கள் எயிற்றியர், மறத்தியர் எனப்படு வார்கள்.

இவற்றைத் திணைப்பெயர் என்ப; ஆயினும், திணைப் பெயர்கள் நிலம் பற்றிய பெயராகவே கொள்ளப்பட் டுள. ஆதலின், இவற்றை நிலம்பற்றிய பெயர் என்ற னன். திணைப்பெயர் நிலம் பற்றிய பெயரெனவே கொள்ளப்பட்டிருத்தலை, "திணைதேம், ஊர்வா னகம் புற முதல்நிலன்" (நன்னூல்-பெ-இ-19ம்-சூ) என்ற தனால் அறிக.

உழவர் என்பது உழுதற் றொழில் பற்றியதன்றோ எனின், அஃது அவர்களின் நிலத்துக்குரிய தொழிலையே குறித்து நிற்றலின், நிலம் பற்றியதேயாம் என்க. இப் பெயர்களுள், தொழில் முதலியன குறித்து வரும் மற்றவற்றையும் இங்ஙனமே ஆய்ந்துணர்ந்து கொள்க.

தமிழர்கள் பண்டைக் காலத்தில் இங்ஙனம் நிலம் பற்றிய பகுப்பையே உடையவர்களா யிருந்தார்கள். இவர்களுள் ஒரு நிலத்து ஆடவன் தன்னிலத்துப் பெண்ணை மணந்து கொள்ளினும் கொள்ளுவன்; வேறு நிலத்துப் பெண்ணை மணந்து கொள்ளினுங் கொள்ளு வான். நிலம்பற்றிய இப்பகுப்பு உயர்வு தாழ்வைக் குறித்து வந்ததன்று; இவர் இவர் இன்ன இன்ன நில மக்கள் என்பதை உணர்த்தும் அளவினதே யாகும். இப்பகுப்பு எது போன்றதெனின் இவன் கோவூரான், இவன் குன்றத்தூரான், இவன் காஞ்சிப்புரத்தான், இவன் காவேரிப்பாக்கத்தான் என்பன போன்றதா கும். இவர்கள் தலைவனும், தலைவியும் எதிர்ப்பட்டு அன்பொத்த விடத்து மணம் புரிந்துகொள்வார்கள். பின் தலைவி கற்பின் வழி நிற்பள்.

சேர சோழ பாண்டியர் என்னும் அரசர்கள், இவர் களினின்று தோன்றி, வல்லரசுகளை ஏற்படுத்தியவர் களேயாவார்கள். இவர்களுள் முதலில் வல்லரசினைத் தோற்றுவித்தவனுக்குப் பழமை என்னும் பொருள தாகிய பண்டு என்பதனடியாகப் பாண்டியன் என்னும் பெயருண்டாயிற்று. பண்டையன் என்பது பாண் டியன் என மரீஇயிற்று என்ப. இவர்கள் வழி வந்த மன்னர்கள் யாவருக்கும் இப்பெயர்கள் குடிப்பெயர்க ளாயின. இவ்வேந்தர்கள் வல்லரசுகளைத் தோற்று

வித்த காலம் இராமாயண பாரத காலங்களுக்கு மிகவு முற்பட்ட காலமாகும் என்பதனைச் சரித்திரவாராய்ச்சியாளர் யாவரும் ஒப்புக்கொண்டுளர். இம்மரபின் வந்த மன்னர்கள் யாவரும் நால்வகையாகிய பெரும் படைத் திரள்களை யுடையவர்க ளாகவும், கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும், ஆட்சித்திறத்தில் மேன்மையுற்றவர்க ளாகவும், செங்கோலர்க ளாகவும் விளங்கி வந்தார்கள்.

இனி, அக்த்தியர் யாவர் எனின், ஆரியருக்குள் சிறந்து விளங்கிய இருடியருள் ஒருவர். அவர் வரவின் காரணத்தை நாம் நன்காய்ந்துணர வேண்டின், ஆரியரது வரலாற்றினை முன்னர் அறிதல் வேண்டும்.

ஆரியர்கள் பரத கண்டத்திற்கு மத்திய ஆசியாவினின்று வந்தவர்கள் என்று சிலரும், ஆர்க்டிக் சமுத்திரத்திலிருந்து வந்தவர்கள் என்று சிலருங் கூறுகின்னர்.

ஆரியர்கள் தாங்கள் இத்தேயத்தில் முதலில் வந்து தங்கிய இடத்திற்குப் பிரம்மாவர்த்தம் என்று பெயரிட்டார்கள். அது சரசுவதி, திருடத்துவதி என்னும் ஆறுகளுக்கு இடையிலுள்ள பிரதேசம் என்பது மனுதர்மம்- இரண்டாம் அத்தியாயம்-17-ம் சுலோகத்தால் தெரிகின்றது. பிறகு ஆரியர்கள் வட இந்தியாவில் அக்காலத் துறைந்தவர்களை வென்று கைப்பற்றிய இடத்திற்கு ஆரியாவர்த்தம் என்று பெயரிட்டார்கள். அஃது இமய மலைக்கும்,விஞ்சை மலைக்கும், கிழக்கு மேற்குக் கடல்களுக்கும் இடைப்பட்ட பிரதேசமாகும் என்பது மனுதர்மம்- ஷை அத்தியாயம்

22-ம் சுலோகத்தால் தெரிகின்றது. (விஞ்சைமலை என்பது விந்திய மலை போலும்!) ஆரியர்கள் யாவரும் முதலில் ஒரு சாதியினராகவே வாழ்ந்து வந்தார்கள். பிறகு தொழில் பற்றிப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என முப்பகுப்பினர்களாகி, முன் தம்மால் வெல்லப்பட்டவர்களை நான்காம் பகுப்பினர்களாக்கி, அவர்களுக்குச் சூத்திரர்கள் எனப் பெயரிட்டு, அவர்களைத் தங்களுக்கு அடிமைத் தொழில் செய்பவர்களாகச் செய்துகொண்டார்கள். பிறகு பிரம்மசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு ஆச்சிரமங்களை வகுத்தார்கள். அந்நான்கு சாதிகளுக்கும், நான்கு ஆச்சிரமங்களுக்கும் ஒழுக்கங்களை ஒவ்வொரு சாதிக்கும் வெவ்வேறாக வகுத்து, அவற்றிற்குத் தருமங்கள் என்று பெயரிட்டார்கள். ஆரியருக்குள் தோன்றிய அரசர்கள், சூரிய வமிசத்தினர்கள், சந்திர வமிசத்தினர்கள் என இரு பகுப்பினையுடையவர்களா யிருந்தார்கள். இவ்விரு வமிசத்தினுந் தோன்றி மிக்க சிறப்புற்று விளங்கிய அரசர் பலர்.

ஆரியர்கள், இங்ஙனமாகிய தங்கள் தருமங்களைத் தென்னாட்டினுறையுந் தமிழர்க ளிடையினும் பரப்ப எண்ணினார்கள். ஆனால், அவர்கள், கிழக்கு மேற்குக் கடல்களுக்கும், இமய மலைக்கும், விஞ்சை மலைக்கும் இடையில் உள்ள நிலத்தைக் கைப்பற்றுதற்கு அங்கிருந்தவர்களோடு பல நூற்றுண்டுகள் போர் புரிந்திருந்தமையினாலும், தென்னாட்டு மன்னர்கள் மிக்க வன்மை யுற்றவர்களா யிருந்தமையானும், வடநாட்டினின்று படை திரட்டிக்கொண்டு தென்னாடின்மேல் வரமுடியாதபடி வழியிற் பல இடையூறுகள் இருந்

தன்மையானும், சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் உபாயங்கள் நான்கில் சாமோபாயத்தினால் தமிழரைத் தம்வயப்படுத்த வேண்டும் என்றெண்ணி அங்ஙனம் சாமோபாயத்தினால் தமிழரைத் தம் வயப்படும்படி செய்யவல்ல ஆற்றலுடையார் யார் என நாடி அகத்திய முனிவரே அதற்கேற்றவர் எனத் துணிந்து, அவரைத் தென்னாட்டிற் கனுப்பினார்கள். இதுவே அகத்தியர் தென்னாட்டிற்கு வந்த காரணமாகும்.

ஆரியர்கள், 'வடநாட்டிலிருப்பவர்கள் நமக்குக் கீழ்ப் படிந்து விட்டார்கள்; இனித் தென்னாட்டினரையும் நம் வயப்படும்படி செய்தல் வேண்டும்,' என்று எண்ணி, அதற்காக அகத்தியரைத் தென்னாட்டிற் கனுப்பின செய்திதான், "வடபால் தாழ்ந்து தென்பாலுயர்ந்தது; அதனைச் சமனாக்க நீ தென்பாற் செல்க," என்று சிவபெருமான் அகத்திய முனிவரை நோக்கிக் கூறினர் எனப் புராணங்களிற் கற்பித்துக் கூறப்பட்டிருக்கின்றது. அகத்திய முனிவர் தென்னாட்டிற் போந்த பின் தக்காரிடம் தமிழை நன்கு கற்றுணர்ந்து கொண்டனர். பௌத்தர்கள் அவலோகிதர்பால் அகத்தியர் தமிழுணர்ந்துகொண்டனர் என்பார்கள். அதனை, "ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன்கேட் டேயும் புவனிக்கியம்பிய தண்டமிழ்" (வீரசோழியம்-பாயிரம்-கலித்துறை-2.) என்றதனாலறிக. இவ்வரலாற்றைப்பற்றிப் புரொபெசர்-திரு-செல்வகேசவராய முதலியார் அவர்கள் எம், ஏ. தாம் எழுதிய தமிழ் என்னும் வியாசத்தில் எழுதி யுள்ளதை அடியிற் காண்க:

"சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான்: சிவபெருமான் சமஸ்கிருதத்துக்கு

இலக்கண நூல் பாணினி முனிவருக்கும், தமிழுக்கு இலக்கண நூல் அகத்திய முனிவருக்கும் அருளிச்செய்தார்: அம் முனிவர் இருவரும் அம்முதனூல்கள் இரண்டின் வழியாகப் பாணினியம், அகத்தியம் என்னு நூல்களை அருளிச் செய்தார்கள் என்பர் சிலர்.

"சிவபெருமான் ஒரு டமருகத்தை ஒலிப்பிக்க, அதன் வலப் பக்கத் தெழுந்த ஓசையை முதலாகக் கொண்டு இலக்கணத்தைச் சூத்திரித்தார் பாணினி பகவான்; இடப்பக்கத் தெழுந்த ஓசையை முதலாகக் கொண்டு தமிழிலக்கணத்தை அருளிச் செய்தார் அகத்தியர் எனவும் புகல்வர் சில புலவர்.

"அற்றன்று; சிவபெருமானுடைய திருக்கலியாண மகோற்சவ காலத்தில் பூமண்டலம் நிலை குலைந்ததாக, அதனுல்மேலெழுந்த தென்பாலைச் சமன் செய்ய வந்த அகத்தியர் வழியில் தமிழினை அறுமுகக் கடவுள் அருளப் பெற்றனர் என்ப வேறு சிலர்.

"ஈதெல்லாம் புராண கற்பிதம்; காசி யடத்திலிருந்த வட நூல் வலவரோடு மாறு கொண்ட அகத்தியர், 'நான் தென்பாலடைந்து தமிழில் மேம்பட்டு உங்கள் இறுமாப்பை அடக்கி இறும்பூ தெய்துவேன்; காண்டிர்,' எனச் சபதங் கூறி வந்தவர், தமிழைச் சில சான்ருேரிடம் கற்றுப் பாண்டியன் உதவியால் தலைச்சங்கத்தை நிறுவுதல் செய்து தமிழை வளர்ப்பாராயினர்; இதுதான் உண்மை என்பர் மற்றுஞ் சிலர்.

"அகத்தியர் ஏதோ ஒரு காரணத்தால் தென்னுட்டினை அடைந்தவர், தமிழ் வல்ல சான்ருே ரிடத்து அதனை ஓதியுணர்ந்தார் என்பதே எமக்குத் துணிவு."

தென்னுட்டிற் போந்து தமிழை ஓதியுணர்ந்த அகத்திய முனிவர் பாண்டியன் சார்பினைப் பெற்று ஒரு சங்கத்தினை நிறுவித் தம்பெயரான் ஓரிலக்கணம் அருளி, அதனைப் பலர்க்குங் கற்பித்து வந்தனர். அதன் பிறகு தொழில் பற்றிய நால்வகை வகுப்புகள் தமிழ்

நாட்டி னுளவாயின. அகத்தியத்தின் பகுப்புகளுள் பார்ப்பன வியலும் ஒன்று என்பதை ஈண்டுக் கவனித்தல் வேண்டும். அந்நால்வகை வகுப்புகள் தமிழ் நாட்டில் வடநாட்டு வகுப்பிற் சிறிது வேறுபட வகுக்கப்பட்டன. நான்கு வகுப்புகளின் வடநாட்டுப் பெயர்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பன. தமிழ் நாட்டுப் பெயர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன. சூத்திரர் என்பது மிகவும் இழிந்த பொருளுடையது. வேளாளர் என்பது உபகாரிகள் என்னும் பொருளுடையது. உழுதொழில் யாவர்க்கு முபகார முடைமையின், அத்தொழிலுடையார்க்கு அது பெயராகக் கூறப்பட்டது. அஃது இப்பொருளுடைய தாதலை, "வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்," (திரிகடுகம்-12-ம் செ.) என்றதனா லறிக. தென்னாட்டில் நான்காம் வகுப்பினருக்குச் சூத்திரர் என்பதன் பொருள் தருந் தமிழ்ச் சொல்லாற் பெயர் வைத்திருக்கலாம். அங்ஙனம் வையாமைக்குக் காரணம் இந்நாட்டினர் அதற்கு மன மியையாமையே போலும். இங்ஙனமாகிய இவ்விருவகைப் பகுப்புகளும் இந்நாட்டில் இன்றளவும் உலக வழக்கிலும், நூல் வழக்கிலும் வழங்கி வருகின்றன.

உலக வழக்கு:

1. நிலம் பற்றிய பகுப்பு

தென்னாட்டில் மறவர் என்னும் பகுப்பினர் உளர். இவர்கள் தமிழ் வேந்தர்கள் காலத்திற் சிறந்த வீரர்களா யிருந்தார்கள். இவர்கள் வீரத்தில் வடநாட்டு க்ஷத்திரியர்களைப் போன்றவர்கள். இவர்கள் இப்

பொழுதுஞ் சிறந்த வீரர்களாகவே காணப்படுகின்றார்கள். மறவர் என்பது பாலை நிலம் பற்றி வந்த பெயராகும்.

கடற்கரை நிலத்துறைபவர்களும், மீன் பிடித்தல், படகோட்டுதல் முதலாகிய தொழிலை யுடையவர்களுமாகிய மக்களுக்குப் பரதர்என்னும் பெயர் வழங்குகின்றது. இது நெய்தல் நிலம் பற்றி வந்த பெயராகும். (பரதர் என்பது இப்பொழுது பரதவர் என வழங்குகின்றது.)

இடையர் என்னும் பெயர் முல்லை நிலம் பற்றி வந்ததே யாகும். இது வடமொழிப் பெயரு மன்று; வடமொழியில் இவ்வகுப்பினருக்கு வழங்கும் பெயரின் கருத்துக்கொண்டது மன்று. வடமொழியில் இவ்வகுப்பினர்களுக்குக் கோபர்கள் என்பது பெயர். தொல்காப்பியம்-பொ-அ-களவியல் முதற் சூத்திரத்தின் விசேட வுரையில், 'களவொழுக்கம் பொதுவாகலின், நான்கு வருணத்தார்க்கும், ஆயர் முதலியோர்க்கும் உரித்து,'' என நச்சினார்க்கினியர் கூறியதனாலும், இடையர் என்பது தொழில் பற்றிய நான்கு வகுப்பினுட் சேர்ந்த தன்றென்பது நன்கு விளங்கும்.

குறவர் என்னும் பெயர் குறிஞ்சி நிலம் பற்றி வந்த பெயரேயாகும். இவ்வகுப்பார்கள் இப்பொழுது மிகவும் இழிந்த நிலைமையுடையவர்களாகவும், தமிழினின்று திரிந்த மொழியைப் பேசுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள்.

2. தொழில் பற்றிய பகுப்பு

உலக வழக்கில் வழங்குந் தொழில் பற்றிய பகுப்பைக் கூறுதற்குமுன் அதன் முன் நிலையையும், பின்

நிலையையும் கவனித்தல் வேண்டும். அப்பகுப்புகள் முதலிற் றெழில் பற்றியனவா யிருந்தன. அப்பகுப்புகள் முன்னரங்ஙனமே யிருந்தன வென்பதனை,

"பொருதிரை யுததி சூழ்புவி புரந்த
புரூரவா வளித்தருள் புதல்வன்
மருவலர் வணங்கு மாயுவென் றுரைப்போன்
மைந்தரை யிசைக்குறி னகுடன்
அருள்புரி யரச விருத்தனோ டரசி
யரம்பனெண் சிலைமத னென்ன
இருவிசும் பாள்வோன் றுதையென் றிறைஞ்சு
மேனசு மெனவிளம் புவரால்.
"அவர்களி லரச விருத்தனன் மரபி
லாழியான் கலையெனு மரிய
தவர்புகழ் தன்வந் திரியுநல் லிருக்காந்
தனிமறைச் சவுனக ராதி
நவிலுமந் தணரு மறுபதோ டாறி
னண்ணுமா யிரமேனும் பருவம்
புவிபுரந் தருளு மளர்க்கனே முதலாய்ப்
புகழ்பெறு வேந்தரு முதித்தார்."

(பாகவதம் 9-ம் கந்தம் 14-வது யயாதி கதை யுரைத்த அத்தியாயம்-செ-1, 2.)

"போர்வேல் விசயம் புனைகின் றயயாதி மைந்தன்
பார்மே வுவேந்தன் பழிதீர் புகழ்ப்பூரு வென்னும்
சீர்மே வரசன் றிகழ்கின் குலச்செல்வ னன்னோன்
ஏர்மா மரபின் றிரம்யா வரியம்பு மீட்டார்.
"அன்னோன் மரபி னருட்கண் ணுவனுதி யாய
நன்னூன் மறைதே ரறவோர் களுநாட்டு டற்றும்
கொன்னூர் வடிவே லிறையோர் களுங்கோத மன்சேர்
மின்னு ரிடையும் பிறந்துற் றுவிளங்கி னரால்."

(பாகவதம் 9-ம் கந்தம்-15-வது பூரு மரபுரைத்த அத்தியாயம்-செ-1, 2.)

என்னுஞ்செய்யுட்களால் அறிதலாகும். பின்னர் அந் நாற்பகுப்புகளைப் பிறப்புப் பற்றியவை எனக் கொள்ளத் தொடங்கினர். அதற்குக் காரணம் அப்பகுப்புகளுக் குரிய தொழில்களில் வழி முறை யுரிமை (பரம்பரா பாத்தியம்) கொள்ள லுற்றதே யாகும்.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்,"

(திருக்குறள்-பொ-பா-பெருமை-2-ம்-செ.)

என்னும் செய்யுளும்,

"நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை-தொல்சிறப்பி
னொண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம்."

(நாலடியார்-பொ-பா-தாளாண்மை-செ-5.)

என்னுஞ் செய்யுளும் அதனை மறுக்க வந்தனவே யாகும். வடமொழியிலும் அவ்வுரிமையை மறுப்பனவாகிய சுலோகங்கள் பல வுள.

இனித்தொழில் பற்றிய நான்கு வகுப்பு உலகவழக்கில் வழங்குமாறு கூறுதும்: * அந்தணர் என்னும்

---

* திருக்குறள் நீத்தார் பெருமை என்னும் அதிகாரம்-10-ம் குறளில்,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

என அந்தண ரென்னும் பெயர் நீத்தார்க்குரித்தெனக் கூறினர் திருவள்ளுவதேவர். இதற்குப் பரிமேலழகர், விசேட உரையில், "அந்தண ரென்பது அழகிய தட்பத்தினை யுடையார் என ஏதுப் பெயராகலின், அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லா தென்பது கருத்து," என்று கூறினர்.

பெயர் பார்ப்பாருக்கு வழங்குகின்றது. பேரிச் செட்டிமார்கள், வாணியர்கள் முதலியவர்கள் வணிகர் என்னும் வகுப்பிற் சேர்ந்தவராவார்கள். வேளாளர் என்னும் பெயர் உழு தொழிலுடையாரைக் குறிப்பது. இப்பொழுது மற்றும் பலவாயுள்ள வகுப்புகளுள், சில வகுப்பினர் யாங்கள் அரச குலத்தினர், யாங்கள் அரச குலத்தினர் என வழக்கிடுகின்றனர். ஆதலின் அரசர் என்பது இன்ன பகுப்பினரைக் குறிப்பது என்க் கூறுதல் இயலாது.

நூல் வழக்கு:

1. நிலம் பற்றிய பகுப்பு:

தொல்காப்பியம்-பொ-அ.அகத்திணையியல்

"ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉங் கிழவரு முளரே." (சூ-21)

"ஏனோர் பாங்கினு மெண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே." (சூ-22)

நாற்கவி ராச நம்பி யகப்பொருள்-அகத்திணை யியல்.

குறிஞ்சி

"...பொருப்பன் வெற்பன் சிலம்பன்,
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர்." (சூ-20)

பாலை

"...விடலை காளை, மீளி
இன்னகை யெயிற்றி யெயின ரெயிற்றியர்
மறவர் மறத்தியர்." (சூ-21)

முல்லை

“...குறும்பொறை நாடன் றோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடைய ரிடைச்சியர் ஆய ராய்ச்சியர்.” (சூ-23)

மருதம்

“...ஊரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி
உழவ ருழத்தியர் கடையர் கடைச்சியர்.” (சூ-23)

நெய்தல்

“...சேர்ப்பன் விரிதிரைப் புலம்பன்
பரும வல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்
அளவ ரளத்தியர்.” (சூ-24)

2. தொழில் பற்றிய பகுப்பு

தொ—பொ—அ—மரபியல்

அந்தணர்

“நூலே கரக முக்கோல் மணையே
ஆயுங் காலை யந்தணர்க் குரிய.” (சூ-70)

அரசர்

“படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.” (சூ-71)

வணிகர்

“வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.” (சூ-77)
“மெய்தெரி வகையி னெண்வகை யுணவின்

செய்தியும் வரையா ரப்பா லான." (சூ-78)
"கண்ணியுந் தாரு மெண்ணின ராண்டே." (சூ-79)

வேளாளர்

"†வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி." (சூ-80)
"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே."(சூ-81)

அகத்தியர் தென்னாட்டிற்கு வந்தபின் இவ்விரு வகையான பகுப்புகளும் இவற்றிற் கேற்ற ஒழுக்கங்களும் மயங்கிப் போராடுவனவாயின. நிற்க.

தமிழர்களின் பண்டைக் காலத்து ஒழுக்க முதலியவற்றை யுணர்தற்குச் சங்க நூற்களே சிறந்த கருவிகளாகவும், பொருள்வளத்தின்மிக்க மேம்பாடுடையனவாகவும், தமிழ்ப்புலமை சிறப்புறுதற்கு ஏதுவாகவும் இருக்கின்றன வாகலின், அவற்றைக் கற்றறிதல் தமிழர்கள் யாவர்க்கும் இன்றியமையாத கடமையாகும்.

---

† ஒரு பொருளுக்குப் பல பெயர்களைத் தேடிக் கூட்டிக் கூறுதலே நோக்கமாகக் கொண்ட நிகண்டாசிரியர்களும், பிற்காலத்து இலக்கியஞ் செய்த சில ஆசிரியர்களும் தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர்களின் கருத்தினைக் கருதாது, வேளாளர்க்குச் சூத்திரர் என்னும் பெயரினையுங் கூட்டிக் கூறிவிட்டார்கள். அது பெரும்பிழையேயாம். கவிச்சக்கரவர்த்தியாராகிய கம்பநாடர் தொல்லாசிரியர்களின் கருத்தை நன்குணர்ந்தவராகலின், வேளாளரை எங்குஞ் சூத்திரர் எனக் கூறாராயினர்.

ஸ்ரீ

சங்க நூல்

கண்ணன் கழலிணை
எண்ண வருந்துணை.

சங்க நூல் என்பது சங்கத்துப் புலவர்களால் இயற்றப்பட்டனவும், வேறு புலவர்களா லியற்றப் பட்டுச் சங்கத்துப் புலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட னவும் ஆகிய நூற்கள் யாவற்றையுங் குறிக்கும்.

சங்கத்துத் தொகை நூற்கள் என்பது அங்ஙன மாகிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்னு மூவகைத் தொகை நூற்களைக் குறிக்கும்.

சங்கம்—தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூன்றாம்.

முதற் சங்கம்

அவ்வற்றுள், முதற் சங்கம் இருந்த விடம் கடலாற் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அச்சங்கத்திருந்த புலவர்கள் அகத்தியனாரும், திரிபுர மெரித்த விரி சடைக் கடவுளும், குன்ற மெறிந்த முருக வேளும், முரஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என் னும் இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன் பதின்மர் என்ப. அவரை யுள்ளிட்டுப் பாடினோர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர்

என்ப. அவர்க்கு இலக்கணம் அகத்திய மாகும். அவ ராற் பாடப்பட்ட நூற்கள் எத்துணையோ பரிபாட லும், முது நாரையும், முது குருகும், களரியாவிரை யும் என்னும் இத்தொடக்கத்தன.

அகத்தியம்

அவற்றுள், அச்சங்கத்தார்க்கு இலக்கணமாயிருந்த அகத்தியம் பல வகை யிலக்கணங்களையும் மிக வும் விரிவாகக் கூறும் நூலாகும். அதிற் கூறப்பட்ட இலக்கணங்க ளாவன : எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பன வியல், சோதிடம், காந்தருவம், கூத்து என்பனவும், பிறவுமாம். இஃது இன்னதாதலைப் பின் மாபுராணம், பூத புராணங்களைப் பற்றிக் கூறு மிடத் துக் காண்க. இதன் சில சூத்திரங்கள் தவிர மற்றவை யிக்காலத்துக் காணக் கிடைத்தில. அச்சூத்திரங் களும் அங்கு மிங்குமாகக் காணப்படுகின்றன.

அவற்றுட் சில வருமாறு :

* "பலவி னியைந்தவு மொன்றெனப் படுமே
அடிசில் புத்தகஞ் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மனைய."

† "ஆலு மானு மோடு மொடுவுஞ்
சாலு மூன்றும் வேற்று மைக்கதுவே."

† "செய்வோன் காரணஞ் செயத்தகு கருவி
யெய்திய தொழின்முத லியைபுடைத் ததன்பொருள்."

* இஃது 'ஒருமொழி யொருபொரு ளனவாம்' என்னு நன்னூற் சூத்திர வுரையின் மேற்கோள்.

† இவ்விரண்டும் நன்னூல் மூன்றும் வேற்றுமைச் சூத் திர வுரையின் மேற்கோள்கள்.

முதற்சங்கத்து நூற்களுள் மற்றையவை, இலக்கியங்கள் என்பது மாத்திரந் தெரிகின்றது. அவற்றைப் பற்றி மற்றொன்றுந் தெரியவில்லை.

இடைச் சங்கம்

இனி, இடைச் சங்கம் இருந்த விடம் கபாட புரம் என்ப. அச்சங்கத்து இருந்த புலவர்கள் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என்னுமித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவரை யுள்ளிட்டுப் பாடினார் மூவாயிரத்து எழுநூற்றுவர் என்ப.

அவர்க்கு இலக்கணம்: அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூதபுராணமும் என்னும் இவை யென்ப. பன்னிருபடலம் என்பதும் அச்சங்கத்திலக்கணமே. அவராற் பாடப்பட்டன: கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலையகவலும் என்னும் இத்தொடக்கத்தன வென்ப.

இச்சங்கத்துப் புத்தகாலய மண்டபத்து எண்ணாயிரத்து நூற்று நாற்பத் தொன்பது நூற்கள் இருந்தன வென்ப. தென்குமரி யாறும் அதன் தெற்கிலுள்ள நாடுகளும், கடலாற் கொள்ளப்பட்ட பொழுது அவை கடல்வாய்ப் பட்டன. அந்நூற்களின் வகையை:

> " ஏரண முருவம் யோக
> மிசைகணக் கிரதஞ் சாலந்

தாரண மறமே சந்தந்
தம்பனீர் நிலமு லோக
மாரணம் பொருளென் றின்ன
மான நூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ!
வழிவழிப் பெயரு மாள."

என்னுமிச் செய்யுளா லறிக.

இடைச் சங்கத்து நூற்களுள் எஞ்சி நின்ற நூற்கள் இத்துணை யென்று சொல்லுதல் முடியாது. கடைச் சங்கத்தார் காலத்திருந்தன வென்று கொள்ளப்படும் நூற்களிலேயே பல விக்காலத்துக் கிடைத்தலருமையாய் இருக்கின்றன. பழைய நூற்கள் அச்சுவாகன மேறுந்தோறும், நாம் முன்னே கேட்டிராத பழைய நூற்களின் பெயர்களை யவற்றுட் காண்கின்றோம். கடைச் சங்கத்துத் தொகை நூற்களுள் எட்டுத் தொகையுட் சேர்ந்த புற நானூறு, அக நானூறு முதலிய சில நூற்களில் முதற் சங்கத்துப் புலவர்களால் இயற்றப்பட்ட செய்யுட்களுஞ் சில விருக்கின்றன என்கின்றனர். அங்ஙனமாக இடைச் சங்கத்து நூற்களுள் எஞ்சி நின்றவை யித்துணை யெனக் கூறுதல் எங்ஙனம் இயல்வதாம்? ஆதலின், இடைச்சங்கநூற்களுள் இப்பொழுது விளங்கி யுள்ள நூற்களை மட்டும் ஈண்டுக் கூறுவாம்.

இனிக் கடைச் சங்கத்தார்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்று இறையனார் களவியல் உரைப் பாயிரத்துட் கூறப்பட்டிருத்தலின், அகத்தியம் கடைச் சங்கத்தார் காலத்தினும் இருந்திருக்கின்றது என்று துணிதலாம்.

பன்னிரு படலம்

பன்னிரு. படலம் என்பது ஆசிரியர் அகத்திய ஞர் மாணவர்களாகிய தொல்காப்பியர், அதங் கோட்டாசான், துராலிங்கர், செம்பூட்சேய், வையா பிகர், வாய்ப்பியர், பனம் பாரர், கழாரம்பர், அவிநயர், காக்கை பாடினியார், நத்தத்தர், வாமனர் என்னும் பன் னிருவராலும் இயற்றப்பட்டது ; தமிழ் நூலுக்கே சிறந்தனவாகிய அகப் பொருள் புறப்பொருள் என்னும் இரு வகைப்பொருள் இலக்கணங்களுள் புறப் பொருள் இலக்கணத்தைக் கூறுவது. கடைச் சங்கக் காலத்துக் குப் பின்னிருந்த சேரர் பரம்பரையினராகிய ஐயனரி தனர் என்பார் இந்நூலையே முதனூலாகக் கொண்டு புறப் பொருள் வெண்பா மாலை யென்னும் புறப் பொருள் நூலை யியற்றி யிருக்கின்றனர் என்பது நன்கு விளங்குதலின், இந்நூல் கடைச் சங்கத்தார் காலத்துக் குப் பின்னும் இருந்திருக்கின்றது என்பது நன்கு விளங்குகின்றது. ஆயினும், இந்நூலின் சில சூத்தி ரங்களே இப்பொழுது கிடைக்கக் கூடியனவாம். அவற்றுள் சில வருமாறு :

'வஞ்சியுங் காஞ்சியுந் தம்முண் மாறே.'

இது, பத்துப்ஃ பாட்டில் மதுரைக் காஞ்சி உரை யின் முதலிற் காட்டப்பட் டுள்ளது.

"ஆய வகப்புற மையிரண்டு மாயுங்கால்
காந்த ளமர்த்தவீ ரைந்துமகத் தின்புறமே."
"கைக்கிளை யென்பது புறனே."

இவை, யாப்பருங்கலத்தின் ஒழிபியலின் 'மாலை மாற்றே' என்னுஞ் சூத்திரத்தில் 'திணையும்' என்ற தன் உரையிற் காட்டப்பட் டுள்ளன.

இசை நுணுக்கம்

இசை நுணுக்கம் என்பது, இசை யிலக்கணங் கூறும் நூலாகும். இதனை யியற்றினர் ஆசிரியர் அகத்தியனர் மாணவர் சிகண்டி யென்னும் அருந்தவ முனிவராவர். இந்நூலைப்பற்றி அடியார்க்கு நல்லார் தாமியற்றிய சிலப்பதிகார வுரைப் பாயிரத்துள், 'இனித் தேவ விருடியாகிய குரு முனிபாற் கேட்ட மாணக்கர் பன்னிருவருட் சிகண்டி யென்னும் அருந்தவ முனி இடைச் சங்கத்து அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்பு செல்வோன் திலோத்தமை யென்னுந் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றினமையால் சார குமாரன் என அப்பெயர் பெற்ற குமரன் இசை யறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்,' என்று கூறி யிருக்கின்றனர். (சார குமாரனைச் சயந்த குமாரன் எனவும் கூறுவர்). இதனல் இந்நூல் இடைச் சங்கக் காலத்துச் சிகண்டி யென்னும் முனிவரால் இயற்றப்பட்ட இசை யிலக்கண நூலென்பதும், அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியன் மகன் சார குமாரன் இசை யறிதற் பொருட்டு இஃதியற்றப்பட்டது என்பதும் நன்கு விளங்குகின்றன. முற்கூறிய ஆசிரியர் அகத்தியனர் மாணவர் பன்னிருவர் பெயர்களுட் சிகண்டி யென்னும் பெயர் காணப்படவில்லை. ஆனல், அப்பன்னிருவருள் எவரேனும் ஒருவர் இப்பெயரைத் தமக்கு மாறு பெயராகக்கொண்டவராய் இருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

மா புராணம், பூத புராணம்

மா புராணம், பூத புராணம் என்னும் இரண்டும் அகத்தியத்தைப் போலவே பல வகை இலக்கணங்களை யும் மிகவும் விரிவாகக் கூறிய நூற்க ளாகும். அவற் றுட் கூறப்பட்ட விலக்கணங்க ளாவன: அகத்தியத் திற்போலவே எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந் தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பன வியல், சோதிடம், காந்தருவம், கூத்து என்பனவும், பிறவுமாம். இவை யின்னவாம் என்பதனைத் தொல் காப்பியம், பொருளதிகாரம், மரபியலின் 97-ம் சூத் திர வுரையில், 'இனிப் படர்ந்துபட்ட பொருண்மைய வாகிய மா புராணம், பூத புராணம் என்பன சில் வாழ் நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல் காப்பியம் இடைச் சங்கம் முதலாக இன்று காறும் உளதாயிற்று எனக் கொள்க,' என்று பேராசிரியர் கூறியதனையும்; தொல்காப்பியத்துச் சிறப்புப் பாயிர வுரையில், "முந்து நூல் அகத்தியமும், மாபுராணமும், பூதபுராணமும்,இசை நுணுக்கமும்; அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன: எழுத்துச் சொற்பொருள் யாப் பும், சந்தமும், வழக்கியலும், அரசியலும், அமைச்சி யலும், பார்ப்பன வியலும், சோதிடமும், காந்தருவ மும், கூத்தும் பிறவுமாம்," என்று நச்சினார்க்கினியர் கூறியதனையுங் கண்டறிக.

இனி, இந்நூற்களைப்பற்றிப் பேராசிரியர் கூறி யதை நோக்கின், அவர் காலத்திலேயே இந்நூற்கள் இறந்துவிட்டனவென்பது நன்கு விளங்கும். கடைச்

சங்கத்தார்க்கு இலக்கணமா யிருந்த நூற்கள், இவை யெனக் குறிக்கு மிடத்து இவ்விரண்டு நூற்களும் குறிக்கப்படாமையின், இவை அவர்கள் காலத்திருந் தன வென்று கூறுதற் கில்லை. ஆயினும், யாப்பருங் கல விருத்தி யுரைகாரர், அந்நூலின் உறுப்பியலின் எழுத் தோத்தினுள் இரண்டாம் சூத்திர வுரையில், 'மகரக் குறுக்கத்துக்குப் பயன் மாபுராண முடை யார் எடுத்தோதினர்,' எனவும், 'இன்னும் மகரக் குறுக்கத்தின் பயன் மாபுராணத் திட்த்துக் காண்க,' எனவும் கூறி யுள்ளார்; ஆதலின், இவ்விரு நூற்களும் கடைச் சங்கத்தார் காலத்தில வென்று கூறுதலுங் கூடாமையே. இந்நூற்களின் சூத்திரங்கள் அங்கு மிங்குமாகச்! சில காணப்படுகின்றன.

கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை யகவல்.

மற்றுக் கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை யகவல் என்பன இலக்கியங்கள் என்பது மட்டும் தெரி கின்றது. அவை யுள்ளன வென்பதும், இறந்து பட்டன வென்பதுந் தெரிந்தில.

தொல்காப்பியம்

இனித் தொல்காப்பியம் என்பது அகத்தியர்தம் மாணவர் பன்னிருவருள் முதன் மாணவரும், திரண தூமாக்கினி யென்னு மறு பெய ருடையவரு மாகிய தொல்காப்பியரால் இயற்றப்பட்ட விலக்கண நூல்.

இந்நூலின் காலம்

இந்நூல் முதற் சங்கத்தின் இறுதியில் இயற்றப் பட்ட தாகும். இதனைப் பொருளதிகாரத்தின் நான் காம் இயலாகிய கற்பியலின்,

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே,'

என்னும் மூன்ருஞ் சூத்திரத்தின் விசேட வுரையில், 'எனவே, முற்காலத்து நான்கு வருணத்தார்க்குங் கரணம் ஒன்ருய் இருந்தது என்பதாம். அஃது இரண்டாம் ஊழி தொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது என்பதூஉம், தலைச் சங்கத்தாரு முதனூல் ஆசிரியர் கூறிய முறையே கரணம் ஒன்ருகச் செய்யுள் செய்தார் என்பதூஉம் கூறிஞ ராயிற்று,' எனவும்,

"பொய்யும் வழூவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப,"

என்னு நான்காஞ் சூத்திரத்தின் விசேட வுரையில், 'இவ்வாசிரியர் ஆதி யூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின், முதனூ லாசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழுமாறும் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழூவும்பற்றி யிருடிகள் கரணம் யாத்தவாறும் கூறினர்,' எனவும் நச்சினர்க்கினியர் கூறியவற்று னுணர்க.

ஈண்டுக் கூறியவற்ருன் இந்நூல் முதற் சங்கத்தின் இறுதியில் இயற்றப்பட்டதாம் என்பது விளங்கியதேனும், அக்காலம் இன்னதென ஒருவாறேனும் புலப்படவில்லை. அக்காலம் ஒருவாறு புலப்படுதற்குரிய ஆதாரங்கள் சில வுள. இந்நூலின் சிறப்புப் பாயிர விசேட வுரையில், 'நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் மறை யென்ருர். அவை தைத்திரியமும், பௌடியமும், தலவகாரமும், சாமவேதமுமாம். இனி, இருக்கும், யசுவும், சாமமும், அதர்

வணமும் என்பாரு முளர். அது பொருந்தாது, இவர் இந்நூல் செய்த பின்னர் வேத வியாதர் சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தா ராகலின்,' என்று நச்சினார்க் கினியர் கூறி யிருக்கின்றனர்.

வேதத்தை நான்கு கூறாகச் செய்த வேத வியாத முனிவரே மகாபாரதஞ் செய்தவரு மாகலின், இந்நூல் பாரதத்துக்கு முற்பட்டதாம் என்பதும், இந்நூல் செய்கின்ற காலத்தில் வேதம் பிற் கூறிய முறையில் நான்கு கூறாகப் பகுக்கப்பட வில்லை என் பதும் நன்கு விளங்கும்.

இனிப் பொருளதிகாரத்தின் ஒன்பதாம் இய லாகிய மரபியலின்,

> "வினையி னீங்கி விளங்கிய வறிவின்
> முனைவன் கண்டது முதனூ லாகும்."

என்னும் தொண்ணூற்று நான்காஞ் சூத்திரத்தின் விசேட வுரையில்,

"அதுதானும் பனம்பாரனார் வடவேங்கடம் தென் குமரி எனக் குமரி யாற்றினை யெல்லையாகக் கூறிப் பாயிரஞ் செய்தமையின், சகரர் வேள்விக் குதிரை நாடித் தொட்ட கடலகத்துப் பட்டுக் குமரி யாறும் பனிநாட்டோடுகெடுதற்கு முன்னையதென்பதூஉம்," எனப் பேராசிரியர் கூறியதை நோக்கின்; இந்நூல் பாரதத்துக்கு முற்பட்டதாகிய இராமாயணத்துக்கும் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட இயற்றப்பட்டதாம் எனக் கூறுதற்கு இடந் தருகின்றது. பாரதத்துக்கு

இராமாயண முற்பட்டதாம் என்பதனை இராமாயணத்தின் சரித்திரம் பாரதத்திற் கூறப்படுதலானும், பாரதத்தின் செய்தி யொரு சிறிதும் இராமாயணத்திற் கூறப்படாமையானும் நன்குணர்தலாம்.

இராமரது கட்டளைப்படி இலக்குமணர் சீதாப் பிராட்டியாரைக் கானில் விட்டு வந்த போது வால்மீக முனிவர் அப்பிராட்டியாரைப் பேணி வந்தனர் எனவும், அம்முனிவர் தாமியற்றிய இராம சரிதத்தை அப் பிராட்டியாரின் திருவகட்டிற் றோன்றிய இலவ குசலவர்களுக்குக் கற்பித்து அவர்களால் அதனை இராமர் கேட்கும்படி செய்வித்தனர் எனவுங் கூறப்படும் வரலாறுகளால் அம் முனிபுங்கவர் இராமர் காலத்தவர் என்பது உறுதியாம். அவர் தாமியற்றிய இராமாயணத்திற் கிட்கிந்தா காண்டத்தில் கபாட புரத்தைக் குறித்திருக்கின்றனர். குமரி யாறு பனிநாட்டோடு கெட்ட பின் அக்காலத்திருந்த பாண்டியன் கபாட புரத்தைத் தலைநக ராக்கி அதன்கண் இடைச் சங்கத்தை ஏற்படுத்தினன் என்பது பலரும் ஒப்பக் கொண்டதொரு செய்தி யாகும்; ஆதலின், இராம சரிதம் நிகழ்ந்த காலம் இடைச் சங்கக் காலமேயாம் எனக் கொள்ளுதலாகும்.

இனித் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரஞ் செய்த பனம்பாரனர், கிழக்கினும், மேற்கினுங் கடல்களே எல்லை யாதலின் அவற்றை விட்டு, வடக்கினும், தெற்கினும் தமிழின் வேறாகிய மொழிகள் வழங்கும் நில முண்மையின், ‘வடவேங்கடந் தென்குமரி’ என அவ்விரண்டெல்லைகளையே விதந்து கூறினர் என்பது

நன்கு பெறப்படுதலானும், 'குமரி' என்பது குமரி யாறு என்பதே யாவருக்குந் துணிபா மாதலானும், தொல்காப்பியம், குமரி யாறு பனி நாட்டோடு கெடுதற்குமுன்னே இயற்றப்பட்டதாம் என்பதும், அஃது இராமாயணத்துக்கு முற்பட்டதாம் என்பதும் நன்கு விளங்குதல் காண்க. அது முதற் சங்கத்தின் இறுதிக் காலமேயாம் என்பது முற் கூறியவற்றானும், ஈண்டுக் கூறியவற்றானும் நன்கு விளங்குத லறிக.

அன்றியும், பேராசிரியர், 'அதுதானும் பனம்பாரனார் வடவேங்கடந்தென்குமரி எனக் குமரி யாற்றினை யெல்லையாகக் கூறிப் பாயிரஞ் செய்தமையின், சகரர் வேள்விக் குதிரை நாடித் தோட்ட கடலகத்துப் பட்டுக் குமரி யாறும், பனி நாட்டோடு கெடுதற்கு முன்னைய தென்பதூஉம்', என்று கூறியதை நோக்கின், சகரர்கள், வேள்விக் குதிரை நாடி நிலம் போழ்ந்தனர் என்னும் வரலாற்றினுக்கும், குமரியாறு பனிநாட்டோடு கெட்டழிந்தது என்னும் வரலாற்றினுக்கும் யாதேனும் இயைபிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

இந்நூலின் முதனூல்

இந்நூலின் முதனூல் அகத்திய மாகும். இதனை,

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்ந்த தொல்காப் பியன்றன்
ஆணையிற் றமிழுணர்ந் தோர்க்குக் கடனே,"

எனப் பல்காப்பியத்தினும்,

"வீங்கு கடலுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு வரம்பாகென

வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை யகத்திய னென்னும்
அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்,"

எனப் பன்னிரு படலத்தின் பாயிரத்தினும்,

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த,"

எனப் புறப்பொருள் வெண்பா மாலையின் பாயிரத்தினும் வருவனவற்றா னுணர்க.

சிலர் இவற்றை யெல்லாங் கருதாது, சிறப்புப் பாயிரத்துள், 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்,' என்றது கொண்டு, ஐந்திர வியாகரணமே இந்நூற்கு முதனூல் என்பர்.

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி," எனவும்,

"செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு,"

எனவும் அச்சிறப்புப் பாயிரத்துட் கூறப்பட்டிருத்தலானும், வட மொழி யிலக்கண மாகிய ஐந்திர வியாகரணம் செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய செந்தமிழ் நாட்டிற்கு இயைந்த வழக்கோடு பொருந்திய

விலக்கண மன்று ஆதலானும், அங்ஙனம் பொருந்திய விலக்கணம் அகத்தியமே யாகலானும், தொல்காப்பியனாரும் அவரோடொரு சாலை மாணுக்கராகிய மற்றைப் பதினொருவருங் கூடி இயற்றிய பன்னிரு படலத்துப் பாயிரச் சூத்திரத்திற் கூறியனவற்றை யவர்தம் போலி யுரைகள் மறுத்தற் குரிய ஆற்ற லுடையன வல்ல வாகலானும், தொல்காப்பியத்தின் உரை யாசிரியர்க ளாகிய இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர்க்கு அஃது உடன்பா டன்மையானும் அவருரை வெற்றுரையே யாமெனவிடுக்க.

ஆயின், 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்,' என்றது யாது பயன் கருதி யெனின், அவர் தமிழையே யன்றி வடமொழியையும் நன்கு பயின்றிருந்தனர் என்பதனை யுணர்த்துதற் பயன் கருதி யென்க.

வட மொழிப் புலவர் யாவரும் பாணினி வியாகரணத்தை மிகவும் சிறப்பித்துக் கூறுநிற்ப, அதனையும் பயிலாதொழிந்த தென்னை யெனின், அக்காலத்துப் பாணினி வியாகரணமே செய்யப்படவில்லை யென்க.

பாணினி வியாகரணத்தை யியற்றிய பாணினி முனிவர், மௌரிய வமிசத் தரசனாகிய சந்திர குப்தனுக்கு முன் மகத நாட்டின் அரசனா யிருந்த நந்தனுடைய சமுகத்துச் சிறந்து விளங்கிய பேரறிவாளர்களாகிய வர்ஷர், உப வர்ஷர் என்னும் வட மொழிப் பெரும்புலவர் இருவருள், வர்ஷர் என்பவருடைய மாணவ ராவர். அவ்வரசனுடைய காலம் கி-மு 320-க்கும், கி-மு 400-க்கும் உட்பட்டதாகும்.

அக்காலமே கிரேக்க அரசனுகிய அலெக்சாந்தர் இந்தியாவின்மீது படை யெடுத்து வந்த கால மாகும். ஆகையால், அவ்வரசனது சமுகத்து வித்துவான்களுள் ஒருவராகிய வர்ஷரது காலமும் அதுவேயாம். ஆகவே, அவருடைய மாணவர் காலமும் அதுவேயாம்; ஆகலானும், நிகழும் கி-பி-வருடம் 1927 ஆகலானும் பாணினி முனிவரா லியற்றப்பட்ட பாணினி வியாகரணத்தின் காலம் இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூற்றறுபது வருடங்களுக்கு மேற்பட்டிராது. தமிழ்ப் பிரயோக விவேக நூலாசிரியர், 'மயேச்சுரன் பாணினிக் காசிரியன்,' என அந்நூலின் முதற் சூத்திர உரையில் எழுதி யிருக்கின்றனர். அவர் கூறிய மயேச்சுரன் முக்கண் மூர்த்தியே எனக் கோடற்கு ஒரு வரலா றுண்டு. அது :—

'வர்ஷரிடம் பலமாணவர்கள் கலைபயின்றுவந்தார்கள். அவர்களுள் ஒருவராகிய பாணினி முனிவர் நுண்ணறிவில்லாதாராய் இருந்தமையின், வர்ஷருடைய மனைவியார் பாணினி முனிவரைத் தாழ்வாகிய தொழில்களைச் செய்ய ஏவினர். அஃதாற்ருத பாணினி முனிவர் பனிவரைப் பாங்கரின் எய்தி உமையின் கொழுநரை உளத்திற் கொண்டு கடுந்தவம் புரிந்தனர். அவ்விறைவர் மகிழ் கூர்ந்து, பாணினி முனிவர்முன் ருேன்றி, அவருக்குப் புதியதொரு வியாகரண மளித்தருளினர். அதுவே பாணினி வியாகரணம் என வழங்குவதாயிற்று' என்பது. இது கருதியே போலும்,

"விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கண மேனுள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்

திடமு றுத்தியம் மொழிக்கெதி ராக்கிய் தென்சொன்
மடம கட்காங் கென்பது வழுதிநா டன்றே."

என்று திருவிளையாட னூலாசிரியரும்,

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்து
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற் [ம்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்."

என்று காஞ்சிப்புராண நூலாசிரியருங் கூறுவராயினர்.

அவ்விறைவர் மலையரையன் செல்வியாரை மணக்கத் தொடங்கிய போது அகத்திய முனிவருக்குத் தமிழிலக்கண மருளி அவரைத் தென்னாட்டிற் கனுப்பினர் என்னும் வரலாற்றினையும் அப்புலவர்கள் மேற்காட்டிய செய்யுட்களிற் கூறி யிருக்கின்றார்கள். ஆனால் அவ்விறைவர் பாணினிக்கு வடமொழி யிலக்கண மருளிய வரலாற்றினையே அவ்வாசிரியர் இருவரு முதற்கண் கூறியிருக்கின்றனர். அவர்கள் அங்ஙனங் கூறி யிருத்தற்குக் காரணம், வட மொழி தேவர்களின் மொழி என்னுங் கருத்தோ? மற்றியாதோ? அறியேம்.

பாணினி யிலக்கணம் தோன்றியவுடன் ஐந்திர வியாகரணம் அழிந்துவிட்டது என்பதற்கான வரலாறும் ஒன்றுண்டு. அது:

'பாணினி முனிவர் மயேச்சுரரிடம் வட மொழி இலக்கணம் பெற்றுக்கொண்டு வந்து வர ருசியுடன் ஏழுநாட்கள் வாதமிட்டு எட்டாம் நாளில் தோற்றனர். அப்போது கண்ணுதலார் வானின்கண் இருந்து உலக முழுதும் அஞ்சும்படி ஓர் உங்காரம் செய்தனர். அதனால் வர ருசியும், பூமியின்கண் ஐந்திர வியாகரணங்

கற்றிருந்த மற்றைப் புலவர்களும் அந்த வியாகரண ஞானத்தை இழந்துவிட்டனர். பிறகு வாருசி பாணினி முனிவருக்குத் தோற்றனர். அதனால், வரருசி பனிவரையை யடைந்து, கண்ணுதற் பெருமானை ரைக் கருதித் தவம் புரிந்தனர். அப்பெருமானார் வரருசியின் முன் றோன்றி, முன் பாணினி முனிவருக்கு அருளிய இலக்கணத்தையே அவருக்கும் அருளி, அதில் உள்ள குறைகளை முடிக்கும்படி கட்டளையிட் டருளினர். அவரும் அங்ஙனமே அவ்விலக்கணத்தை முடித்தனர்,' என்பது.

இந்நூல் வழங்கும் எல்லை

இந்நூற்குக் கூறும் எல்லையே 'ஒருமொழி யொழி தன் னினங்கொளற் குரித்தே' என்பதனான் அக் காலத்து மற்றைத் தமிழ் நூற்களுக்கு மாம் எனக் கொள்க.

இந்நூலுக்குச் சிறப்புப் பாயிர மியற்றிய பனம் பாரனார் திருவேங்கடத்துக்கு வடக்கினும், குமரி யாற்றுக்குத் தெற்கினும் வேறு மொழிகள் வழங் கும் நில முண்மையின், 'வடவேங்கடம் தென்குமரி' யென வடக்கெல்லையும், தெற்கெல்லையுங் கூறினர். கிழக்கினும், மேற்கினும் கடல்களே எல்லையா யிருத்த லின், எல்லை கூறிற்றிலர். கிழக்கினும், மேற்கினுங் கடல்களே யெல்லையா மென்பதனை,

> " வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
> தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
> வரைமருள் புணரியொடு பொருது கிடந்த

நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே.''

என்று சிறு காக்கை பாடினியார் கூறியதனு லறிக.

சிறுகாக்கை பாடினியார் நூல் செய்த காலத்துக் குமரி யாற்ருேடு பனை நாடுகள் கடலின் வாய்ப் பட்டமையின், அவர் தெற்கினுங் கடலையே எல்லை யாகக் கூறினுர்.

இங்குக் கூறியவற்ருல் தொல்காப்பியஞ் செய்யப்பட்ட காலத்தில் நெல்லூர் ஜில்லாவின் தென் கோடியும்; சித்தூர், வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், திரிசிராப் பள்ளி, மலையாளம், நீல கிரி யென்னும் ஜில்லாக் களும்; தென்கன்னடம் ஜில்லாவின் முக்காற் பங்கும்; மைசூர் இராச்சியத்தின் தென் பாதியும்; திருவாங் கூர், கொச்சி, புதுக்கோட்டை என்னும் இராச்சியங் களும்; கடலின் வாய்ப்பட்ட குமரி யாற்ருேடு கூடிய பனை நாடுகளும் தமிழ் வழங்கு நிலங்களாகவே இருந் தன என்பதும், அக்காலத்து இந்நிலங்களில் வேறு மொழிகள் வழங்கியதில்லை யென்பதும் நன்கு விளங்குகின்றன. மலையாள ஜில்லா முதலிய விடங் களில் வழங்கும் மலையாள மொழி மிகவும் சமீப காலத்தில் உண்டானது என்பது யாவரும் ஒப்புக் கொண்டதொரு செய்தியே. இப்பொழுது தமிழ் வழங்கும் ஜில்லாக்களி லுள்ள தமிழ் மக்களின் தொகை இரண்டு கோடி யாகும். முற் கூறிய விடங் களில் எல்லாந் தமிழ் மக்களே இருந்தார்கள்; பிறகு அவர்களிற் சிலர் மலையாளம் முதலிய மொழிகளுக்

குரியவர்களாய் மாறினர்க ளென்பதும், குமரி யாற்றேடு பலநாடுகள் கடலின்வாய்ப் பட்டன என்பதும் நன்கு விளங்குதலின், அக்காலத்துத் தமிழர்களின் ருெகை நான்கு கோடிக்குக் குறையாம லிருந்திருக்கும் என்று கோடலாம்.

இங்குக் கூறியவற்ருல் தமிழ் மொழி, தொல்காப்பியஞ் செய்யப்பட்ட காலத்து வடக்கில் திருவேங்கடமும், தெற்கிற் குமரி யாறும், கிழக்கினும் மேற்கினும் கடலு மாகிய எல்லேக்குட்பட்ட முற்கூறப்பட்ட நிலங்களிற் சற்றேறக் குறைய நாலு கோடி மக்களால் வழங்கப்பட்டு வந்தது என்பது நன்கு விளங்குத லறிக.

நூல் நுதலிய போருள்

இந்நூல் எழுத்ததிகாரம், சோல்லதிகாரம், போருளதிகாரம் என்னு மூன்றதிகாரங்களே யுடையது.

அவற்றுள், எழுத்ததிகாரம் :—1. நூன் மரபு, 2. மொழி மரபு, 3. பிறப்பியல், 4. புணரியல், 5. தொகை மரபு, 6. உருபியல், 7. உயிர் மயங்கியல், 8. புள்ளி மயங்கியல், 9. குற்றியலுகரப் புணரியல் என்னும் ஒன்பது பகுப்புக்களேயும் ;

சோல்லதிகாரம்:—1. கிளவியாக்கம், 2. வேற்றுமையியல், 3. வேற்றுமை மயங்கியல், 4. விளி மரபு, 5. பெயரியல், 6. விணயியல், 7. இடைச்சொல் லியல், 8. உரிச்சொல்லியல், 9. எச்சவியல் என்னும் ஒன்பது பகுப்புக்களேயும் ;

போருளதிகாரம் :—1. அகத்திணை யியல், 2. புறத்திணை யியல், 3. களவியல், 4. கற்பியல், 5. பொருளி

யல், 6. மெய்ப்பாட் டியல், 7. உவம வியல், 8. செய்யு ளியல், 9. மரபியல் என்னும் ஒன்பது பகுப்புக்களையும் உடையன. இந்நூலின் முதலில் இவரோ டொரு சாலை மாணுக்க ராகிய பனம்பாரனூரால் இயற்றப் பட்ட சிறப்புப் பாயிர மிருக்கின்றது.

அவற்றுள், எழுத்ததிகாரத்தைப் பற்றியும், சொல் லதிகாரத்தைப் பற்றியும் ஈண்டுக் கூற வேண்டுவ தின்று, கல்வித் துறையிற் பழகும் சிறு மாணவரும் அவற்றைப்பற்றிச் சிறிதேனும் உணர்ந்திருப்பா ராத லின். இனிப்பொருளதிகாரத்தைப் பற்றி யீண்டுச் சில கூறுத லமைவுடைத்தாம், அதன் தன்மையை யுணர்ந் திருப்பார் மிகச் சிலரே யாகலின்.

பொருளதிகாரத்தின் பகுப்புகள் ஒன்பதனுள் ஐந் தாவதாகிய பொருளியலிற் சொல்லுணர்த்தும் பொரு ளும், தொடர்மொழி யுணர்த்தும் பொருளுங்கூறினர்.

இதனை, 'இவ்வோத்துப் பொருளிலக்கண முணர்த் தினமையிற் பொருளிலக்கண மென்னும் பெயர்த்தா யிற்று; ஏனை ஒத்துக்களும் பொருளதிலக்கணமன்றே யுணர்த்தியது ? இதற்கிது பெயராயவா றென்னை யெனில், சொல்லதிகாரத்திற் கூறிய சொற்களை மரபி யலின் இரு திணை யைம்பான் இயனெறி வழாமைத் திரிபில் சொல்லென்பாராதலின், அவை யீண்டுத் தம் பொருள் வேறுபட் டிசைப்பினும் பொருளாம் என வும், இப்பொருளதிகாரத்து முன்னர்க் கூறிய பொருள்களிற் பிறழ்ந்திசைப்பனவும் பொருளாம் எனவும் அமைத்துச் சொல்லுணர்த்தும் பொருளும், தொடர்மொழி யுணர்த்தும் பொருளும் ஒருங்கே கூற

விற் பொருளிய லென்றூர்,' என இவ்வியலின் முதலிற் கூறப்பட்டிருக்கும் உரைப்பாயிரத்தைக் கண்டுணர்க.

ஆருவதாகிய மெய்ப்பாட்டியலில் உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப் படுவதோர் ஆற்ருன் வெளிப்படுதலாகிய பொருட்பாடு கூறினர்.

ஏழாவதாகிய உவம வியலில், ' ஒரு பொருளோ டொரு பொருளினை ஒப்புமை கூறுதல்' ஆகிய உவம விலக்கணங் கூறினர்.

எட்டாவதாகிய செய்யு ளியலிற் செய்யுளிலக்கணங் கூறினர்.

ஒன்பதாவதாகிய மரபியலில் சொல்லதிகாரம்— கிளவியாக்கத்து வரையறுத்து ஓதப்பட்ட மரபும் செய்யு ள்ியலுள் வரையறுத்து ஓதப்பட்ட மரபும் அல்லாத இரு திணைப் பொருட் குணனுகிய இளமை யும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய மரபும், உயர் திணை நான்கு சாதியும் ப்ற்றிய மரபும், அஃ றிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவை பூற்றி வரும் உலகியன் மரபும், நூன் மரபும் ஆகிய விம். மரபுகளைப் பற்றிக் கூறினர்.

இதனை, "இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மரபிய லென்னும் பெயர்த்து. இதனுனே ஒத்து நுதலியதூஉ மரபு உணர்த்துதல்என்பது பெற் ரும். மரபு என்ற பொருண்மை யென்னை யெனின், கிளவி யாக்கத்து மரபென்று வரை யறுத்து ஓதப் பட்டனவும் செய்யு ளியலுள் மரபென்று வரை யறுத்து ஓதப்பட்டனவு மன்றி இருதிணைப் பொருட்

குணனுகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறையும், உயர் திணை நான்கு சாதியும் பற்றிய மரபும் அஃறிணைப் புல்லு மரனும் பற்றிய மரபும் அவை பற்றி வரும் உலகியன் மரபும், நூன்மரபும் என இவையெல்லா மரபெனப்படுமென் பது,'' என இவ்வியலின் முதலிற் கூறப்பட்டிருக்கும் உரைப் பாயிரத்தைக் கண்டுணர்க.

இனி, முத னுன்கியல்களில் அற முதல் நான்கு பொருள்களையும் அகமும், புறமும் என் இரு வகையி னமைத்து, முதலாவதாகிய அகத்திணை யியலுள் அகப் பொருட்குத் துணையாதற்றன்மையவாகிய முதல்,கரு, உரிப் பொருள்களைக் கூறி, இரண்டாவதாகிய புறத் திணை யியலுள் அறம், பொருள், வீடு என்னும் மூன்று பொருளையும், மூன்ருவதாகிய களவியலினும், நான்கா வதாகிய கற்பியலினும் இன்பப் பொருளையுங் கூறினுர்.

இதனை, ''அகத் திணைக்கண் இன்பப் பொருளையும், புறத் திணைக்கண் மூன்று பொருளையும் உணர்த் துப,'' எனவும், ''வெட்சி முதலா வாகை யீருக அற னும், பொருளும் பயக்கும் அரசியல் கூறி, அவற்றது நிலை யின்மை காஞ்சித் திணையுள் கூறவே, அறனும் பொருளும் அவற்றின் நிலையின்மையுங் கூறினுர். அறு வகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும் (பு-இ-20-சூ) என் னுஞ் சூத்திரத்து இல்லறமும், துறவறமுங் கூறினுர். இந்நிலையாமையானும், இவற்ருனும் வீட்டிற்குக் காரணங் கூறினுராயிற்று,'' எனவும் நச்சினுர்க்கினியர் கூறிய வுரையானும், ''வீடென்பது சிந்தையு மொழி யுஞ் செல்லா நிலைமைத் தாதலின், துறவற மாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகை

யாற்கூறப்பட்டமையின் நூற்களாற் கூறப்படுவனஎனை மூன்றுமே,'' என்று பரிமேலழகர் கூறிய திருக்குறள் உரைப் பாயிரத்தானும் நன்குணர்தலாம். இவ்விலக் கணம் பற்றியே மேலோர்கள் இலக்கியங்கள் செய் திருக்கின்றார்கள். இம்முறை பற்றியே திருக்குறளு முப்பாலாக வகுக்கப்பட் டிருக்கின்றது. இதனை உய்த்துணராதார் திருக்குறள் முப்பாலாக வகுக்கப் பட்டது வட மொழி மதம் பற்றி யென்பர். அது பொருந்தாது.

ஆயின், இந்நான்கு பொருள்களின் விடயத்தில் வட மொழி வாணர்க்கும், தமிழ் மொழி வாணர்க்கு முள்ள வேறுபாடு என்னை யெனின், வடமொழியாளர் மாந்தர்களின் ஒழுகலாறு நிகழு நிலையினைப் பிரமசரி யம், கிருகத்தம், வானப் பிரத்தம், சந்நியாசம் என நான்காக வகுத்தனர். தமிழ் மொழியாளர் இல்லறம், துறவறம் என இரண்டாக வகுத்தனர்.

வட மொழியாளர் அவ்வொழுக்கத்தினைச் சாதி பற்றி வகுப்பார்.

தென்மொழியாளர் அங்ஙன மின்றி யெல்லார்க்கு மொப்ப முடிந்த மக்க ளியற்கை பற்றி வகுப்பார்.

வட நூலார் அறமுதல் நாற் பொருளையும் தனித் தனிக் கூறிச் சென்றனர்.

தமிழ் நூலார் அவரினும் ஆழ்ந்து செல்வாராய், அவற்றுள் அகத்தே நிகழ்வது எது? புறத்தே நிகழ்வன எவை? என்றாய்ந்து, அவ்வகம், புறம் என் னும் இடம் பற்றி அவற்றை யிரண்டாக அடக்குவர்.

உலக வியற்கையையும், உலகத்தின் ஒழுக லாற்றி னையு நன்கு கவனிப்பார்க்குத் தமிழ் மொழி வாணர் கூறியதே எற்புடையதாம் என்பது நன்கு விளங்கும்.

பண்டைத் தமிழ் மக்களின் இத்தகைய நற்பே ரியல்களை நன்கு விளக்குவதாகிய வித்தொல்காப்பிய மென்னும் இயற்றமிழ் நூல், என்று நிலை நின்று விளங்குவதாக வென்று தமிழ் மக்களும் நடு நிலைமை யிற் றிறம்புத வில்லாத மற்றை அறிஞரும் வாழ்த்து தற்குரியவ ராவர். இந்நூலின் சூத்திரங்களுட் சில வற்றை யடியிற் காண்க:

“எழுத்தெனப் படுப,
அகரமுத னகரவி றுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே.”

“அவைதாங்,
குற்றிய லிகரங் குற்றிய லுகர மாய்தமென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.”

“நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்.”

“கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே.”

எழுத்ததிகாரம்—நூன் மரபு.

“உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனா ரவரல பிறவே.
ஆயிரு திணையி னிசைக்குமன் சொல்லே.”

“ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.”

"ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொ லஃறிணை யவ்வே."

"பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்."

சொல்லதிகாரம்—கிளவி யாக்கம்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப."

"அவற்றுள்,
நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே."

"முதல்கரு உரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாட்லுட் பயின்றவை நாடுங் காலை."

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே."

பொருளதிகாரம்—அகத்திணை யியல்.

"அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
யுட்குவரத் தோன்று மீரேழ் துறைத்தே."

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புலக்களவி
னாதந் தோம்பன் மேவற் றாகும்."

பொருளதிகாரம்—புறத்திணை யியல்.

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்றல் லெட்டனுட்
டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே."

பொருளதிகாரம்—களவியல்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே."
"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான."
"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமு முண்டே."
"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப."

பொருளதிகாரம்—கற்பியல்.

"இசைதிரிந் திசைப்பினு மியையுமன் பொருளே
அசைதிரிந் தியலா வென்மனார் புலவர்."

பொருளதிகாரம்—பொருளியல்.

"பண்ணை தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானான் கென்ப."

பொருளதிகாரம்—மெய்ப்பாட்டியல்.

"வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்."

பொருளதிகாரம்—உவம வியல்.

"குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே."

பொருளதிகாரம்—செய்யு ளியல்.

"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்

கன்றும் பிள்ளையு மகவு மறியுமென்
றென்பதுங் குழவியோ டிளமைப் பெயரே.''
பொருளதிகாரம்—மரபியல்.

அவிநயம், நத்தத்தம், காக்கை பாடினியம்.

இனி, அகத்தியர் மாணவருள் அவிநயர், நத்தத்தர், காக்கை பாடினியார் என்பவர்களும் முறையே அவிநயம், நத்தத்தம், காக்கை பாடினியம் எனத் தத்தம் பெயரால் யாப்பிலக்கணஞ் செய்திருக்கின்றனர். இவர்கள் தமிழுக்குரிய ஐந்திலக்கணங்களுள் யாப்பிலக்கணம் நீங்கலாக மற்றை இலக்கணங்களைச் செய்துள்ளார் என்பதும் செய்திலார் என்பதுந் தெரியவில்லை. இவர்கள் செய்துள்ள யாப்பிலக்கணங்களினின்றும் பல சூத்திரங்கள், யாப்பருங்கலக் காரிகையின் உரையினும், யாப்பருங்கலத்தின் விருத்தி யுரையினும் பல விடங்களினு மேற்கோள்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அம்மேற்கோட் சூத்திரங்களுள் அவரவர் சூத்திரங்களை வேறு வேறாகத் திரட்டினால், தனித்தனி அவர்களுடைய யாப்பிலக்கணங்களிற் பெரும்பகுதிகள் கிடைக்கக் கூடியனவா யிருக்கின்றன. அங்ஙன மேற்கோளாகக் காட்டப்பட்ட சூத்திரங்க ளன்றி அந்நூற்கள் முழுதும் தனியாகக் கிடைக்கும், கிடையா என்பன தெரியவில்லை. அந்நூற்களின் சூத்திரங்களிற் சிலவற்றை முறையே அடியிற் காண்க.

'' தத்தம் பாவினத் தொப்பினுங் குறையினும்
ஒன்றொன் றொவ்வா வேற்றுமை வகையால்
பாத்தம் வண்ண மேலா வாயிற்
பண்போல் விகற்பம் பாவினத் தாகும்.''

" குறட்பா விரண்டடி நால்வகைத் தொடையான்
முதற்பாத் தனிச்சொலி னடிமூ யிரண்டு
விகற்பி னடப்பன நேரிசை வெண்பா."

" அறுசீ ரெழுசீ ரடிமிக வரூஉ
முறைமைய நாலடி விருத்த மாகும்."

" ஆய்ந்த வுறுப்பி னகவுத லின்றி
யேந்திய துள்ள லிசையது கலியே."

(அவிநயம்)

" அளபெடைத் தொடைக்கே யளபெடை யொன்றும்."

" அடியுஞ் சீரு மசையு மெழுத்து
முடிவு முதலாச் செய்யுண் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறைதல் வேண்டும்."

" தனிநிலை யளபெடை நேர்நே ரியற்றே
இறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே."

" பாவென மொழியினுந் தூக்கின் பெயரே."

" தனிநெடி றனிக்குறி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை யென்ப."

" குறிலிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை யென்ப."

(நத்தத்தம்)

" இயற்சீ ரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப மிலவாய் விரவி நடப்பின்
அதற்பெய ராசி ரியத்தளை யாகும்."

" வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே."

" இயற்சீ ரிரண்டு தலைப்பெய றம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும்."

" உரிச்சீ ரதனு ளொத்தவை யன்றிக்
கலக்குந் தளையெனக் கண்டிசி னோரே."

"வெண்சீ ரிறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன வெல்லாங் கலித்தளை யாகும்."

"இரண்டா மடியின தீற்றொரூஉ வெய்தி
முரண்ட வெதுகைய தாயினு மாகா
திரண்டு துணியா விடைநனி போழ்ந்து
கிரந்தடி நான்கின நேரிசை வெண்பா."

(காக்கை பாடினியம்)

காக்கை பாடினியார் பெண்பாலார். யாப்பருங்கலக் காரிகையின் உரையினும், யாப்பருங்கலத்தின் விருத்தி யுரையினும் இவருடைய சூத்திரங்களே மிகுதியு மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றன. யாப்பருங்கல விருத்தி யுரையில், பல இடங்களில், 'காக்கை பாடினியார் முதலிய தொல்லாசிரியர்,' என இவர் பாராட்டிக் கூறப்பட் டிருக்கின்றனர். இவருடைய சூத்திரங்கள் இன்னோசையோடு கூடி யின்பம் பயப்பனவா யிருக்கின்றன.

கடைச் சங்கம்

இனிக் கடைச் சங்கம் இருந்த இடம் இப்பொழுதுள்ள மதுரை என்ப. அச்சங்கத்து இருந்த புலவர்கள் சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடை யரனாரும், பெருங்குன்றூர்க் கிழாரும், இளந் திருமாறனாரும், மதுரை யாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரு முதலிய நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவரையுள்ளிட்டுப் பாடினார் நானூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப.

அவர்க்கு இலக்கணம் அகத்தியமும், தொல்காப்பிய மும் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந் தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, நூற்றைம் பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, பேரிசை, சிற்றிசை முதலியனவா மென்ப.

அவற்றுள், மகம்மதியரால் எரிவா யிடப்பட்டன போக எஞ்சி நின்றவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருந்தேவனார் பாரதம், இறையனார் அகப்பொருள் முதலியன.

பத்துப் பாட்டு

அவற்றுள், பத்துப் பாட்டு என்பது பத்தாகிய பாட்டுகளையுடைய தொரு நூல் எனப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர். இதி லுள்ள பத்துப் பாட்டுகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நூலாகக் கொள்ளக்கூடிய தாகும். அவை,

1. திருமுருகாற்றுப்படை, 2. பொருந ராற்றுப் படை, 3. சிறுபா ணாற்றுப்படை, 4. பெரும்பா ணாற்றுப்படை, 5. முல்லைப் பாட்டு, 6. மதுரைக் காஞ்சி, 7. நெடுநல்வாடை, 8. குறிஞ்சிப் பாட்டு, 9. பட்டினப் பாலை, 10. மலைபடு கடாம் என்பன. இவையா மென்பதனை,

“ முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய

கோல்நெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."—என்றதனு லறிக.

இவை யாவும் ஆசிரியப் பாக்களா லானவை.

இவற்றுள், திருமுருகாற்றுப்படை, பொருந ராற்றுப்படை, சிறுபா ணாற்றுப்படை, பெரும்பா ணாற்றுப்படை, மலைபடு கடாம் என்னும் ஐந்தும் ஆற்றுப் படைக ளாகும்.

ஆற்றுப் படையாவது, வண்மையின் மிக்காணுருவன்பால் பெருஞ்செல்வம் பரிசிலாகப் பெற்று வருவானொரு புலமிக்கோன் பரிசீவாரைத் தேடித் திரியும் மற்றொரு புலமிக்கோனை வழியிடைக் கண்டு, 'வறுமைப் பிணியால் வாடுறுகிற்போய், யானு முன்போல் வறுமையிற் சேர்ந்து, அளிப்பார்த்தேடி யலைதந்தோனே. பின்னர் இன்னானுழைச் சென்றேன். அவன் என்னைப் பல படியா னுபசரித்து, இப்பெருஞ் செல்வத்தினை வழங்கி, அளி செய்து அனுப்பினன். நீயும் அவனுழைச் செல்லின், அவன் உனக்கும் இவ்வகையே பரிசளிப்பன். அவனுழைச் செல்லுதற்கு வழி இஃதாம்,' என்று கூறி, அவ்வள்ளலின்பால் அவ்வறுமையாளனைச் செலுத்துத லாகும்.

ஆற்று-(பரிசில் பெற்றுச் செல்வா னொருவன், பரிசில் பெற விருப்பான் ஒருவனை வழியிடைக் கண்டு பரிசி லளிப்பான் ஒரு வள்ளலின்பாற் செல்லுதற்குரிய) வழியில், படை (அவனைப்) படுத்துதல், அதாவது செலுத்துதல்.

அது பாண ராற்றுப்படை, கூத்த ராற்றுப்படை, பொருந ராற்றுப்படை, விறலி யாற்றுப்படை, புலவ ராற்றுப்படை என ஐந்து வகைப்படும்.

1. பாண ராற்றுப் படையாவது மிக்வு முயர்ந்த மலைவழி யிடத்துத் திரிவாைெருரு பாணனைப் பரிசில் பெற்று வருவா னொரு பாணன் அங்ஙனம் வழியிற் செலுத்தியது.

இதனை, "சேணோங்கிய வரையதரிற், பாணனை ஆற்றுப் படுத்தன்று," என்பதனாலறிக (புறப்பொருள் வெண்பா மாலை-பாடாண்டிணை-கொளு-28). பாணராவார் பாடுதற் றொழிலையுடைய ஒரு வகைச் சாதியினர்.

2. கூத்தராற்றுப் படையாவது, பரிசில் பெற்றுச் செல்வானொரு கூத்தன், மற்றொரு கூத்தனை அங்ஙனம் வழியிற் செலுத்தியது. இதனை, "எத்திச்சென்ற விரவலன், கூத்தரையாற்றுப் படுத்தன்று," என்றதனாலறிக (ஷை கொளு-29). கூத்த ராவார் பார சைவர், வேளாளர் முதலியோரில் ஆடுதற்றொழில் வல்லோர்.

3. பொருந ராற்றுப் படையாவது, பரிசில் பெற்றுச் செல்வா னொரு பொருநன் மற்றொரு பொருநனை அங்ஙனம் வழியிற் செலுத்தியது. இதனை, "பெரு நல்லா னுழையீ ராகெனப், பொருநனை யாற்றுப் படுத்தன்று," என்றதனா லறிக (ஷை கொளு-30). பொருந ரென்போர் கிணை கொட்டுவோர். இவர்கள் ஒரு வகை வகுப்பினர்.

4. விறலி யாற்றுப் படையாவது, பரிசில் பெற்றுச் செல்வாளொரு விறலி, மற்றொரு விறலியை அங்ஙனம் வழியிற் செலுத்தியது. இதனை, "திறல்வேந்தன் புகழ் பாடும், விறலியை யாற்றுப் படுத்தன்று" என்பதனா லறிக (ஷை கொளு-31). விறலியாவாள் ஆடுதற் றொழி லுடையாள்.

5. புலவ ராற்றுப்படையாவது, தேவர்களிடத்துத் தானுன்னியதை முடித்துச் செல்வா னொரு புலவன், அங்ஙனந் தானுன்னியதை முடிக்க விருக்கு மற்றொரு புலவனை அத்தேவர்களிடத்துச் செலுத்தியது. இதனை "இருங்கண் வானத் திமையோருழைப், பெரும்புல வனை யாற்றுப் படுத்தன்று," என்றத னாலறிக (ஷை கொளு-42). "உலவா வூக்கமொ டுன்னியது முடிக்கும், புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே," என்னும் சூத்திரமும் இக்கருத்துப் பற்றியதே. (இது பன்னிரு படலத்துச் சூத்திர மென்ப).

இனி,

"உலவா வூக்கமொ டுன்னியது முடிக்கும்
புலவ ராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே."

என்ற சூத்திரத்துப், 'புத்தேட்கும் உரித்து' என்றதன் எச்ச உம்மை மக்கட்கும் உரித்து என்னும் பொருளைத் தருகின்றது. இதனாற் புலவ ராற்றுப்படை மக்களைப்பற்றிப் பாடப்படுவதும், தேவரைப்பற்றிப் பாடப்படுவதும் என இரு வகையின தாம்.

அவற்றுள், மக்களைப்பற்றிப் பாடிய புலவராற்றுப் படைக்கு உதாரணம் புற நானூற்றிற் சில விருக் கின்றன.

"கோதை மார்பிற் கோதை யானுங்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானு
மார்கழி மலர்ந்த நெய்த லானுங்
கண்ணா றும்மே கானலந் தொண்டி
யஃதெம் மூரே யவனெம் மிறைவன்

அன்னோற் படர்தி யாயி னீயு
மெம்மு முள்ளுமோ முதுவா யிரவல
வமர்மேம் படூஉங் காலைநின்
புகழ்மேம் படுநனைக் கண்டன மெனவே.''

திணை-பாடாண்டிணை ; துறை - புலவ ராற்றுப்படை.

இது சேரமான் கோக்கோதை மார்பனைப் பொய் கையார் பாடியது.

" நாட னென்கோ வூர னென்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ
யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பி னயல
திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

திணை-பாடாண்டிணை ; 'துறை-புலவராற்றுப்படை ; இயன் மொழியுமாம்.

அவனை அவர் பாடியது.

புறநானூற்றின் நூற்று நாற்பத்தோராவது செய் யுளாகிய 'பாணன் சூடிய பசும்பொற் றாமரை,' என்னுஞ் செய்யுளின் கீழ்த் ' திணை-அது (பாடாண் டிணை) ; துறை - பாணாற்றுப்படை ; புலவ ராற்றுப் படையுமாம்,' என்று திணையின் பெயரும், துறை யின் பெயருங் காணப்படுகின்றன.

இனித், தேவரைப்பற்றிப் பாடிய புலவ ராற்றுப் படைக்கு உதாரணம் பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படை யாகும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனுர் புறத் திணை யியலில், 'தாவி னல்லிசை,' என்னு முப்பத்தாறுஞ் சூத்திரத்தில்,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெருஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்,"

என்பதனுல், கூத்த ராற்றுப்படை, பாண ராற்றுப்படை, பொருந ராற்றுப்படை, விறலி யாற்றுப்படை என நான்கு ஆற்றுப்படைகளே கூறினர். அதற்கு உரை யாசிரியர் இளம்பூரணர் கூறிய உரையாவது,

" கூத்த ராயினும், பாண ராயினும், பொருந ராயினும், விறலி யாயினும் நெறியிடைக் காட்சிக்கண்ணே யெதிர்ந்தோ ருறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளனுமக்கும் பெறலாகும் என்பதும், 'பக்கமும்' என்றதனுன் ஆற்றின தருமையும் அவனூரது பண்புங் கூறப்படும்," என்பதுமாம்.

(அவர் காட்டிய் உதாரணங்கள்)

கூத்த ராற்றுப் படைக்கு உதாரணம்

'திருமழை தலைஇய,' என்னும் பாட்டு. (இது பத்துப் பாட்டினுள் பத்தாம் பாட்டாகிய மலைபடுகடாம்).

பாண ராற்றுப்படைக்கு உதாரணம்

" பாணன் சூடிய பசும்பொற் ருமரை,"

என்னும் பாட்டு. (புறம்-141)

பொருந ராற்றுப்படைக்கு உதாரணம்

" சிலையுலா நிவந்த சாந்துபடு மார்பின்,"

என்னும் பாட்டு. (புறம்-395)

விறலி யாற்றுப்படைக்கு உதாரணம்

" மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியில்,"

என்னும் பாட்டு. (புறம்-133)

இனி நச்சினர்க்கினியர் அதனை,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்," எனவும்,

" ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்," எனவும்

வலிந்து இரு துணிபாக்கி, அவற்றுள் முதலதற்கு, " ஆடன்மாந்தரும், பாடற் பாணரும், கருவிப்பொருநரும், இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னு நாற்பாலாரும் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர் வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறு மாறு கூறிய கூறுபாடும்," எனவும், இரண்டாவதற்கு, " இல்லறத்தை விட்டுத் துறவற மாகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும், கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல் வத்தை யாண்டுந் திரிந்து பெறாதார்க்கு இன்னவிடத் தே சென்றாற் பெறலாம் என்று அறிவுறுத்தி

அவரும் ஆண்டுச் சென்று அக்கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும்," எனவும் பொருள் கூறிப், "பக்கம் என்றதனானே அச்செய்யுட்களைக் கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படை என வழங்குதலும்; ஆற்றினதருமையும் அவனூர்ப் பண்பு முதலியனவும் கூறுதலும் கொள்க," என்று விசேடங் கூறினர்.

பிறகு முறையே கூத்தராற்றுப்படை முதலிய நான்கிற்கு முதாரணங் காட்டித் தாங் கூறியபடி முருகாற்றுப் படையைப்பற்றிக் கூறத் தொடங்கி, "முருகாற்றுப்படையுள், 'புலம்புரிந் துறையுஞ் சேவடி,' எனக் கந்தழி கூறி, 'நின்னெஞ்சத் தின்னசை வாய்ப்பப் பெறுதி,' எனவுங் கூறி, அவனுறையு மிடங்களுங் கூறி, ஆண்டுச் சென்றால் அவன், 'விழுமிய பெறலரும் பரிசு நல்கும்,' எனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும் பெறக் கூறிய வாறு காண்க. இதனைப் புலவ ராற்றுப்படை என்று உய்த்துணர்ந்து கூறுவார்க்கு முருகாற்றுப்படை என்னும் பெய ரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க. இனி முருகாற்றுப்படை என்பதற்கு, 'முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தான் ஓரிரவலனை ஆற்றுப்படுத்த தென்பது பொருளாகக் கொள்க," என்று கூறினர்.

இவர் இங்ஙனம் அச்சூத்திரத்திற்கு வலிந்து பொருள் கொண்டதன் கருத்து, திருமுருகாற்றுப் படைக்குத் தொல்காப்பியமே இலக்கணம் என்று கூற வேண்டும் என்பதே.

இக்கருத்துக் கொண்டே அதனை இருதுணிபாக்கி, "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி," என்பதற்கு "நெறியிடைக் காட்சிக்கண்ணே யெதிர்ந்தோ ருறழ்ச்சியால்," என்று உரையாசிரியர் கூறிய பொருளை விடுத்து, "இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும், கண்ட காட்சி தீதென்றும் மாறு படத் தோன்றுகையினாலே," என்று யாதோரியைபு மின்றி வலிந்து பொருள் கொண்டனர்.

ஆசிரியர் தொல்காப்பியனார், சூத்திரத்துக், 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்,' என்று நான்கு ஆற்றுப்படைகளின் பெயர்களை கூறி யிருப்ப, ஐந்தாவதோ ராற்றுப்படையைச் சூத்திரத்தின் பொருளாகக் கற்பித்துக் கூறியது சூத்திரத்தோடு இயைபின்மை யாத லறிக. ஆசிரியர்க்கு அது கருத்தாயின், மற்றை நான்கு ஆற்றுப்படைகளுக்கும் பெயர் கூறினர், அதற்கும் பெயர் கூறுதிரார்; ஆதலானும், இவர் கூறிய கந்தழி யாற்றுப்படைக்கு இவர் வலிந்து கூறிய வுரையி னன்றி, அச்சூத்திரத்தினும், வேறு இலக்கண இலக்கியங்களினும் ஆதர வின்மையானும், இவர் அச்சூத்திரத்திற்குக் கூறிய வுரை யேற்புடைத் தன்றும் எனவும், கந்தழி யாற்றுப்படை என்ப தோராற்றுப்படை யின்றும் எனவுங் கொள்க.

ஆயின், திருமுருகாற்றுப்படை யென்ன ஆற்றுப் படை யெனின், புலவ ராற்றுப்படையேயாம் என்க. அது முன்னரே கூறப்பட்டது. அன்னதாயின், புலவ ராற்றுப்படை யென்பதற்கும், மேற் காட்டிய சூத்திரத்தில் விதி யில்லை யாக அது மட்டும் கோடற் குரியதாமோ எனின், அதற்கு மேற்

காட்டிய சூத்திரத்தில் விதியின் றெனினும், பன்னிரு படலத்தின்கண் அதற்கு விதி யுண்மை பெறப்படு தலானும், புற நானூற்றின்கண் புலவ ராற்றுப்படை பல வுள்ளமையானும் கோடற்குரியதேயாம் என்க.

ஆயின், நக்கீரனார் முருகப்பிரானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய ஆற்றுப்படைக்குப் புலவராற்றுப்படை எனப் பெயர் வையாது முருகாற் றுப்படை எனப் பெயர்வைத்த தென்னை எனின், அது மனிதரைப்பற்றியதாக வன்றிக் கௌமார மதத்தினர் வழிபடுங் கடவுளாகிய முருகப்பிரானைப் பற்றியதா யிருத்தலின் அதனை அப்பெயரானே வழங்கின் அப் பிரானிடத்து அன்புடையார் பலரும், உலவா வூக்க மொடு அதனை யோதித் தாமுன்னிய கருமங்களைப் பெற்றின்புறுதற்கு அது சிறந்ததொரு சாதனமாம் என்னும் கருத்தான் அங்ஙனம் பெயர் வைத்தனர் என்க. இவ்வாற்றுப்படையைப் பற்றி வழங்கும் பழையதொரு வரலாறும் இக்கருத்தினை வலி யுறுத் துத லறிக.

அன்றியும், "நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப, இன்னே பெறுதிநீ முன்னிய வினையே," என்ற அவ் வாற்றுப்படையின் 65, 66-வது அடிகளும் இக்கருத் தினை வலியுறுத்துதல் காண்க.

ஆயின் கடைச் சங்கத்தார்க்கு இலக்கணம் அகத் தியமும், தொல்காப்பியமும் என்று கூறி யிருப்ப, அவருள் ஒருவராகிய கணக்காயனார் மகனார் நக்கீரனார் பன்னிருபடலத்தின் இலக்கணம் பற்றி நூல் செய்தார் என்றல் அதனோடு மாறுபடாதோ எனின், அகத் தியமும், தொல்காப்பியமுந் தமிழுக்குரிய இலக்க

ணங்கள் யாவு நிரம்பிய இலக்கணங்களாகலின், அவர்கள் தாம் பயிலுதற்கும், பிறர்க்குப் பயிற்றற்கும் ஏற்புடையன என அவற்றைக் கொண்டனர் என்பதே அதன் கருத்தாகலானும், பன்னிருபடலத்தின் இலக்கணம் பற்றியுஞ் செய்யுள் செய்திருக்கின்றன ராகலானு மாறுபடாதென்பது. கடைச் சங்கத்தார் அங்ஙனம் பன்னிரு படலத்தின் இலக்கணம் பற்றிச் செய்த செய்யுட்கள் வருமாறு:

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன்ஞாலந்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
யொருதா மாகிய வுரவோ ரும்பல்!
ஒன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாகநின் னாயு டானே
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை
நுண்ணாரற் பருவராற்
குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதின்
மல்லன்மூதூர் வயவேந்தே!
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினு
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
யொருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
றகுதி கேளினி மிகுதி யாள!
நீரின் றமையா யாக்கைக் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
யுண்டி முதற்றே யுணவின் பிண்ட
முணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே

வித்திவா ரேக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளு
மிறைவன் றாட்குத வாதே யதனு
லடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே."

திணை-பொதுவியல் ; துறை-முதுமொழிக் காஞ்சி.

(பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுல வியனார் பாடியது. புறம் 18-ம் செய்யுள்).

"நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து
தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்த
ரெல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானன்
முண்டகக் கோதை யொண்டொடி மகளி
ரிரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறு
மோங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விராஅய்
முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயுந்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய
வோம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போரிற் சேக்கும்

பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலைஇயர்நின் னாண்மீ னில்லாது
படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே
நின்னொடு, தொன்று மூத்த வுயிரினு முயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
னுடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
விரவன் மாக்க ளீகை நுவல
வொண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி பெரும! வாங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை
மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே."

திணை-பொதுவியல்; துறை-பொருண்மொழிக் காஞ்சி.

(பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடி கிழார் பாடியது. புறம் 24-ம் செய்யுள்).

"சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
யுரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை போலமாய்ந் திசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!

தேய்த லுண்மையும் பெருக லுண்மையு
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையு
மறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லை யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே."

திணை-பொதுவியல் ; துறை-முதுமொழிக் காஞ்சி.

(சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடியது. புறம் 27-ம் செய்யுள்).

இருபத்தெட்டு, இருபத் தொன்பதாஞ் செய்யுட்களுக்குந் திணையும், துறையும் அவைகளே. இவையும் அவனை அவர் பாடியவே.

" தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பன நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீத
றுய்ப்பே மெனினே தப்புந பலவே."

திணை-பொதுவியல் ; துறை-பொருண் மொழிக் காஞ்சி.

(இது, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது. புறம்-189ம் செய்யுள்). இவரே திருமுருகாற்றுப் படை யாசிரியரு மாவர். புற நானூற்றில் இங்ஙனம் பொதுவியலின்படி அமைந்த பாக்கள் எழுபதுள.

ஈண்டுக் காட்டியாங்குப் பொது வியல், என ஒரு பகுதியை ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்டிலர் என்பதனைத் தொல்காப்பியம் புறத் திணை யியலைக் கண்டுணர்க. இங்குக் காட்டிய துறைகளின் பெயரும் தொல்காப்பியத்துக் காணப்படாமை மேற்படி யிய லிற் காஞ்சித் திணையைக் கண்டறிக.

ஆயினுமாக; இத்திணையும் துறையும் அகத்தியத்து இருக்கக்கண்டனவா யிருக்கலாம் எனக் கொள்ளுத லமையு மெனின், அகத்தியத்தின் புறத்திணை யிலக் கணம் தொல்காப்பியத்தின்படி ஏழு திணைகளை யுடையதாயிருந்த தென்றேனும், பன்னிரு படலம் போல் பன்னிரு திணைகளாக இருந்த தென்றேனுங் கூறுதற்கு யாதோ ராதாரமு மின்மையின், அங்ஙனங் கொள்ளுதல் வலியுடைய தன்றென்க. கொள்ளினும், யான் கூறியன மற்றும் வலியுடையனவாத லறிக. எங்ஙன மெனின், பன்னிருபடலம் போலவே அகத் தியத்துப் புறப் பொரு ளிலக்கணமும் பன்னிரு பகுதிகளாகவே பகுக்கப்பட்டிருந்தது எனவும், துறைகளும் அதிற் போலவே அமைந்திருந்தன என வும் அதனாற் கொள்ள வரும் ஆதலின் என்பது.

முல்லைப் பாட்டு என்பது:—தலைவன் பிரிந்து வருந் துணையும் ஆற்றி யிருத்தலாகிய முல்லை ஒழுக்கத்தைப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டது. இதன் விளக்க மெல்லாம் அதன் முகப்பிற் காண்க.

மதுரைக் காஞ்சி என்பது:—ஒருவர்க்கு வீடு பேற் றின்கண் மனஞ் செலற்குப் பல்வகையா யுள்ள இவ் வுலகப் பொருள்களின் நிலையாமையைக் கூறுவதாகிய

காஞ்சித் திணைப் பொருளமையப் பாடப்பட்டது. காஞ்சித் திணை என்பது, தொல்காப்பியத்தின்படி, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் புறத் திணைகள் ஏழனுள் ஒன்று.

நெடுநல் வாடை என்பது, பொன்றிணிதோளன் போர்வேல் வலவனுகிய தலைவன் போர்மேற் செல்லுதற்குரிய கூதிர், வேனில் என்னும் இரண்டு பருவங்களில் கூதிர்ப் பருவத்தே போர்மேற் சென்று பாசறைக்கண் தங்கி யிருந்தானாக, அவன் பிரிவினால் தலைவி வருந்துத லாகிய உரிப்பொரு ளமையப் பாடப்பட்டது. பிரிந்து வருந்துந் தலைவிக்கு நெடிதாய்த் தோன்றும் வாடை பெரிதும் விதந்து கூறப்படுதலின், இது நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது. இப்பாட்டு ஒருவர் பெயரைச் சுட்டிக் கூறுமையின், இதன் பொருள் அகப்பொருளாகக்கொள்ளுதற்குரிய தாமேனும், "வேம்புதலை யாத்த நோன்காழெஃகம்," (176-ம் அடி) எனப் பாண்டியருக்குரிய அடையாளப் பூக் கூறலின், அகப்பொரு ளாகாமற் புறப்பொருளாயிற்று. தலைவன் காமத்திடத்துவெற்றி எய்தலின், இது வாகைத்திணை என்னும் புறத்திணைப் பொருளது என்பது.

குறிஞ்சிப் பாட்டு என்பது, புணர்தலும் புணர்தல் நிமித்தமு மாகிய குறிஞ்சித் திணையின் பொருள் அமையப் பாடப்பட்டது. இதில் இயற்கைப் புணர்ச்சியும், பின்னிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களுங் கூறப்பட்டுள்ளன. இயற்கைப் புணர்ச்சியாவது, களவிற் புணர்ச்சி நான்கனுள் ஒன்று. களவிற் புணர்ச்சி நான்காவன, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு,

பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்பன. இதன் மற்றை விளக்கங்களை இந்நூலின் முகப்பிற் காண்க.

பட்டினப் பாலை என்பது பிரிதலும், பிரிதல் நிமித்தமு மாகிய பாலைத் திணைப் பொரு ளமையப் பாடப்பட்டது. இதிற் சோழன் கரிகாற் பெருவளத் தானது நகர மாகிய காவிரிப்பூம் பட்டினஞ் சிறப்பித்துக் கூறப்பட்டிருத்தலின், இது பட்டினப் பாலை என்னும் பெயர் பெற்றது.

அவற்றுள், முதலாவதாகிய திருமுருகாற்றுப் படையும் ஏழாவதாகிய நெடுநல்வாடையும் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியவை.

இவற்றுள், திருமுருகாற்றுப்படை முருகப் பிரானைப் பற்றிப் பாடியதென்பது முன்னரே கூறப் பட்டது. இது 317 அடிகளை யுடையது. நெடுநல் வாடை பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியது. இது 188 அடிகளை யுடையது. இவ்விரண்டினின்றும் சில அடிகளை அடியிற் காண்க :

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பாரரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்."

—திருமுருகாற்றுப்படை

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
வார்கலி முனைஇய கொடுங்கோற் கோவல
ரேறுடை யினநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோட
னீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோ ளொழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாட்
புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலரப்
பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி
யிருங்களி பரந்த வீர வெண்மணற்
செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவரக்
கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்ப்
பெயலுலந் தெழுந்த பொங்கல் வெண்மழை
யகலிரு விசும்பிற் றுவலை கற்ப,"

நெடுநல் வாடை.

இரண்டாவதாகிய பொருந ராற்றுப்படை முடத்தாமக் கண்ணியார் பாடியது. இதனால் பாடப்பட்டோன் சோழன் கரிகாற் பெருவளத்தான். இது 248-அடிகளையுடையது. இதினின்று சில அடிகளை அடியிற் காண்க:

"அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுல முன்னிய விரகறி பொருந
குளப்பு வழியன்ன கவடுபடு பத்தல்

விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
யெய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழிகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
யெண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
யண்ணா வில்லா வமைவரு வறுவாய்ப்
பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோண் முன்கை யாய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவி
னுய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்விசித் தொடையன்
மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
வணங்குமெய்ந் நின்ற வமைவரு காட்சி
யாறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை."

பொருநராற்றுப்படை.

மூன்றாவதாகிய சிறுபாணாற்றுப்படை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. இதனாற் பாடப் பட்டோன் ஏறுமா நாட்டு நல்லியக்கோடன். இது 299-அடிகளை யுடையது. இது பெரும்பாணாற்றுப்படை யிற் குறைந்த அடிகளை யுடைமையாற் சிறுபாணாற் றுப்படை என்னும் பெயர் பெற்றது. இதினின்றுஞ் சில அடிகளை அடியிற் காண்க:

"மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
யணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த

புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கற
லயிலுருப் பனைய வாகியைது நடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழி."

சிறுபா ணாற்றுப்படை.

நான்காவதாகிய பெரும்பாணாற்றுப் படையும், ஒன்பதாவதாகிய பட்டினப் பாலையும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியவை.

இவற்றுட் பெரும்பாணாற்றுப் படையினாற் பாடப்பட்டவன் தொண்டைமான் இளந்திரையன். இது 500 அடிகளையுடையது. பட்டினப் பாலையினாற் பாடப்பட்டவன் சோழன் கரிகாற் பெருவளத்தான். இது 301 அடிகளையுடையது. இவற்றினின்று சில அடிகளை அடியிற் காண்க:

" அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்தத
னுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்

மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!"

பெரும்பாணாற்றுப்படை.

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி

ணேரிழை மகளி ருணங்குணக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை.''

பட்டினப் பாலை.

ஐந்தாவதாகிய முல்லைப்பாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. இது 103 அடிகளை யுடையது. இதினின்று சில அடிகளை அடியிற் காண்க:

“ நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகிவல னேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோய்......''

முல்லைப் பாட்டு.

ஆருவதாகிய மதுரைக் காஞ்சி மாங்குடி மருதனுர் பாடியது. இதனுற் பாடப்பட்டோன் தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியன்-நெடுஞ்செழியன். ஆரியப் படை தந்த பாண்டியன் - நெடுஞ்செழியன் இவனின் வேருனவன். இது 782 அடிகளையுடையது. இதினின்று சில அடிகளை அடியிற் காண்க :

" ஓங்குதிரை வியன்பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன் றூங்கு முயர்சிமய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு
மிரவுச்செய்யும் வெண்டிங்களு
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
வோங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தா
னுயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
வுலக மாண்ட வுயர்ந்தோர் மருக !"

மதுரைக் காஞ்சி.

எட்டாவ்தாகிய குறிஞ்சிப் பாட்டு, கபிலர் பாடியது. இஃது ஆரிய வரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற் பொருட்டுப் பாடியது ; 261 அடிகளையுடையது. இதினின்று சில அடிகளை அடியிற் காண்க :

" அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
வாற்றின் வாரா ராயினு மாற்ற
வேனையுல கத்து மியைவதா னமக்கெனு."

குறிஞ்சிப் பாட்டு.

பத்தாவதாகிய மலைபடு கடாம், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இதனாற் பாடப்பட்டவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன். இது 583 அடிகளை யுடையது. இதினின்று சில அடிகளை அடியிற் காண்க :

" திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணிதழைக் கோட்டொடு"

மலைபடு கடாம்.

பத்துப் பாட்டைப் பாடினார் எண்மர். அவராவார் : நக்கீரனார், முடத்தாமக் கண்ணியார், இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், உருத்திரங் கண்ணனார், காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் - நப்பூதனார், மாங்குடி மருதனார், கபிலர், இரணியமுட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்பார்.

இவற்றாற் பாடப்பட்டார் அறுவர். அவராவார் : முருகவேள், சோழன் கரிகாற் பெருவளத்தான், ஏறுமா நாட்டு நல்லியக்கோடன், தொண்டைமான் இளந்திரையன், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்பார்.

இவருள் சோழன் கரிகாற் பெருவளத்தானை இப் பத்துப் பாட்டினுள் முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப் படையானும், உருத்திரங் கண்ணனர் பட்டினப் பாலையானும் பாடினர். இவருள் உருத்திரங் கண்ணனர் பெரும்பா ணாற்றுப் படையால் தொண்டைமான் இளந்திரையனையும் பாடினர்.

தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனர் மதுரைக் காஞ்சியானும், நக்கீரனர் நெடுநல்வாடையானும் பாடினர்.

இவற்றுள் நெடுநல்வாடையில் இப்பாண்டியன் பெயர், 'தலையாலங்கானத்துச் செருவென்ற' என்னும் அடையின்றிப் பாண்டியன் நெடுஞ் செழியன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இஃது ஆய்தற் குரியது. இப்புலவருள் நக்கீரனர் திருமுருகாற்றுப் படையான் முருக வேளையும் பாடினர். இது கடவுளைப் பற்றிய தாகலின் கால வாராய்ச்சிக்கு உதவுவ தன்று.

எட்டுத் தொகை

எட்டுத் தொகை யென்பது எட்டாகிய தொகை நூற்கள் என்னும் பொருளது. இது பண்புத் தொகை. ஈண்டுத் தொகை என்பது பொருள், அளவு, பாட்டு என்னும் இவை பற்றித் தொகுக்கப்பட்ட நூற்களை யுணர்த்தியது; தொகு-பகுதி, ஐ-செயப்படு பொருண்மை விகுதி; உகரங் கெட்டது சந்தி. இனி தொகை எண்பதனைத் தொகுக்கப்படுதல் என்னுஞ் செயப்பாட்டு வினைப் பொருளில் வந்த செய்வினைத் தொழிற் பெயர் எனக் கொண்டு அது தொழி லாகு பெயராய் மேற்கூறியவாறு பொருள் முதலியவற்றால்

தொகுக்கப்பட்ட நூற்களை உணர்த்தியது என்று கோடலுமாம். இப்பொருளில் ஐ தொழிற் பெயர் விகுதி என்க. அன்றிப் பல செய்யுட்களின் தொகுதியினாலாகிய நூற்கள் எனப் பொருள் கொள்ளின், தொகை என்பது காரண வாகு பெயராம். அதனை அளவுப்பண்புப் பெயராகக் கொள்ளின், அவ்வெட்டு நூற்களில் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து என்பவற்றிற் கன்றி மற்றை நூற்களுக்குப் பொருந்தாமை அந்நூற் பெயர்களைக் கண்டுணர்க.

அவ்வெட்டு நூற்களாவன: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித் தொகை, அக நானூறு, புற நானூறு என்பன. இவையாம் என்பதனை,

> "நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை."

என்னும் வெண்பாவா லறிக. அவற்றுள், நற்றிணை என்பது பொருளானும் குறுந்தொகை, பதிற்றுப் பத்து என்பன அளவானும், பரி பாடல், கலித் தொகை என்பன பாட்டானும், அக நானூறு புற நானூறு என்பன பொருள் அளவு என்னும் இரண்டானு மமைந்த பெயர்கள். இனி ஐங்குறுநூறு என்பது ஐந்திணையினும் (தனித்தனி) அமைந்த குறுமையாகிய நூறு நூறு செய்யுட்களை உடையது என்று பொருள் கொள்ளின், பொருள் அளவு என்னு மிரண்டானும் அமைந்த பெயராம் எனவும், ஐந்தாகிய

குறிய நூறு (ஐந்நூறு) செய்யுட்களை உடையது என்று பொருள் கொள்ளின் அளவு ஒன்றுனே அமைந்த பெயராம் எனவுங் கொள்க. இதில் அளவு குறுமை என்பது.

இனி அகநானூற்றினுக்கு நெடுந்தொகை எனவு மற்றொரு பெயர் உண்டு. இந்நூலின் செய்யுட்கள், குறுந்தொகையிலுள்ள செய்யுட்களின் அடியளவினு மிக்க அடியினை உடையன வாகலின் அப்பெயர் பெற்றது. இஃது அளவு ஒன்றுனே அமைந்த பெயரா மென்பது. இந்நூலின் பெயர்களிரண்டனுள், அக நானூறு என்பது புறநானூறு என்பதை நோக்கியும், நெடுந்தொகை என்பது குறுந்தொகை என்பதை நோக்கியும் அமைந்த பெயர்கள் என்பது.

யாக்கையின் உறுப்புகளாகிய கைகள் முதலியவை யாக்கையின் வேருகாதவாறு போலப் பொருளின் உறுப்புகளாகிய திணைகள் பொருளின் வேருகா; ஆகலின், நற்றிணை என்பது. பொருளா னமைந்த பெயரெனப்பட்டது. ஐங்குறு நூறு என்றில் ஐந்து என்பதற்கு ஐந்திணை என்று பொருள்கொண்ட விடத்தும் இக்கருத்துக் கொள்க.

இனி அவ்வெட்டனுள், புறநானூறு, பதிற்றுப் பத்து என்னுமிரண்டும் புறப்பொருள் இலக்கியங்கள்; மற்றை ஆறும் அகப் பொருள் இலக்கியங்கள்.

1. புறநானூறு

அவற்றுள், புறநானூறு என்பது புறப் பொருட் டுறைகளை யுடைய நானூறு செய்யுட்களாலான நூலாகும்.

இது நானூறு அகவற்பாக்களை யுடையது. முதற் செய்யுளாகிய கடவுள் வாழ்த்துப் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும், மற்றை 399 செய்யுட்கள் மூராஞ்சியூர் முடிநாகராயர் முதலியவர்களாலும் பாடப் பட்டவை. இவற்றுள், 266 செய்யுட்கள் உரையோ டிருக்கின்றன. மற்றவற்றுட் பல செய்யுட்கள் இடை யிடையே சிதைந்துபோ யிருக்கின்றன. இந்நூல் பலராற் பாடப்பட்டசெய்யுட்களின் தொகையாதலின் இந்நூலின் நடையை முழுதுங் காட்டவேண்டுமாயின் பல செய்யுட்களை ஈண்டுக் குறிக்கவேண்டும். அங்ங னங் காட்டல் மிகையாகிய செய்கையா மாதலின் இந் நூலினின்று ஒரு செய்யுளை மாத்திரம் ஈண்டுக் குறிக்கின்றேன் :

"மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவா
லிருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறித
லதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
விவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே."

திணை-பாடாண்டிணை ; துறை-இயன்மொழி. இது, சேரமான் தகடூ ரேறிந்த பெருஞ்சேர லிளம்பொறை முரசு கட்டி லறியாதேறிய மோசு கீரனாரைத் தவறு செய்யாது அவர் துயிலெழுந்துணையுங் கவரிகொண்டு வீசியானை மோசுகீரனார் பாடியது. (இஃது இந் நூலின் 50-ம் செய்யுள்).

2. பதிற்றுப் பத்து

இனிப் பதிற்றுப் பத்து என்பது பத்தாகிய பத்துச் (நூறு) செய்யுட்களாலான நூலாகும்.

இதிலுள்ள ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு புலமுடையராற் பாடப்பட்டது. ஆதலின், அது தோன்ற இதற்குப் பதிற்றுப்பத்து என்னும் பெயரிடப்பட்டது. இதின் முதற் பத்தும், ஈற்றுப் பத்தும், காப்புச் செய்யுளுங் காணப்படவில்லை. காணப்படாத பத்துகள் இரண்டின் சில செய்யுட்கள் தொல்காப்பியம், பொருளதிகாரத்தின் புறத்திணையியலில் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணை இயலின் "அமரர்கண் முடியும் அறுவகையானும்" என்னும் 26-சூ-உரையில் "எரியெள்ளுவன" என்னு முதற் குறிப்பை உடைய ஒரு செய்யுள் கடவுள் வாழ்த்திற்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. 'அஃது இந்நூலின்காப்புச் செய்யுளாயிருக்கலாம்' என்று மகா மகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் கூறுகின்றார். அச்செய்யுளை நோக்கின் அஃதன்னதேயாம் எனத் தோன்றுகின்றது. அது வருமாறு :

"எரியெள் ளுவன நிறத்தன் விரியிணர்க்
கொன்றை யம்பைந் தாரக லத்தன்
பொன்று ரெயிலெரி யூட்டிய வில்லன்
பயிலிருட் காடமர்ந் தாடிய வாட
னீடிப் புறம்புதை தாழ்ந்த சடையன்
குறங்கறைந்து வெண்மணி யார்க்கு விழவின
னுண்ணூற் சிரந்தை யிரட்டும் விரல
னிரண்டுருவா யீரணி பெற்ற வெழிற்றகைய
னேரு மிளம்பிறை சேர்ந்த நுதலன்
களங்கனி மாறேர்க்கும் பண்பின்மறு மிடற்றனச்
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே."

இந்நூன்முழுதுஞ் சேர அரசர்களின் சிறப்பினைக் கூறுவதாகவே இருக்கின்றது. இந்நூலின் ஒவ்வொரு செய்யுட்கும் அவ்வச் செய்யுளி லுள்ள சிறந்த தொடர் மொழியாற் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலின் இரண்டாம் பத்தின் இரண்டாஞ் செய்யு ளின் எட்டாம் அடியி லுள்ள 'மறம்வீங்கு பல்புகழ்' என்னுந் தொடர்மொழியால் அச்செய்யுட்கும் 'மறம் வீங்கு பல்புகழ்' என்று பெயர் கொடுக்கப்பட்டிருக் கிறது. இங்ஙனமே மற்றைச்செய்யுட்களையும் நோக்கிக் காண்க. பத்துப்பாட்டில் உள்ள மலைபடுகடாம் என் னும் பெயரும் இங்ஙனம் அமைந்ததே. இப்பெயர்கள் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, வாக்குண்டாம் என்னும் முதற் குறிப்புப் பெயர்கள் போன்றனவாகிய ஒருவகைக் குறிப்புப்பெயர்களாம் என்பது. இந்நூலில் ஒவ்வொரு செய்யுளின் கீழும் அவ்வச் செய்யுளின் துறையும், வண்ணமும், தூக் கும், மேற்கூறிய வகையா னமைந்த பெயருங் குறிக்

கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு பத்தின் ஈற்றினும் உள்ள பதிகத்தாற் பாடினோர் பெயரும், பாடப்பட்டோர் பெயரும் நன்கு விளங்குகின்றன.

1. இந் நூலின் இரண்டாம் பத்தைப் பாடினார் குமட்டூர்க் கண்ணனார். பாடப்பட்டான் இமயவரம்பன் - நெடுஞ்சேரலாதன்.

2. மூன்றும் பத்தைப் பாடினர் - பாலைக் கௌதமனார். பாடப்பட்டான் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன்.

3. நான்காம்பத்தைப் பாடினர் - காப்பியாற்றுக் காப்பியனார். பாடப்பட்டான் - களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல்.

4. ஐந்தாம் பத்தைப் பாடினர் - பரணர். பாடப் பட்டான் - கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்.

5. ஆறும் பத்தைப் பாடினர் - காக்கை பாடினியார் நச்செள்ளையார். (இவர் பெண்பாலார்) பாடப்பட்டான் - ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்.

6. ஏழாம் பத்தைப் பாடினர் - கபிலர். பாடப்பட்டான் - செல்வக் கடுங்கோ வாழியாதன்.

7. எட்டாம் பத்தைப் பாடினர் - அரிசில் கிழார். பாடப்பட்டான் - தகடூ ரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறை.

8. ஒன்பதாம் பத்தைப் பாடினர் - பெருங்குன் றூர் கிழார். பாடப்பட்டான் - குடக்கோ இளஞ்சேர லிரும்பொறை.

இந்நூலின் ஒரு செய்யுளை அடியிற் காண்க :

" உண்மின் கள்ளே யடுமின் சோறே
யெறிக திற்றி யேற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
விருள்வண ரொலிவரும் புரியவி ழைம்பா
லேந்துகோட் டல்குன் முகிழ்நகை மடவாற்
கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே
பெற்ற துதவுமின் றப்பின்று பின்னு
மன்னுயி ரழிய யாண்டுபல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
தண்ணிய லெழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவ தாயினுஞ்
சேர லாதன் பொய்யல னசையே."

துறை—இயன்மொழிவாழ்த்து. வண்ணம்—ஒழுகு வண்ணம். தூக்கு — செந்தூக்கு. பெயர் — கூந்தல் விறலியர்.

இஃது இந்நூலின் இரண்டாம் பத்தின் எட்டாம் செய்யுள்.

3. நற்றிணை

நற்றிணை என்பது நன்மையாகிய திணை என்றாகும். இங்குத் திணை என்றது அகப்பொருட்டிணையை. அது முதலாகு பெயராய்த் துறைகளை உணர்த்த அது காரியவாகு பெயராய் அத்துறைப் பொருள்களை யுடைய செய்யுட்களை யுணர்த்தியது. ஆதலின், நன்மையாகிய (அகத்)திணைகளின் துறைப்பொருள்களை உடைய செய்யுட்கள் என்பது நற்றிணை என்பதன் பொருளாம் என அறிக. இங்ஙனமாகிய இத்தொடர் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை

யாய் அச் செயயுட்களாலான நூலுக்குக் காரணக் குறியாயிற்று. இதில் நல் என்னும் அடை, வருமொழி யின் பொருளைத் தழுவாமையின் இதனைஅன்மொழித் தொகை என்றல் குற்றமன்றோ எனின் இதிற்செய் யுள் என்பது ஆகுபெயரான் வந்த பொருளாமேனும் வரு மொழிப் பொருளே ஆதலின் குற்ற மன்று. என்னை? அடைமொழி வருமொழிப் பொருளைத் தழு வாமல் 'நள வெண்பா' என்பதிற் போல, அன் மொழித் தொகையா யுள்ள மொழியின் பொருளைத் தழுவி நிற்குந் தொடரை அன்மொழித் தொகை என்றலே குற்ற முடைய தென்ப வாகலின். இத் தொடர்க்கு இங்குக் கூறிய பொருளில் அன்மொழித் தொகை மொழி நூல் என்பது நல் என்னும் அடை மொழி அதனைத் தழுவாமை யறிக.

இனி, நல் என்பதை நூலுக்கு விசேடணமாகவே கொள்ளின் முற்கூறிய முறையின் காரிய ஆகுபெய ரான் வந்த செய்யுள் என்பது கருவி ஆகுபெயராய் நூலை உணர்த்தியது எனவும் இப்பொருளில் அத் தொடரை அன்மொழித் தொகைப் பெயர் என்னலா காதெனவுங் கொள்க.

இந்நூல் கடவுள் வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக நானூறு ஆசிரியப் பாக்களை உடையது. இந்நூலின் செய்யுட்கள் ஒன்பது முதல் பன்னிரண்டு வரையினு மான அடிகளை யுடையவை. குறுந்தொகையின் செய்யுட்கள் நான்கு முதல் எட்டு வரையினுமான அடிகளை உடையனவாகவும், நெடுந்தொகையின் (அக நானூற்றின்) செய்யுட்கள் பதின் மூன்று முதல் முப் பத்தேழ்வரையினுமான அடிகளை உடையனவாகவும்

இருத்தலைக் கவனிக்க. அடி யளவிற் குறைந்த செய்யுட்களைத் தொகுத்துக் குறுந்தொகை எனவும், அடி யளவின் மிக்க செய்யுட்களைத் தொகுத்து நெடுந்தொகை எனவும் பெயரிட்டோர் அடி யளவில் இடைப்பட்ட செய்யுட்களால் தொகுக்கப்பட்ட இந் நூலுக்கு இடைத் தொகை எனப் பெயரிடாமல் பொருள் பற்றி நற்றிணை எனப் பெயரிட்டது இடைத் தொகை என்னும் பெயர் இனிமையாய் இராமையைக் கருதிப்போலும்! இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும், மற்றை நானூறு செய்யுட்களும் கபிலர் முதலியவர் களாலும் பாடப்பட்டவை. இந்நூலின் செய்யுள் ஒன்றை அடியிற் காண்க :

"பகலெரி சுடரின் மேனி சாயவும்
பாம்பூர் மதியி னுதலொளி கரப்பவும்
எனக்குநீ யுரையா யாயினை நினக்கியா
னுயிர்பகுத் தன்ன மாண்பினே னாகலின்
அதுகண் டிசினால் யானே யென்றுநனி
அழுத லான்றிசி னாயிழை யொலிகுரல்
ஏனல் காவலி னிடையுற் றொருவன்
கண்ணியன் கழலன் றாரன் றண்ணெனச்
சிறுபுறங் கவையின னாக வதற்கொண்
டஃதே நினைந்த நெஞ்சமொ
டிஃதா கின்றியா னுற்ற நோயே."

திணை - குறிஞ்சி ; துறை-குறை நேர்ந்த தோழி தலைவி குறை நயப்பக் கூறியது. தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்றலுமாம்.

இது நற்சேந்தனார் பாடியது. (128-ம் செய்யுள்).

இந்நூலின் ஈற்றில், "இத்தொகை ஒன்பதடிச் சிறுமையாகப் பன்னிரண்டடிகாறும் உயரப் பெற்றது. இத்தொகை தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி," என்பது காணப்படுகின்றது.

4. குறுந்தொகை

குறுந்தொகை என்பதும் நானூற்றொரு செய்யுட்களை யுடையது. இவற்றுட் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும், மற்றை நானூறு செய்யுட்கள் திப்புத்தோளர் முதலியவர்களாலும் பாடப்பட்டவை. இந்நூலைப்பற்றிய மற்றைச் செய்திகள் முன்னே கூறப்பட்டன. இந்நூலின் ஈற்றில், "இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடி சிற்றெல்லை யாகவும், எட்டடி பேரெல்லை யாகவும் தொகுக்கப் பட்டது," என்பது காணப்படுகின்றது. இந்நூலின் செய்யுள் ஒன்றை அடியிற் காண்க:

"யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇய
ருழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே."

திணை - மருதம். கிளவி - தலை மகற்குத் தோழி வாயில் நேர்ந்தது. இஃது ஓரம் போகியார் பாடியது. (10-ம்-செய்யுள்).

5. ஐங்குறு நூறு

ஐங்குறு நூறு என்பது ஐந்து புலவர்கள் தனித்தனி நூறு நூறுகப் பாடிய ஐந்நூறு செய்யுட்களும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றுமாக ஐந்நூற்றொரு செய்யுட்களை உடையது. இவற்றுள் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும், முதல் நூறுகிய மருதம் ஓரம்போகியாராலும், இரண்டா நூறுகிய நெய்தல் அம்மூவனாராலும், மூன்ரு நூறுகிய குறிஞ்சி கபிலராலும், நான்கா நூறுகிய் பாலை ஓதலாந்தையாராலும், ஐந்தா நூறுகிய முல்லை பேயனாராலும் பாடப்பட்டவை. இந்நூலைப் பாடியவர்கள் இவர்கள் என்பதை அடியில் வரும் வெண்பாவினுல் அறிக:

“மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருது குறிஞ்சி கபிலர்—கருதிய
பாலையோத லாந்தை·பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு.”

இவற்றுள் ஒவ்வொரு நூறும் பத்துப் பத்து களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.ஒவ்வொரு பத்துக்கும் ஒவ்வொரு பெயர் கொடுக்கப்பட் டிருக்கின்றது. இந்நூலின் ஈற்றில், “இத்தொகை தொகுத்தார் புலத்துறைமுற்றிய கூடலூர்கிழார். இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறையார்,” என்பது காணப்படுகிறது.

இந்நூலின் பா ஒன்றை அடியிற் காண்க:

“பிடவ மலரத் தளவ நனையக்
கார்கவின் கொண்ட கானங் காணின்
வருந்துவள் பெரிதென வருந்தொழிற் ககலாது

வந்தன ரானங் காதலர்
அந்தீங் கிளவிநின் ஞய்நலங் கொண்டே."

திணை-முல்லை. கிளவி-குறித்த பருவத்தின்கண் தலை மகன் வந்துழித் தோழி தலை மகட்குச் சொல்லியது. (499-ம் செய்யுள். இஃது ஐம்பதாம் பத்தாகிய வரவுச் சிறப்புரைத்த பத்தின் 9-ம் செய்யுள்).

6. பரி பாடல்

பரிபாடல் என்பது ஒரு வகைப் பாட்டின் பெயர் இஃது இசைப் பாட்டாகும். இஃதிசைப் பாட்டாம் என்பது, (தொல்-செ-இ-243-ம்-சூ) உரையில், "அவையாவன கலியும், பரிபாடலும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன என்பது," என்று பேராசியர் கூறியதனால் இனிது விளங்கும். அன்றியும் இப்பாட்டுகளுள் ஒவ்வொன்றற்கும் இசை வகுத்துள்ளமையும் இதனை வலியுறுத்தும். "இரண்டாவது முதலிய பதினென்றின் பண் பாலை யாழ் என்றும், 13-வது முதலிய ஐந்தின் பண் நோதிறம் என்றும், 18-வது முதலிய நான்கன் பண் காந்தாரம் என்றும் இருத்தலை உற்று நோக்கும் போது இந்நூற் பாடல்கள் தேவாரங்கள் போலவே பண்டைக் காலத்தில் பண் முறையால் தொகுக்கப் பெற்று உரிய பண்களுடன் பாடப் பெற்று வந்தன என்று தெரிகின்றது," என (இந்நூற் பதிப்பின் முகவுரையில்) மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் கூறி யிருத்தலையும் ஈண்டுக் கவனிக்க.

இனி, "நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே, கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ, டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின, "என்னும் (தொல்-

பொ-அ-செ-இ-118-ம்) சூத்திரத்தால் பரி பாடல் என்பது வெண்பாவின்பாற் படுவதோர் பாட்டெனத் தெரிகின்றது. மேற்படி சூத்திரத்தின் உரையில் பேராசிரியர், "பரி பாடல் என்பது பரிந்து வருவது. அஃதாவது கலி யுறுப்புப் போலாது பல அடியும் ஏற்று வருவது," எனவும், நச்சினார்க் கினியர், "பரி பாடல் என்பது பரிந்து வருவது. அது கலி உறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பல வடியும் வருமாறு நிற்கும் என் றுணர்க," எனவுங் கூறியவற்றால் பிற பாக்களுக் குரிய அடிகள் தம்பால் விரவி வரப் பெறாத மற்றை வெண் பாக்களைப் போலன்றிப் பிற பாக்களுக்குரிய அடி கள் தன்பால் விரவி வருதற்குரிய தாகும் பரி பாட லாகிய வெண்பா என்பது பெறப்படுகின்றது. அன்றியும், பரி பாடல் இன்னபாவெனக் கோடற் கிய லாது பொதுவாய் நிற்றற்கும் உரியதாகும். இஃது இன்ன தாதலை, "பரிபா டல்லே தொகைநிலை விரியி, னிதுபா வென்னு மியனெறி யின்றிப், பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப," என்னும் (தொல்-பொ - அ - செ - இ - 120.) சூத்திரத்தானும், அதன் உரையானும், உதாரணச் செய்யுட்க ளானும் உணர்க.

அன்றியும் இப்பா கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் நான்குறுப்புகளைப் பெற்றுச் சொற்சீ ரடியும் முடுகிய லடியும் தன்பால் விரவிவரப் பெறுவதாம் எனவும், அறமுதல் நாற்பொருள்களுள் இன்பத்தைப் பொருளாகக் கொண்டுகடவுள்வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றுள்

வருவதாம் எனவும் அறிக. இப்பா ஈண்டுக் கூறிய இயல்பினதாதலே, "கொச்சக மராகம்," எனவும், "சொற்சீரடியும்," எனவும் வரு முதற் குறிப்புகளை உடைய (தொல்-பொரு-அ-செ-இ-121, 122-ம்) சூத்திரங்களானும் அவற்றின் உரைகளானு மறிந்து கொள்க. எருத்து என்பது தரவு.

இனி, எருத்து என்பதனைத் தரவின் வேருனதோர் உறுப்பு எனவும், அது தரவைச் சார்ந்து கிடப்பது எனவுங் கொண்டு, பரி பாடல் கொச்சகம், அராகம் சுரிதகம், எருத்து, தரவு என்னும் ஐந்துறுப்பான் வரும் எனக் கொள்வர் ஒருசாராசியர். அதற்கு விதி, 'தரவே யெருத்தே யராகங் கொச்சகம், அடக்கியல் வாரமோ டைந்துறுப் புடைத்தே,' என்னும் அகத்திய சூத்திரமாம் என்பர்.

இங்ஙனமாகிய பாட்டின் பெயர் கருவியாகு பெயராய் அப்பாட்டுப் பலவற்ருல் தொகுக்கப்பட்ட நூலே உணர்த்தியது. இந்நூலின் பாடல்கள் எழுபதாம். இந்நூலின் செய்யுட்டொகை இன்னதாதல், தொல்-செ-இ.149-ம்-சூத்திர உரையானும் இறையனூர் அகப்பொருள் முதற்சூத்திர உரையானும் விளங்கும். இனி, "நூற்றைம்பது கலியும், எழுபது பரி பாடலும் எனச் சங்கத்தார் தொகுத்தவற்றுள்," என்பது தொ-மேற்படி சூத்திர உரையில் உள்ளது.

"அவர்களாற் பாடப்பட்டன: நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரி பாடலும், கூத்தும், வரியும்,

பேரிசையும், சிற்றிசையும் என்றித் தொடக்கத்தன,'' என்பது இறையனார் அகப்பொருளின் மேற்படி சூத்திர உரையில் உள்ளது.

“ திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்.''

என்னும் வெண்பாவினால் அவ் வெழுபது பரிபாடல்களுள், திருமாலுக்கு எட்டும், முருகவேளுக்கு முப்பத்தொன்றும், காடுகாளுக்கு ஒன்றும், வையை யாற்றிற்கு இருபத்தாறும், மதுரைக்கு நான்குமாக அமைந்திருந்தன வென்று தெரிகின்றது.

இப்பொழுது அச்சிட்டு வெளியிடப்பட்ட இந்நூலில் அவ்வெழுபது பாடல்களுள் முதலி விருந்து தொடர்ச்சியாக வுள்ள இருபத்திரண்டு பாடல்களும், தொல்காப்பிய முதலியவற்றுள் மேற் கோளாகக் காட்டப்பட்டிருக்கும் வேறிரண்டு முழுப் பாடல்களும், சில பாடல்களின் சில உறுப்புகளும் காணப்படுகின்றன. இவ்வரிய நூலில் இத்துணையேனும் நாம் கற்றுக் களித்தற்கு உரியவாகும்படி செய்த மகாமகோ பாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் நன்முயற்சி தமிழ் உலகத்தான் மிக்க நன்றி யறிதலோடு போற்றற்குரிய தாகும்.

இப்பொழுது வெளியா யுள்ள செய்யுட்களைப் பாடிய புலமுடையார்,

1. ஆசிரியன் நல்லந்துவனார்
2. இளம்பெரு வழுதியார்
3. கடுவனிள வெயினனார்
4. கரும்பிள்ளைப் பூதனார்
5. கீரந்தையார்
6. குன்றம் பூதனார்
7. கேசவனார்
8. நப்பண்ணனார்
9. நல்லச்சுதனார்
10. நல்லழிசியார்
11. நல்லெழுனியார்
12. நல்வழுதியார்
13. மையோடக் கோவனார்

என்பவர்கள். ஆனால், சில செய்யுட்களின் ஆசிரியர்களின் பெயர்கள் காணப்படவில்லை.

அச் செய்யுட்களுக்குப் பண் வகுத்த புலமுடையார் பெயர்,

1. கண்ணகனார்
2. கண்ணனாகனார்
3. கேசவனார்
4. நந்நாகனார்
5. நல்லச்சுதனார்
6. நன்னாகனார்
7. நாகனார்
8. பித்தாமத்தர்
9. பெட்டனாகனார்
10. மருத்துவனல்லச்சுதனார்

என்பன.

இந்நூலின் செய்யுட்கள் பெரியன வாகலின் ஒரு செய்யுளின் சில அடிகள் மாத்திரம் அடியிற் குறிக்கப்படுவன வாயின.

திருமால்

(3 - ம் பாட்டு)

“ மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப் பறுக்கு மாசில் சேவடி
மணிதிக ழுருபின் மாஅ யோயே
தீவளி விசும்பு நிலநீ ரைந்து
ஞாயிறுந் திங்களு மறனு மைவரும்
திதியின் சிறாரும் விதியின் மக்களும்
மாசி லெண்மரும் பதினொரு கபிலரும்
தாமா இருவருந் தருமனு மடங்கலு
மூவே ழுலகமு முலகினுண் மன்பது
மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தே
மாயா வாய்மொழி யுரைதர வலந்து
வாய்மொழி யோடை மலர்ந்த
தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்
நீயென மொழியுமா லந்தண ருருமறை
ஏஎர், வயங்குபூ ணமரரை வௌவிய வமிழ்திற்
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளினை
பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளி
னிவந்தோங் குயர்கொடிச் சேவ லோய்நின்
சேவடி தொழாரு முளரோ? ”

7. கலித் தொகை.

கலித் தொகை என்பது கலிப் பாக்களினது தொகையினு லாகிய நூல் என்னும் பொருளது. இஃது ஒன்றன் கூட்டத் தற்கிழமைப் பொருள தாகிய ஆறன் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகைக் காரணப் பெயராய் நூலை உணர்த் தியது. இதிற் கலி யென்பது கலிப்பாவை உணர்த்தி நின்றது.

இந்நூல் திணை பற்றிப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. இப்பிரிவுகளி லுள்ள கலிப் பாக்கள் அவ்வப் பிரிவுகளின் பெயர்பற்றிப் பாலைக் கலி, குறிஞ்சிக் கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற் கலி என வழங்கப்படுகின்றன.

இந்நூலின் கடவுள் வாழ்த்தாகிய கலிப்பா 1; பாலைக்கலி 35; குறிஞ்சிக்கலி 29; மருதக்கலி 35; முல்லைக்கலி 17; நெய்தற்கலி 33; ஆகமொத்தக் கலிப் பாக்கள் 150.

அவற்றுள், பாலைக் கலியைப் பாடினார்—பெருங் கடுங்கோ; குறிஞ்சிக் கலியைப் பாடினார் — கபிலர்; மருதக் கலியைப் பாடினார்—மருதனிள நாகனார்; முல் லைக் கலியைப் பாடினார் — சோழ னல்லுருத்திரனார்; நெய்தற் கலியையும், கடவுள் வாழ்த்தையும் பாடி னார்—ஆசிரியர் நல்லந்துவனார் ஆவர். இவற்றைப்பாடி னவர்கள் இவர்கள் என்பதை,

"பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருத—மருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி." எனவும்,

"நாடும் பொருள்சான்ற நல்லந் துவனுசான்
சூடுபிறைச் சொக்கன் றுணைப்புலவர்—தோடுபோந்து
கூட்டுணவே வாழ்த்தோடு கொங்காங் கலியினையே
யூட்டினான் ஞாலத் தவர்க்கு."

எனவும், வரும் வெண்பாக்களான் அறிதலாம்.

இந்நூலின் ஈற்றில், "முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும்

படுமே," என்புழிச் சொல்லாத முறையாற் சொல்ல வும்படும் என்றலின், இத் தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என இம்முறை யே கோத்தார் நல்லந்துவனர்," என்பது காணப்படு கிறது. இதனுல், ஆசிரியர் நல்லந்துவனர் இந்நூலைக் கோத்தார் என்பது நன்கு விளங்குகின்றது. இந் நூலின் செய்யுள் ஒன்றை அடியிற் காண்க:

"வறனுற லறியாத வழையமை நறுஞ்சாரல்
விறன்மலை வியலறை வீழ்பிடி யுழையதா
மறமிகு வேழந்தன் மாறுகொண் மைந்தினுற்
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல
வுயர்முகை நறுங்காந்த ணடோறும் புதிதீன
வயனந்தி யணிபெற வருவியார்த் திழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப,

இது - தரவு

மறையினின் மணந்தாங்கே மருவறத் துறந்தபி
னிறைவளை நெகிழ்போட வேற்பவு மொல்லும
னயலலர் தூற்றலி னய்நல னிழந்தகண்
கயலுமிழ் நீர்போலக் கண்பனி கலுழாக்கால்;

இனியசெய் தகன்றுநீ யின்னதாத் துறத்தலிற்
பனியிவள் படரெனப் பரவாமை யொல்லுமன்
ஊரலர் தூற்றலி னொளியோடி நறுநுதல்
பீரல ரணிகொண்டு பிறைவனப் பிழவாக்கால்;

அஞ்சலென் றகன்றுநீ யருளாது துறத்தலி
னெஞ்சழி துயரட நிறுப்பவு மியையுமன்
நனவினு னலம்வாட நலிதந்த நடுங்கஞர்
கனவினு லழிவுற்றுக் கங்குலு மாற்றுக்கால்;

இவை மூன்றுந் தாழிசைகள்

எனவாங்கு

இது தனிச் சோல்

விளியாநோ யுழந்தானு வென்றோழி நின்மலை
முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை
தளிபெறத் தகைபெற் றாங்குநின்
னளிபெற நந்துமிவ ளாய்நுதற் கவினே."

இது சுரிதகம்

இஃது ஒரு வழித் தணந்து வந்த தலைவற்குத் தோழி, தலைவியாற்றாமையும், ஆற்றுவித்த வருமையுஞ் சொல்லி வரைவு கடாயது. (குறிஞ்சிக்கலி—17-வது செய்யுள்).

8. அக நானூறு

அக நானூறு என்பது அகப்பொருட் டுறைகளை யுடைய நானூறு செய்யுட்களாலான நூலாகும்.

இது 401 அகவற் பாக்களை யுடையது. முதற் செய்யு ளாகிய கடவுள் வாழ்த்துப் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும், மற்றை 400 செய்யுட்களும் மாமூலனார் முதலியவர்களாலும் பாடப்பட்டவை. இந் நூலைப்பற்றிய மற்றச் செய்திகள் முன்னே கூறப்பட்டன. நூலின் ஈற்றில்,

"பாலை வியமெல்லாம் பத்தாம் பனிநெய்தல்
நாலு நனிமுல்லை நாடுங்கான்—மேலையோர்
தேறு மிரண்டெட் டிவைகுறிஞ்சி செந்தமிழின்
ஆறு மருத வகை."

என்னும் வெண்பாக் காணப்படுகிறது. இந்நூற்பாக் களின் எண்கள் பிறழ்ந்திருப்பின் இவ்வெண்பாவின்

ஆதாவினுல் பிறழ்ந்திருக்கும் பாக்களின் எண்களை ஒருவாறு கண்டுபிடித்து விடலாம். இவ்வெண்பாவின் உரையை அடியிற் காண்க:

செந்தமிழின் மேலேயோர்—செந்தமிழ் நூல் அறிவின் மேன்மை யுற்ற புலவர்கள்; தேறும்—தெளிந் துணர்தற் குரிய, பாலே வகை-பாலைத்திணைப் பொருள் கொண்ட பாக்களினது எண்களின் வகை, வியம் எல்லாம் — ஒற்றையாய் வரும் எண்கள் யாவும் ஆகும்; பனி நெய்தல் வகை — குளிர்ச்சி யாகிய நெய்தற் றிணைப் பொருள் கொண்ட பாக்களினது எண்களின் வகை, பத்து ஆம்-பத்து, இருபது என வருவன வெல்லாம் ஆகும்; நனி முல்லை வகை—கற் பொழுக்கத்தாற் சிறத்தலை உடைய முல்லைத் திணைப்பொருள் கொண்ட பாக்களினது எண்களின் வகை, நாலு ஆம்—நான்கு, பதினான்கு என வருவன எல்லாம் ஆகும்; குறிஞ்சி வகை—குறிஞ்சித்திணைப் பொருள் கொண்ட பாக்களினது எண்களின் வகை, இரண்டு எட்டு இவை (ஆம்)—இரண்டு, பன்னிரண்டு, எட்டு, பதினெட்டு என வரும் இவைகள் எல்லாம் ஆகும்; மருத வகை — மருதத் திணைப் பொருள் கொண்ட பாக்களினது எண்களின் வகை, ஆறு (ஆம்)— ஆறு பதினாறு என வருவன எல்லாம் ஆகும்.

1. ஒற்றை எண்ணெல்லாம் பாலை ... 200
2. பத்து, இருபது முதலீயன வெல்லாம் நெய்தல் 40
3. நான்கு, பதினான்கு முதலியன எல்லாம் முல்லை 40

4. இரண்டு, பன்னிரண்டு, எட்டு, பதி
னெட்டு முதலிய வெல்லாம் குறிஞ்சி 80

5. ஆறு, பதினாறு முதலியன எல்லாம்
மருதம் 40

6. கடவுள் வாழ்த்து 1

ஆக மொத்தச் செய்யுள் 401

அன்றியும், ஈற்றில், "இத்தொகையிற் பாட்டிற்களவு பதின்மூன்றிற் கொண்டு முப்பத்தேழ் அளவும் உயரப் பெறும்." 'வண்டுபடத் ததைந்த' என்பது முதலாக, 'நெடுவெண் மார்பின்' என்பதீறாகக் கிடந்த நூற்றிருபது பாட்டுங் களிற்றியானை நிரை. இப் பெயர் காரணப் பெயர். செய்யுட் காரணமோ பொருட் காரணமோ எனிற் பொருட் காரண மென உணர்க. 'நாகநகை யுடைய நெஞ்சே' என்பது முதலாக, 'நாளல்லே' என்பதீறாகக் கிடந்த நூற்றெண்பதும் மணி மிடை பவளம். இப்பெயர் உவமையாற் பெற்ற பெயர்; செய்யுளும் பொருளுந் தம்முள் ஒவ்வாமையால். 'வறனுறு' என்பது முதலாக, 'நகை நன்று' என்பதீறாகக் கிடந்த பாட்டு நூறும் நித்திலக் கோவை; இவை செய்யுளும் பொருளும் ஒக்கு மாகலின். வழக்கத்தாற் பாட்டாராய்ந்து தொகுத்தான் மதுரை - உப்புரி கிழார் மகனுவான், உருத்திரசருமன். தொகுப்பித்தான், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி," என்பது காணப்படுகின்றது.

இதனுல் இந் நூல் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என்னு மூன்று பிரிவுகளை

உடையதாம் என்பதும், இந்நூலைத் தொகுத்தார், மதுரை யுப்புரி கிழார் மகனார் உருத்திர சருமர் என்பதும், தொகுப்பித்தான், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பதும் நன்கு விளங்குகின்றன. இந்நூலினின்று ஒரு செய்யுளை அடியிற் காண்க:

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வற்றலங் கோடுநீ!ரவலங் கிடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழு கடுமுடை
இரவுக்குறும் பலற நூறி நிரைவகுத்
திருங்கன் முடுக்காத் திற்றி கொண்டுங்
கொலைவி லாடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திருக்கும்
அருஞ்சுர மிறந்த கொடியோர்க் கல்கலும்
இருங்கழை யிறும்பி னுய்ந்துகொண் டறுத்த
நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரோ
டகவுநர்ப் புணர்ந்த வன்பிற் கழறொடி
நறவுமகி ழிருக்கை நன்னன் வெண்மான்
வயலை வேலி வியலூ ரன்னநின்
அலர்முலை யாகம் புலம்பப் பலநினைந்
தழேஎ லென்றி தோழி யாழவென்
கண்பனி நிறுத்த லெளிதோ குரவுமலர்ந்
தறல்சேர் நீங்கிய வரும்பவிழ் வேனில்
அறலவிர் வார்மண லகல்யாற் றடைகரைத்
துறையணி மருதோ டிகல்கொள வோங்கிக்
கலுழ்தளி ரணிந்த விருஞ்சினை மராஅத்
திணர்ததை புதுப்பூ நிரைத்த பொங்கர்ப்
புகைபுரை யம்மஞ் சூர
நுகர்குயி லகவுங் குரல்கேட் போர்க்கே."

(அகம்—97-வது செய்யுள். களிற்றியானை நிரை.) திணை—பாலை; துறை — வற்புறுத்துந் தோழிக்குத் தலை மகள் சொல்லியது.

பதினெண்கீழ்க் கணக்கு

பதினெண் கீழ்க்கணக்கு என்பது மேற் கணக்கு எனவும் கீழ்க் கணக்கு எனவும் கூறப்படும் இரு வகைத் தொகை நூற்களுள் கீழ்க்கணக்கு என்னும் வகையிற் சேர்ந்த பதினெட்டு நூற்களைக் குறிப்பது. அப் பதினெட்டு நூற்க ளாவன :

1. நாலடியார்
2. நான்மணிக் கடிகை
3. இனியவை நாற்பது
4. இன்னா நாற்பது
5. கார் நாற்பது
6. களவழி நாற்பது
7. ஐந்திணை யைம்பது
8. ஐந்திணை எழுபது
9. திணை மொழி ஐம்பது
10. திணை மாலை நூற்றைம்பது
11. (முப்பால்) திருக்குறள்
12. திரி கடுகம்
13. ஆசாரக் கோவை
14. பழ மொழி
15. சிறு பஞ்ச மூலம்
16. இன்னிலை
17. முதுமொழிக் காஞ்சி
18. ஏலாதி

என்பன. இவையாம் என்பதனை,

“ நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.”

என்பதனு லறிக. இவ்வெண்பாவின் பின். இரண்டடிகளில் பாட பேதம் காணப்படுகின்றது. அது வருமாறு :

‘ இன்னிலை காஞ்சியுட னேலாதி யென்பவே
நன்னிலைய வாங்கீழ்க் கணக்கு ’

இது திருமேனி — இரத்தினக் கவிராயர் அவர்களது இன்னிலை என்னும் நூலின் ஏட்டுப் பிரதியிலுள்ள பாடம்.

மேற்கணக்காவது : அடி வரையறையின் மிக்கனவாகிய வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா. மருட்பா என்னும் ஐவகைப் பாக்களால் அகம் புறம் என்னும் பொருளிலக்கணங்களின் மரபுப்படி ஐம்பது முதல் ஐந்நூறு இறுதியான செய்யுட்களை யுடையதாகப் பாடப்படுவது.

அடி வரையறையின் மிக்கன வாதல் பெரும்பான்மையும் ஐந்தடியின் மிக்கன வாதல் என்க. பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூற்கள் அங்ஙனமாகிய மேற் கணக்கு நூற்களாம் எனக் கொள்க.

கீழ்க்கணக்காவது : பெரும்பான்மையும் அடிவரையறையிற் குறைந்த வெண்பாவினுலும், சிறுபான்மை அவ்வகையான வேறு செய்யுட்களாலும் அறம், பொருள் இன்பங்களைக் குறித்து அத்தொகையைப் பாடப்படுவது.

(அடிவரை யறையிற் குறைதலாவது பெரும்பான்மையும் ஐந்தடியின் மிகாமை. சிறுபான்மை ஐந்தடியின் மிக்குவருதலும் உண்டு. அவற்றைக்

களவழியின்கண் காண்க. கீழ்க்கணக்கு நூற்களில் செய்யுட்டொகையில் ஐம்பதிற் குறைந்தும், ஐந் நூற்றின் மிக்கும் வருதலு முண்டு. கார் நாற்பது முதலியன நாற்பது செய்யுட்களை யுடையன. முப் பால் (திருக்குறள்) ஆயிரத்து முந்நூற்று முப்பது செய்யுட்களை யுடையது. இங்ஙனம் வரும் இவ்விரு நூற்களின் இயல்களை,

"மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படு வகையாற் பகர்ந்தனர் கொளலே."

"ஐம்பது முதலா ஐந்நூ றீறு
ஐவகைப் பாவும் பொருணெறி மரபின்
தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்."

"வெள்ளைத் தொகையும் அவ்வகை வேண்டின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே."

"அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொரு ளின்ப மடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்."

என வரும் பன்னிரு பாட்டியற் சூத்திரங்களால் அறிக.

"வனப்பிய றானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே அடிநிமிர் பின்றே."

என்னும் தொல்காப்பியம்-பொருளதிகாரம்-செ-இ-236-ம் சூத்திர உரையில் "'சிலவாக' என்பது எண்ணுச் சுருங்குதல்; 'மெல்லிய வாய்ச் சிலவாய சொற்கள்' எழுத்தினன் அகன்று காட்டாது சில எழுத்தினான் வருவது. 'அடி நிமிராது' என்றது, ஐந்தடியின் ஏறாது என்றவாறு. 'தாய பனுவலோடு' என்

றது அறம் பொருள் இன்பம் என்னு மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப, வேறு இடை இடை அவை அன்றியுந் தாய்ச் செல்வது என்றவாறு. அஃதாவது பதினெண் கீழ்க் கணக்கு என உணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொருள் இன்பம் என அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப் பயின்று வருமாறும், கார் நாற்பது, களவழி நாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டு கொள்க,'' என்பதனுள் பதினெண் கீழ்க்கணக்கிற்கு இலக்கணம் அமைந்திருத்தலை உய்த்துணர்க.

1. நாலடியார் : இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு வெண்பாக்களை யுடையது; சமண முனிவர் பலரால் இயற்றப்பட்டது. அதனை,

> " மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றின்கண்
> எண்ணி யிருநான்கோ டாயிரவர்—நண்ணி
> எழுதியிடு மேட்டுக்கு ளேடெதிரே யேறும்
> பழுதில்லா நாலடியைப் பார்.''

என்னும் வெண்பாவினு லறிக. பதுமனார் என்பவர் கடவுள் வாழ்த்துப் பாடி முதலிற் சேர்த்து, இந்நூலைப் பால், இயல், அதிகாரங்களாக வகுத்துப் பொழிப்புரை எழுதி, அதிகார அடைவுகளுக்கு ஏதுவுங் கூறி யிருக்கின்றனர். இந்நூலை மேன்மையில் திருக்குறளுக்கு இரண்டாவதாகப் புலவர் பாராட்டிக் கூறுவர். திருக்குறளைப் பொது மறை என வழங்குவது போல இதனையும் போது மறை என வழங்குவர்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுதி," என்னும் பழமொழியும்,

"வேளாண் மரபுக்கு வேத மெனச்சான்ருேர்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெளிந்து."

என்னும் வெண்பாவினுலும் இளம்பூரணர், பேராசிரியர், சேனுவரையர், நச்சினுர்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் தம் உரைகளின் இடையில் இந்நூலின் செய்யுட்களை மேற்கோளாகக் கொண்டிருத்தலாலும் இந்நூலின் பெருமை நன்கு விளங்குவதாம்.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க:

1. துறவு

'தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்ருேர் கடன்.' (1)

'மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்
கலங்காமல் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.' (2)

2. சின மின்மை

'இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பய—னெல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.' (3)

"நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்." (4)

3. பொறை யுடைமை

'வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா ஒழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூரவிடல்.' (5)

'பெரியார் பெருநட்புக் கோடறுஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றோ ?—அரியரோ
ஒல்லெ னருவி யுயர்மலை நன்னாட!
நல்லசெய் வார்க்குத் தமர் ?' (6)

4. ஈகை

'முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.' (7)

'நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தாந் துய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
இடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.' (8)

5. தாளாண்மை

'நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றா னாகுங் குலம்.' (9)

'சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்

குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.' (10)

6. அறிவுடைமை

'கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலாற் றத்தம்
இனத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.' (11)

'நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.' (12)

2. நான்மணிக் கடிகை : இந்நூல் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இரண்டும், நூற் செய்யுள் நூற்று நான்கும் ஆக நூற்றாறு செய்யுட்களை உடையது. இது விளம்பி நாகனார் என்னும் புலமிக்கோரால் இயற்றப் பட்டது. இந்நூலின் செய்யுட்கள் ஒவ்வொன்றும் நந்நான்கு பொருள்களைக் கூறுவது. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இரண்டனுள் இரண்டாவது செய்யுளின் முதலடியி லுள்ள * 'படியை மடியகத் திட்டான்' என்பதனை, அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் - கனாத்திற முரைத்த காதையில், 'மடியகத் திட்டான் மகவை' என வரும் 22-ம் அடிக்கு மேற்கோளாகக் காட்டி இருக்கின்றனர். அது வருமாறு : "மடி—வயிறு ; 'படியை மடியகத் திட்டான்' என்பதனானு முணர்க." இதனை யறியாதார் சிலர் இக்கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் பிற்காலத்து யாரோ வைணவர் ஒருவரால்

* 'படையை' என்பதும் பாடம்.

இயற்றிச் சேர்க்கப்பட்டவை என்பர். அது பொருந்தாமை யறிக. இந்நூலும் நீதியைக் கூறுவதே. இந்நூலும், திரி கடுகம், சிறு பஞ்ச மூலம், ஏலாதி என்பனவும், பொருள்களைச் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்னு நூற்குரிய அழகுகள் நன்கமைந்தனவாகும். சிலர் இவற்றைத் திருக்குறளுக்கு முற்பட்ட நூற்கள் எனக் கூறுகின்றனர். இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

கடவுள் வாழ்த்து

'மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.' (1)

'படியை மடியகத் திட்டா னடியினால்
முக்காற் கடந்தான் முழுநில மக்காலத்
தாப்பனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.' (2)

நூல்

''கல்விற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத—மெல்லென்
றருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.' (3)

'திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
அறனொக்கும் ஆற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.' (4)

'கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை ஒண்பொருள்

செய்வமென் பார்க்குந் துயிலில்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்.' (5)

'கற்ருர்முற் ருேன்ரு கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்ருர்முற் ருேன்ரு உறுமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்ரு எல்லாம்
வெகுண்டார்முற் ருேன்ரு கெடும்.' (6)

'மனைக்குப்பாழ் வாணுதல் இன்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு.' (7)

'யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.' (8)

3. இனியவை நாற்பது : இந்நூல் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் நூற்செய்யுள் முப்பத்தொன்பதுமாக நாற்பது வெண்பாக்களை யுடையது. இது மதுரைத் தமிழாசிரியர் மகனுர்—பூதஞ்சேந்தனுர் என்னும் புலமிக்கோரால் இயற்றப்பட்டது. இனியனவற்றைக் கூறும் நாற்பது வெண்பாக்களை இந்நூலுடைய தாதலின், இனியவை நாற்பது எனப் பெயர் பெற்றது. இந்நூலும் இன்னு நாற்பதும் ஐந்தாவது ஆருவது வகுப்புகளிற் படிக்கும் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் பாடமாக அமைத்தற் கேற்ற எளிய நடையில் அமைந்திருக்கின்றன.

இந்நூலின் சில செய்யுட்களை அடியிற் காண்க :

'கண்மூன் றுடையாள்ருள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே

முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.' (1)

'பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.' (2)

'உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினி து மாணுதா மாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தானினிது நன்கு.' (3)

'பிறன்மனை பின்னேக்காப் பீடினி தாற்ற
வறலுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையின் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட லினிது.' (4)

'ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினுங் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத லினிது.' (5)

4. இன்னு நாற்பது :- இந்நூல் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் நூற் செய்யுள் நாற்பதுமாக நாற்பத்தொரு செய்யுட்களை உடையது. இது கடைச் சங்கப் புலவர் பலரால் புகழ்ந்துரைக்கப்பட்ட கபிலர் என்னும் புலமிக்கோரால் இயற்றப்பட்டது; இன்னுதனவற்றைக் கூறும் நாற்பது வெண்பாக்களை உடையதாதலின் இன்னு நாற்பது என்று பெயர் பெற்றது:

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

'முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னு
பொற்பன வூர்தியை யுள்ளா தொழுக்கின்னு

சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் றடொழா தார்க்கு.' (1)

'பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வ னழகின்னா
அந்தண ரில்லிருந் தூணின்னா தாங்கின்னா
மந்திரம் வாயா விடின்.' (2)

'எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா இன்னா
பெருவலியார்க் கின்னா செயல்.' (3)

'ஆன்றமைந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.' (4)

'அடக்க முடையவன் மீளிமை இன்னா
துடக்க மிலாதவன் தற்செருக் கின்னா
அடைக்கலம் வவ்வுதல் இன்னாதாங் கின்னா
அடக்க அடங்காதார் சொல்.' (5)

5. கார் நாற்பது : இந்நூல் **மதுரைக் கண்ணங் கூத்தனார்** இயற்றியது. அன்புடைக் காமமாகிய அகத்திணைப்பொருள்வகை ஐந்தனுள், தலைவன் பிரிவை ஆற்றியிருத்தலாகிய முல்லைத் திணைப் பொருள் அமைந்த நாற்பது வெண்பாக்களை உடையது. அகத்திணைப் பொருள் வகை ஐந்தாவன : **முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல்** என்பன. இவற்றுள் ஒவ்வொன்றற்கும் முதற் பொருள், கருப் பொருள், உரிப்பொருள் என மும்மூன்று பொருள்கள் உள. அவற்றுள் முதற்பொருளாவன, நிலமும் பொழுதுமாம் ; கருப்பொருளாவன, அவ்வந் நிலத்துக்கண் தோன்றும்

பொருள்கள் ; உரிப்பொருளாவது, அவ்வந் நிலத்துக்குரிய ஒழுக்கம். இவற்றுள் முதற் பொருளாகிய நிலம் பொழுது என்னும் இரண்டனுள், பொழுது பற்றி இந்நூற்குப் பெயரிடப்பட்டது. இது கற்றற்கெளியதும் கற்பார்க்கு மிகவும் இன்பம் பயப்பதுமாகிய நூலாகும்.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

தோழி தலைமகட்குப் பருவங் காட்டி வற்புறீஇயது

“பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் வீழல்
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங்
கருவிருந்தா லிக்கும் பொழுது.’ (1)

இதுவு மது

‘இகழுநர்ச் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோ லுண்கண்ணாய்! பொய்யன்மை யீண்டைப்
பவழஞ் சிதறி யவைபோலக் கோபந்
தவழுந் தகைய புறவு.’ (2)

இதுவு மது

‘நச்சியார்க் கீதலு நண்ணார்த் தெறுதலுந்
தற்செய்வான் சென்றார் தரூஉந் தளிரியல்!
பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரு மின்னு மழை.’ (3)

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது

‘நாஞ்சில் வலவ னிறம்போலப் பூஞ்சினைச்
செங்கான் மராஅந் தகைந்தன—பைங்கோற்
றொடிபொலி முன்கையா டோடுணையா வேண்டி
நெடுவிடைச் சென்றதென் னெஞ்சு.’ (4)

6. களவழி நாற்பது : இந்நூல் பொய்கையார் என்னும் புலமிக்கோரால் இயற்றப்பட்டது. புற நானூற்றில் உள்ள 48, 49-வது பாட்டுகளால் சேரமான் கோக்கோதை மார்பனைப் பாடியவரும் இவரே என்பர் மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர். இதனை இன்னிலையைப் பற்றிக் கூறுமிடத்துக் காண்க. இது சோழன் செங்கணான், சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு பொருது அவனைப் பற்றிச் சிறையிலிட்ட பொழுது அவனைச் சிறை வீடு செய்தற்காகப் பாடப்பட்டது ; நாற்பத்தொரு வெண்பாக்களை உடையது. இதிற் சோழன் செங்கணானது வீரமும், சேரமான் கணைக்கா லிரும்பொறையின் நாற்படைகளும் செங்கணானால் அழிக்கப்பட்டுக் கிடந்த அப்போர்க்களத்தின் இயல்பும் நன்கு கூறப்பட் டிருக்கின்றன. இங்ஙனம் போர்க்களம் பாடுதற்குத் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணை யியலில், ' கூதிர் வேனில் என்றிரு பாசறை,' என்னும் 21-ம் சூத்திரத்தில், ' ஏரோர் களவழி யன்றிக் களவழித், தேரோர் தோற்றிய வென்றியும்,' என்பது விதியாகும். இந்நூலிலுள்ள செய்யுட்கள் பலவற்றில் அழகிய உவமைகள் அமைந்திருக்கின்றன. அவை மனத்தில் நன்றாகப் பதிவனவாகவும், பொருள்களை (உபமேயங்களை) நன்கு விளக்குவனவாகவும், படிப்போர்க்கு இன்பந் தருவனவாகவும் இருக்கின்றன.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

' ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி

கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனலொடுடன்
ஆர்த்தம ரட்ட களத்து.' (1)

'ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக்கோ டூன்றி—யெழுவர்
மழைக்குரன் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து.' (2)

'உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை—இருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை அட்ட களத்து.' (3)

'நிரைகதிர் நீளெஃகம் நீட்டி வயவர்
வரைபுரை யானைக்கை நூற—வரைமேல்
உருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேய்பொரு தட்ட களத்து.' (4)

'நளிந்த கடலுட் டிமிறிரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்கும்—தெளிந்து
தடற்றிடங் கொள்வாட் டளையவிழுந் தார்ச்சேய்
உடற்றியா ரட்ட களத்து.' (5)

'மடங்க லெறிந்து மலையுருட்டு நீர்போல்
தடங்கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கும்
மடங்கல் மறமொய்ம்பிற் செங்கட் சினமால்
அடங்காரை யட்ட களத்து.' (6)

7. ஐந்திணை ஐம்பது: இந்நூல் மாறன் பொறையனார் என்னும் புலமிக்கோர் இயற்றியது. இது திணைக்குப் பத்தாக அமைந்த ஐம்பது செய்யுட்களை உடையது. இதன் முகப்பில் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றிருக்கின்றது. இதிற்றிணைகள் **முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல்** என இம்முறையாக வைக்கப் பட்டிருக்கின்றன. இது முதலிய திணை நூல்கள் நான்

கும். கார் நாற்பதைப் போலவே கற்றற்கு எளியன வும் இனியனவுமாகிய நூற்க ளாகும்.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

பாயிரம்

'பண்புள்ளி நின்ற பெரியார் பயன்றெரிய
வண்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியாத்த
ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்
செந்தமிழ் சேரா தவர்.'

முல்லை

தலைமகளைத் தோழி பருவங் காட்டி வற்புறுத்தியது

'மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து
செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி—நல்லாய்
இயங்கெயி லெய்தவன் றூரொப்ப வீதோ
மயங்கி வலனேருங் கார்.' (1)

குறிஞ்சி

இரவுக் குறி வந்து பெயருந் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது

'கொடுவரி வேங்கை பிழைத்துக்கோட் பட்டு
மடிசெவி வேழ மிரீஇ—யடியோசை
அஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.' (2)

மருதம்

பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது

'கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரின்—றொன்றூனும்
வேறல்ல பாண வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ.' (3)

பாலை

தலைமகனது பிரிவுக் குறிப்பறிந் தாற்றளாய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது

'விலங்கல் விளங்கிழாய்! செல்வாரோ வல்லர்
அழற்பட் டசைத்த பிடியை—யெழிற்களிறு
கற்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்
டுச்சி யொழுக்குஞ் சுரம்.' (4)

நெய்தல்

அல்ல குறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய்த் தோழி தலை மகட்குச் சொல்லியது

'தெண்கடற் சேர்ப்பன் பிரியப் புலம்படைந் [டைந்தொ
தொண்டடங்கண் டுஞ்சற்க வொள்ளிழாய்!—நண்ப
சேவலுந் தன்னருகிற் சேர்க்குமா லென்கொலோ
பூந்தலை யன்றில் புலம்பு.' (5)

8. ஐந்திணை எழுபது: இந்நூல் மூவாதியார் இயற்றியது. ஒவ்வொரு திணைக்கும் பதினான்கு பதினான்காக அமைந்த எழுபது வெண்பாக்களை உடையது.

இதிற்றிணைகள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் இம்முறையால் வைக்கப்பட் டிருக்கின்றன.

* இந்நூலின் சில செய்யுட்களை அடியிற் காண்க :

குறிஞ்சி

தலைமகன் சிறைப்புறத்தானாக இயல் பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது

'சான்றவர் கேண்மை சிதைவின்றா யூன்றி
வலியாகிப் பின்னும் பயக்கு—மெலிவில்
கயந்திகழ் சோலை மலைநாடன் கேண்மை
நயந்திகழு மென்னுமென் னெஞ்சு.' (1)

முல்லை

பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது

'செங்கதிர்ச் செல்வன் சினங்காத்த போழ்தினாற்
பைங்கொடி முல்லை மணங்கமழ வண்டிமிர்
காரோ டலமருங் கார்வானங் காண்டோறும்
நீரோ டலம்வருங் கண்.' (2)

9. திணைமொழி ஐம்பது : இந்நூல் சாத்தந்தையார் மகனார் கண்ணஞ் சேந்தனார் இயற்றியது. ஒவ்வொரு திணைக்கும் பப்பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை உடையது.

இதிற்றிணைகள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என வைக்கப்பட் டிருக்கின்றன.

---

* இந்நூலின் பிரதி ஒன்று, அரசாங்கத்தாரால் எழும்பூரில் அமைக்கப்பட்டுள்ள கையெழுத்துப் புத்தகச் சாலையில் இருக்கிறது. அது மிகவும் பிழையுற்றிருக்கிறது. அதையன்றி வேறு பிரதி எனக்குக் கிடைக்காமையின் இந்நூலின் இரண்டு செய்யுட்களே ஈண்டுக் குறிக்கப்பட்டன.

இந்நூலின் சில செய்யுட்களை அடியிற் காண்க :

குறிஞ்சி

செறிப் பறிவுறீஇ வரைவு கடாயது

'கணமுகை கையெனக் காந்தள் கவின
மணமுகை யென்றெண்ணி மந்திகொண் டாடும்
விறன்மலை நாட வரவரிதாங் கொல்லோ
புனமு மடங்கின காப்பு.' (1)

பாலை

தலைமகனது செலவுணர்ந்து வேண்டாத மனத்தளாய்த் தலைமகள் தோழிக்குச் சொல்லியது

'கழுநீர் மலர்க்கண்ணாய்! கௌவையோ நிற்கப்
பொருணீரார் காதலர் பொய்த்தனர் நீத்தார்
அழிநீர வாகி யரித்தெழுந்து தோன்றி
வழிநீ ரறுத்த சுரம்.' (2)

முல்லை

தலைமகன் வரைவு மலிந்தது தோழி தலை மகட்குச் சொல்லியது

'அஞ்சனக் காயா மலராக் குருகிலை
ஒண்டொடி நல்லார் முறுவல் கவின்கொளத்
தண்கமழ் கோடல் துடுப்பீனக் காதலர்
வந்தார் திகழ்கநின் றோள்.' (3)

மருதம்

தோழி வாயில் நேர்வாள் கூறியது

'செந்தா மரைமலருஞ் செய்வய னல்லூர!
நொந்தான்மற் றுன்னைச் செயப்படுவ தென்னுண்டாங்

தந்தாயு நீயே தரவந்த நன்னலங்
கொண்டாயு நீயாயக் கால் ?' (4)

நெய்தல்

தலைமகன் பாங்கற்குச் சொல்லியது

' மயில்கொன் மடவாள்கொன் மாநீர்த் திரையுட்
பயில்வதோர் தெய்வங்கொல் கேளீர்—குயில்பயிரும்
கன்னி யிளஞாழற் பூம்பொழி னோக்கிய
கண்ணின் வருந்துமென் னெஞ்சு.' (5)

10. திணைமாலை நூற்றைம்பது : இந்நூல் தமிழாசிரியர் மகனார்—மாக்காயனார் மாணாக்கர்—கணிமேதையார் இயற்றியது. இவர், கணிமேதாவியார் என்றுங் கூறப்படுவர். ஏலாதி இயற்றிய ஆசிரியரும் இவரே. இந்நூல் ஒவ்வொரு திணைக்கும் முப்பது முப்பது அமைந்த நூற்றைம்பது வெண்பாக்களை உடையது. இதிற்றிணைகள் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என இம்முறையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

குறிஞ்சி

தலைமகளும் தோழியும் ஒருங்கிருந்த வழிச்சென்று தலைமகன் தோழியை மதியுடம்படுத்தது

' நறைபடர் சாந்த மறவெறிந்து நாளா
லுறையெதிர்ந்து வித்தியவூ ழேனற்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
வேமரை போந்தன வீண்டு ?' (1)

நெய்தல்

புணர்ந்து நீங்குந் தலைமகனைக் கண்ணுற்று நின்ற தோழி வரைவு கடாயது

'தாமரை தான்முகமாத் தண்ணடையீர் மாநீலங்
காமர்கண் ணாகக் கழிதுயிற்றுங்—காமருசீர்த்
தண்பரப்ப பாயிரு ணீவரிற்றாழ் கோதையாள்
கண்பரப்ப காணீர் கசிந்து.' (2)

பாலை

தலைமகளைத் தோழி பருவங் காட்டி வற்புறீஇயது

'எரிநிற நீள்பிண்டி யிணரின மெல்லாம்
வரிநிற நீள்வண்டர் பாடப்—புரிநிறநீள்
பொன்னணிந்த கோங்கம் புணர்முலையாய் பூந்தொடித்தோ
ளென்னணிந்த வீடில் பசப்பு ?' (3)

முல்லை

பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது

'கருங்கடன் மாந்திய வெண்டலைக் கொண்மூ
இருங்கடன்மா கொன்றான்வேன் மின்னிப்—பெருங்கட
றன்போன் முழங்கித் தளவங் குருந்தணைய
வென்கொல்யா னாற்றும் வகை.' (4)

மருதம்

பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது

'செவ்வழியாழ்ப் பாண்மகனே சீரார்தேர் கையினால்
இவ்வகை யீர்த்துய்ப்பான் றோன்றாமு—னிவ்வழியே
யாடினா னய்வய லூரன்மற் றெங்கையர்தோள்
கூடினான் பின்போது கூர்ந்து.' (5)

11. முப்பால் (திருக்குறள்) : இதற்குத் திருவள்ளுவப் பயன் என்றும் பெயர் உண்டு. இந்நூல் திரு

வள்ளுவ தேவரால் இயற்றப்பட்டது. இந்நூல் அறத்துப்பால், பொருட் பால், காமத்துப் பால் என்னு மூன்று பால்களை உடையது. ஒவ்வொரு பாலும் இயல் என்னும் பிரிவுகளையும், ஒவ்வொரு இயலும் அதிகாரம் என்னும் பிரிவுகளையும் உடையன. ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்துக் குறள் வெண்பாக்களை உடையது. இந்நூலின் மொத்த அதிகாரங்கள் நூற்று முப்பத்து மூன்றும், வெண்பாக்கள் ஆயிரத்து முந்நூற்று முப்பதுமாம். இந்நூல் தமிழ் நூற்கள் எல்லாவற்றினும் தலைமைத் தானத்தில் நிற்பதாம். இதனைப் போன்ற நூல் வேறெம்மொழியினும் இன்றென்று வேறு மொழிகளைக் கற்றுணர்ந்த பல அறிஞர்கள் கூறுகின்றார்கள். இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனுர்,. திருத்தக்க தேவர், கம்ப நாடர் முதலிய புலமிக்கோர்கள் தாம் தாம் இயற்றிய அரும்பெரு நூற்களில் இந்நூற் பாக்களின் கருத்துக்களை எடுத்தமைத் திருக்கின்றார்கள். இது தமிழர்கள் அனைவராலும் பொது மறை எனப் போற்றப்படுகின்றது. இந்நூலின் மேன்மை இச் சுருக்க நூலிற் சொல்லி அடங்குவதன்று. ‘ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி,’ என்னும் பழமொழியில் இரண்டு என்பது குறள் வெண்பாக்களினு லான இந்நூலைக் குறிப்பதே யாகும், குறள் வெண்பா இரண்டடியின் வருவ தாகலின். ‘வெண்பா இருகாலைக் கல்லானை,’ என்றதையும் நோக்குக. கடைச்சங்கப் புலவர்களாற் பாடப்பட்ட திருவள்ளுவ மாலை என்பது இந்நூலின் பெருமையையும், இதனை இயற்றிய ஆசிரியரது மேன்மையையும் கூறுவதேயாம்.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

பாயிரம்

கடவுள் வாழ்த்து

‘அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.’ (1)

வான் சிறப்பு

‘துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.’ (2)

நீத்தார் பெருமை

‘செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.’ (3)

அறன் வலி யுறுத்தல்

‘மனத்துக்கண் மாசில னாத லனைத்தறம்
ஆகுல நீர பிற.’ (4)

அறத்துப் பால்

இல்லற வியல்

இல் வாழ்க்கை

‘அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.’ (5)

துறவற வியல்

அருளுடைமை

‘தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரின்
அருளாதான் செய்யு மறம்.’ (6)

O-1,1A:9
N38

பொருட் பால்

அரசியல்

இறை மாட்சி

'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு.' (7)

ஊக்க முடைமை

'உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.' (8)

காமத்துப் பால்

களவியல்

தகையணங் குறுத்தல்

'பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையார் பேரமர்க் கட்டு.' (9)

12/1022

கற்பியல்

பிரிவாற்றமை

'செல்லாமை யுண்டேலெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.' (10)

12. திரிகடுகம்: இந்நூல் நல்லாதனார் என்னும் புலமிக்கோர் இயற்றியது. இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும், நூற் செய்யுள் நூறும் ஆக நூற்றொரு செய்யுட்களை உடையது. இந்நூலின் செய்யுட்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று பொருள்களைக் கூறுவது. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் திருமாலைக் குறித்ததா யிருக்கின்றது; ஆதலின், சிலர் இதனையும் பிற் காலத்தார் பாடிய தென்பர். இதுவும்

உரையாசிரியர்களால் தம் உரைக்கிடையில் எடுத்தாளப்பட்டிருத்தலின் அவருரை பொருந்தாது என்க. பொருள் வைப்பை நோக்குகையில் ஒவ்வொரு செய்யுளிலும் நந்நான்கு பொருளை வைத்திருக்கும் நான் மணிக் கடிகைக்கும், ஐவைந்து பொருளை வைத்திருக்குஞ் சிறுபஞ்ச மூலத்திற்கும், அவ்வாறு பொருளை வைத்திருக்கும் ஏலாதிக்கும், மும்மூன்று பொருளை வைத்திருக்கும் இந் நூல் முந்தியதா யிருக்கும் எனத் தோன்றுகின்றது.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

கடவுள் வாழ்த்து

'கண்ணகன் ஞால மளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ—நண்ணிய
மாயச் சகட முதைத்ததூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.' (1)

நூல்

'கல்லார்க் கினனா யொழுகுதலுங் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.' (2)

'பகைமுன்னர் வாழ்க்கை செயலுந் தொகைநின்ற
பெற்றத்துட் கோலின்றிச் சேறலும்—முற்றன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலு மிம்மூன்றும்
சாவ வுறுவான் றொழில்.' (3)

'தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணாதான்

கோளாள் னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது.' (4)

'ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலுங் கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலு மிம்மூன்றும்
எல்லார்க்கு மின்னா தன.' (5)

13. ஆசாரக் கோவை: இந்நூல் பெருவாயின் முள்ளியார் என்னும் புலமிக்கோர் இயற்றியது. இது தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும், நூற்செய்யுள் நூறும் ஆக நூற்றொரு வெண்பாக்களை உடையது; வடமொழியின்கண் இருடிகள் கூறிய ஆசாரங்களைத் தொகுத்துக் கூறுவது. இதனை,

'ஆரெயின் மூன்று மழித்தான் அடியேத்தி
ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான் ஆசாரம்
யாரும் அறிய அறனாய மற்றவற்றை
ஆசாரக் கோவை எனத்தொகுத்தான்; தீராத்
திருவாயி லாய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளியென் பான்.'

என்றதனா லறிக. இந்நூலை இறுதியாகப் பதிப்பித்தவராகிய புரோபெசர், திரு - செல்வ கேசவராய முதலியார் அவர்கள், எம்.எ., இதைப் பற்றி முகவுரையில் எழுதி யுள்ளதை அடியிற் காண்க:

"இந்நூலுக்கு ஆதாரம் ஆரிடம் என்பது தற்சிறப்புப் பாயிரத்தில் குறித் திருக்கின்றது. இலக்கண விளக்க ஆசிரியர் வழி நூலை விளக்கும் சூத்திர வுரையில் மொழிபெயர்ப்பு நூலுக்கு ஆசாரக் கோவையை உதாரணங் காட்டி யிருக்கின்றார். இந்

நூலிற் கூறிய ஆசாரங்கள் பெரும்பான்மையாய் வட மொழியிலுள்ள சுக்ர ஸ்ம்ருதியிலிருந்து தொகுத்தவை என வட நூற்புலவர் கூறுகின்றனர். மன்னரைச் சேர்ந் தொழுகும் ஆசாரங்கள், தௌமியர் பாண்ட வர்க் குபதேசித்தவற்றை ஒட்டி யிருப்பனவாகக் காண்கின்றன. நுதலிய பொருளால் இந்நூல் ஆசா ரக் கோவை எனப் பெயர் பெற்றது.''

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

'நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.' (1)

'பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.' (2)

'வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.' (3)

'அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர்இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவருங் கண்ட நெறி.' (4)

'நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்
துண்டார உண்டார் எனப்படுவார் அல்லாதார்ரே

> உண்டார்போல் வாய்பூசிச் செல்வர்; அதுவெடுத்துக்
> கொண்டார் அரக்கர் குறித்து.' (5)

14. பழமொழி : இந்நூல் பாண்டிய நாட்டைச் சேர்ந்த மூன்றுறை என்னும் பதியின் அரசர் இயற்றியது. இது நானூறு வெண்பாக்களை உடையது. இதனைப்பற்றிப் புரோபேசர், திரு-செல்வ கேசவராய முதலியார் அவர்கள், எம்.எ., தாம் பதிப்பித்த இந் நூலின் முகவுரையில் கூறியதை அடியிற் காண்க :

"அக்காலத்து நூல்களிலும் இடைக்காலத்து நூல்களிலும் பழமொழிகள் ஒவ்வோரிடத்து வழங்கப் பெற்றுள்ளன. ஆயினும், பழமொழிகளின் சார்பை முற்றுங் கொண்டு பொரு ளுணர்த்திய வேறு நூல் எதுவும் இவ்வாசிரியருக்கு முன் இருந்ததாகப் புலப் படவில்லை. இந்த முதன்மை இந்நூலுக்கே உரியது.

"இந்நூலில் காட்டிய பழமொழிகளில் எதுகை மோனை முதலியவற்றிற் கேற்ப மாறுதலுற்றிருப்பன பல; வழக்கிழந்தன வர்கக் காண்பவை சில. சில பழமொழிகளைச் சில பொருள்களோடு பொருத்தியிருக்குமாறு மிகவும் வியக்கத் தக்கது. சில பழமொழிகளின் அக்காலப் பிரயோகம் நன்கு விளங்காமையால், உத்தேச மாத்திரமாகவே அவைகளைப் பொருத்தியறிதல் கூடும். எடுத்துரைக்கும் பொருள்களுக்குச் சில பழமொழிகள் மேற்கோள்களாகின்றன. எடுத்துரைக்கும் பொருள்கள் சில பழமொழிகளுக்கு எடுத்துக் காட்டுக ளாகின்றன. சில பழமொழிகள் உவமானங்க ளாகின்றன. சிற்சில பழ மொழிகள் ஒப்புமைக் கூட்டத்தில் அடங்கி விடுகின்றன."

இந்நூலின் சில செய்யுட்களை அடியிற் காண்க.

சிறப்புப் பாயிரம்

'பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும்—கொண்டினிதா [ன்
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தா
இன்றுறை வெண்பா இவை.' (1)

நூல்

'ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்று மெனவும் புணருமோ?—ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.' (2)

'சொற்றொறுஞ் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறுங் கல்லாதே னென்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித் துழன்றொன் றறியுமேல்
கற்றொறுந்தான் கல்லாத வாறு.' (3)

'விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கமின் றென்றனைத்துந் தூக்கி—விளக்கு
மருள்படுவ தாயின், மலைநாட, என்னை
பொருள்கொடுத்துக் கொள்ளார் இருள்.' (4)

'ஆற்றவுங் கற்றார் அறிவுடையர் அஃதுடையர்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை; அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்.' (5)

'உணற்கினிய இன்னீர் பிறிதுழிஇல் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.' (6)

15. சிறுபஞ்சமூலம்: இந்நூல் காரியாசான் என்னும் புலமிக்கோர் இயற்றியது. இவ்வாசிரியரும்

தமிழாசிரியர் மகனார் மாக்காயனார் என்பவரின் மாணக்கர் ஆவர். இது தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும், நூற்செய்யுள் நூற்றுமூன்றும், பாயிரச் செய்யுள் ஒன்றும் ஆக நூற்றைந்து வெண்பாக்களை உடையது. இந்நூலில் இடையில் எண்பத்தேழாவது செய்யுளிலிருந்து தொண்ணூற்றோராவது செய்யுள் வரையினும் ஐந்து செய்யுட்களும், தொண்ணூற்றிரண்டாவது செய்யுளின் முதலடியும் காணப்பட்டில. இதில் பா ஒவ்வொன்றும் ஐவைந்து பொருள்களைக் கூறுவது.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க :

சிறப்புப் பாயிரம்

'மல்லிவர்தோண் மாக்காயன் மாணக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீக்கும் புாங்கினாற்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்.' (1)

தற்சிறப்புப் பாயிரம்

'முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து—முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா வுரைப்பன் சில. (2)

நூல்

'பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்—அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவியிற் குய்த்து.' (3)

'கல்லாதான் ஞூன்காணு நுட்பமுங் காதிரண்டும்
இல்லாதா ளேக்கழுத்தஞ் செய்தலு—மில்லாதான்
ஒல்லாப் பொருளில்லார்க் கீத்தளியா னென்றதும்
நல்லார்கள் கேட்பி னகை.' (4)

'சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.' (5)

'பூத்தாலுங் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூ றேற்ருதார்—பாத்திப்
புதைத்தாலு நாருத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு.' (6)

16. இன்னிலை: இந்நூல் பொய்கையார் என்னும் பெரியார் இயற்றியது; மதுரை யாசிரியர் பூதஞர் தொகுத்தது. பாரதம் பாடிய பெருந்தேவஞர் எட்டுத்தொகை நூற்களிற் பலவற்றிற் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இயற்றிச் சேர்த்திருப்பது போல இதினுங் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இயற்றிச் சேர்த்திருக்கின்ருர். இந்நூல் அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டிலக்கப்பால் என நான்கு பால்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இஃது அறப்பாலில் பத்தும், பொருட்பாலில் ஒன்பதும், இன்பப்பாலில் பன்னிரண்டும், வீட்டிலக்கப் பாலில் பதினன்குமாக அமைந்த நாற்பத்தைந்து வெண்பாக்களை உடையது. இந்நூலின் பால்கள் நான்கனுள் வீட்டிலக்கப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரண்டியல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

சிலர், 'நாலடி நான்மணி' என்னும் வெண்பாவின் ஈற்று இரண்டடியை, 'இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு,' எனவும், 'மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு,' எனவும் பாடங் காட்டி, இன்னிலையை நீக்கிக் கைந் நிலை என்பதைக் கைந்நிலை என்னும் நூலெனக் கொண்டு அதனை மற்றவற்றோடு கூட்டிப் பதினெண் கீழ்க்கணக்கை நிரப்புவர். 'நாலடி' என்னும் வெண் பாவை உற்று நோக்குவார்க்கு அது பொருந்தாமை நன்கு விளங்கும். என்னெனின், கைந்நிலை என்பதே அவற்றிற் சேர்ந்த நூலாயின், 'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப் பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்,' என இரண்டடியில் பதினைந்து நூற்களை அடக்கிக் கூறிய அவ்வெண்பா உடையார் எஞ்சிய மூன்று நூற்களை ஓரடியில்

'கைந்நிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே'

எனக் கூறி,

'கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு,'

என்றேனும்,

'கண்ணிலைய வாங்கீழ்க் கணக்கு,'

என்றேனும் நான்காமடியை முடிக்க வகையறியாமல்,

'மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு,'

என்றேனும்,

ஆனால், இந்நூற்களை எல்லாம் இயற்றிய பொய்கை யார் ஒருவரா, இருவரா என்னும் ஐயம் பலர்க்குத் தோன்றி யிருக்கின்றது. இவற்றுள் முதற்றிரு வந்தாதியையும், இன்னிலை என்னும் இந்நூலையும் இயற்றியருளிய பொய்கையார் ஒருவரே என்பதை ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய உரையுடன் பதிப்பித்த இன்னிலை நூலின் முகவுரையில் நன்கு கூறி யிருக்கின்றனர்.

இயற்பாவின் முதற் றிருவந்தாதியையும் இன்னிலை யையும் இயற்றியருளியவர் ஒருவரே என்பதில் ஐயுறவில்லை. இனி, களவழி நாற்பதையும், புறநானூற் றுச் செய்யுட்களையும், யாப்பருங்கல விருத்தியில் பொய்கையார் வாக்கு என்று வந்துள்ள செய்யுட்களை யும் இயற்றியவர் இவர் தாமோ, அப்பெயர் கொண்ட மற்றொரு புலமிக்காரோ' என்பன நன்கு ஆய்தற் குரியன. ஆதலின், இச்சுருக்க நூலின்கண் அதனை அங்ஙனம் ஆய்ந்துரைத்தல் இயலாது.

இந்நூலின் சில செய்யுட்களை அடியிற் காண்க :

கடவுள் வாழ்த்து

'வேலற் றரீஇய விரிசடைப் பெம்மான்
வாலிழை பாகத் தமரிய கொழுவேற் (1)
கூற்றங் கதழ்ந்தெறி கொன்றையன்
கூட்டா வுலகம் கெழீஇய மலிந்தே.'

பாரதம்பாடிய பெருந்தேவனார்

'அன்றமரிற் சொற்ற வறவுரைவீழ் தீக்கழுது
மன்றுயர்ந்து போந்த வகைதேர்மின்—பொன்று
வறமறிந்தோன் கண்ட வறம்பொருள்கேட் டல்லன்
மறமொறுக்க வாய்த்த வழக்கு.' (2)

‘மெய்வலியும் சென்னிலையும் வாழ்நாளும் தூவொழுக்
மெய்யா வளிக்கும் வெறுக்கையிலார்—வையத்துப் [கு
பல்கிளையும் வாடப் பணையணைதோள் செய்திரங்க
வொல்குயிர்நீத் தாரு நரகு.’ (3)

‘துணையென்ப காம விருந்துய்ப்பார் தோமி
லிணைவிழைச்சின் மிக்காகா ராகல்—புணைதழீஇக்
கூட்டும்; கடுமிசையான் கட்டியிற் கொண்டற்றால்
வேட்டபோழ் தாகு மணி.’ (4)

‘காதல் விரிநிலத் தாரா வகைகாணுர்
சாதனன் றென்ப தகைமையோர்—காதலு
மாக்கி யளித்தழிக்குங் கந்தழியின் பேருருவே
நோக்கிலரை நோவ தெவன்?’ (5)

‘ஐங்குரவ ரோம்ப வினனீக்கல் சேர்ந்தோர்க்கும்
பைங்கூழ் களைகணுப் பார்த்தளித்த னையுளத்தர்க்
குற்ற பரிவீர்த்த லெண்ணுன் கறநெறியி
லுற்ற புரிதல் கடன்.’ (6)

17. முதுமொழிக் காஞ்சி: இந்நூல் மதுரைக் கூடலூர்க் கிழார் என்னும் புலமிக்கோர் இயற்றியது; ஒவ்வொரு பிரிவினும் பப்பத்துப் பாக்கள் அமைந்த பத்துப் பிரிவுகளை உடையது. அப் பத்துப் பிரிவுகளாவன: 1. சிறந்தபத்து, 2. அறிவுப்பத்து, 3. பழியாப் பத்து, 4. துவ்வாப்பத்து, 5. அல்லபத்து, 6. இல்லை பத்து, 7. பொய்ப்பத்து, 8. எளியபத்து, 9. நல்கூர்ந்தபத்து, 10. தண்டாப் பத்து என்பன. ஒவ்வொரு பத்தும் முதற்செய்யுள் குறட்டாழிசை யாகவும் மற்றை ஒன்பது செய்யுட்களும் நூற்பாவாகவும் அமைந்த பத்துச் செய்யுட்களை யுடையது.

இந்நூலின் சில செய்யுட்களை அடியிற் காண்க:

‘ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.’ (1)
‘காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.’ (2)
‘மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.’ (3)
‘வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.’ (4)
‘இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.’ (5)
‘நலனு டைமையி னாணுச் சிறந்தன்று.’ (6)
‘குலனு டைமையிற் கற்புச் சிறந்தன்று.’ (7)
‘கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.’ (8)
‘சென்றோரைச் செறுத்தலிற் றற்செய்கை
[சிறந்தன்று.’ (9)
‘முற்பெரு கலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று.’ (10)

18. ஏலாதி: இந்நூல் தமிழாசிரியர் மகனார்—மாக்காயனார் மாணாக்கர் - கணிமேதாவியார் இயற்றியது. இது சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும், கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும், நூற் செய்யுள் எண்பத்தொன்றும் ஆக எண்பத்து மூன்று செய்யுட்களை உடையது.

இந்நூலின் செய்யுட்கள் சிலவற்றை அடியிற் காண்க:

சிறப்புப் பாயிரம்

‘இல்லறநூ லேற்ற துறவறநூ லேயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து—நல்ல
அணிமேதை யாய்! நல்ல வீட்டு நெறியும்
கணிமேதை செய்தான் கலந்து.’ (1)

கடவுள் வாழ்த்து

'அறுநால்வ ராய்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப்—பெறுநால்
மறைபுரிந்து வாழுமேன் மண்ணொழிந்து விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்த வியல்பு.' (2)

'கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலி பூங்கோதாய் !
விண்ணவர்க்கு மேலாய் விடும்.' (3)

'இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின்—நடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ்சொற் காணிற் கலவியின்கண்
விண்டவர்நூல் வேண்டா விடும்.' (4)

'கற்றாரைக் கற்ற துணரார் எனமதியார்
உற்றாரை அன்னண மோராமல்—அற்றார்கட்
குண்டி யுறையுள் உடுக்கை யிவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.' (5)

'செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமும் சீரிலா
வெங்கோலன் கீழ்க்குடிகள் வீந்தகவும்—வெங்கோல்
அமைச்சர் தொழிலு மறியலமொன் றுற்ற
எனைத்து மறியாமை யான்.' (6)

இப்பதினெண் கீழ்க்கணக்கு நூற்களுள்

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இனியது நாற்பது
4. இன்னா நாற்பது
5. திருக்குறள்
6. திரிகடுகம்
7. ஆசாரக்கோவை
8. பழமொழி
9. சிறுபஞ்சமூலம்
10. இன்னிலை
11. முதுமொழிக்காஞ்சி
12. ஏலாதி

என்னும் பன்னிரண்டு நூற்களும் நீதி நூற்கள் எனவும், மற்றை நூற்களுள், 1. கார்நாற்பது, 2. ஐந் திணை ஐம்பது, 3. ஐந்திணை எழுபது, 4. திணை மொழி ஐம்பது, 5. திணைமாலை நூற்றைம்பது என் னும் ஐந்து நூற்களும் அகப்பொருள் இலக்கியமாகிய நூற்கள் எனவும், களவழி நாற்பது என்பது புறப் பொருள் இலக்கிய நூல் எனவும் அறிக.

'பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் முற்றின.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் : இந்நூல் சேரநாட்டிலே வஞ்சிமா நகரத்திருந்து அரசு புரிந்த சேரலாதன் என்னும் மன் னர் மன்னனுடைய புதல்வரும் வென்றி மிக்க வீர னாகிய சேரன் செங்குட்டுவனுடைய இளவலுமாகிய இளங்கோவடிகள் என்னும் புலமிக்கோரால் இயற்றப் பட்டு மதுரைக் கூலவாணிகன் சாத்தனாராற் கேட் கப்பட்டது. இது வணிகர் பிரானும் உயர் குணங்கள் பலவும் ஒருங்கமையப் பெற்றவனுமாகிய கோவலன் றன் சரிதையைக் கூறும் பெருங்காப்பியம். இதனை நாடகக் காப்பியம் என்றுங் கூறுவர். இதனை அறி ஞர்கள் கண்ணகியின் ஏற்றத்தைக் கூறும் நூல் என்றே கூறுவார்கள். இஃது இராமாயணம் சீதாப் பிராட்டியாரின் ஏற்றத்தைக் கூறுவது என்று கூறுதல் போன்றது. இது முதலிலுள்ள பதிகம் நீங்கலாகப் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண் டம் என்னு மூன்று பெரும்பிரிவுகளையும், மங்கல வாழ்த்துப்பாடல் முதலாகிய முப்பது உட்பிரிவுகளை யும் உடையது. அம்முப்பது பிரிவுகளுள் பெரும்பா

லன கதையைத் தழுவிப் பெயரிடப்பட் டிருக்கின்றன அப்பிரிவுகளில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அத்தியாயம்போல் அமைந்திருக்கின்றது. அப்பிரிவுக்ளாவன : 1. மங்கல வாழ்த்துப் பாடல், 2. மனையறம் படுத்த காதை, 3. அரங்கேற்று காதை, 4. அந்தி மாலைச் சிறப்புச் செய் காதை, 5. இந்திர விழவூ ரெடுத்த காதை, 6. கடலாடு காதை, 7. கானல் வரி, 8. வேனிற் காதை, 9. கனாத்திற முரைத்த காதை, 10. நாடு காண் காதை, 11. காடு காண் காதை, 12. வேட்டுவ வரி, 13. புறஞ்சேரி இறுத்த காதை, 14. ஊர்காண் காதை, 15. அடைக்கலக் காதை, 16. கொலைக்களக் காதை, 17. ஆய்ச்சியர் குரவை, 18. துன்ப மாலை, 19. ஊர் சூழ்வரி, 20. வழக்குரை காதை, 21. வஞ்சின மாலை, 22. அழற்படுகாதை, 23. கட்டுரை காதை, 24. குன்றக் குரவை, 25. காட்சிக் காதை, 26. கால்கோட் காதை, 27. நீர்ப்படைக் காதை, 28. நடுகற் காதை, 29. வாழ்த்துக் காதை, 30. வரந்தரு காதை என்பன.

இந்நூல் பெரும்பான்மையும் அகவற்பாக்களால் ஆனது. இதில் வேறு வகைப் பாட்டுகளும் உரையும் இடையிடையே விரவி வருகின்றன. இதனை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் கூறுவர். இந்நூலும் மணிமேகலையும் பஞ்ச காவியங்களுட் சேர்ந்தவை. இவை பஞ்ச காவியங்களுள் மற்றையவற்றின் காலத்தான் முந்தியவை; பொருளமைதியானுஞ் சிறந்தவை. இந்நூலின் ஒரு பாட்டின் சில அடிகளை அடியிற் காண்க :

நான்காவது

அந்தி மாலைச் சிறப்புச்செய் காதை

'விரிகதிர் பரப்பி உலகமுழு தாண்ட
ஒருதனித் திகிரி யுரவோற் காணேன்
அங்கண் வானத் தணிநிலா விரிக்குந்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லெனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீ ராடை யிருநில மடந்தை
அரசுகெடுத் தலம்வரு மல்லற் காலைக்
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொ டொருதிறம் பற்றி
வலம்படு தானை மன்ன ரில்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரிற்
றூழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்
குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
அறுகாற் குறும்பெறிந் தரும்புபொதி வாசஞ்
சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற
வெல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென.'

மணி மேகலை

மணி மேகலை: இந்நூல் மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் என்னும் புலமிக்கோரால் இயற்றப்பட்டுச் சேரன் செங்குட்டுவன் என்னும் சேர அரசன் றன் இளவலாகிய இளங்கோவடிகளாற் கேட்கப்பட்டது. இந்நூலாசிரியர் சீத்தலைச் சாத்தனார் என்றும் கூறப்படுவர்.

இந்நூல், பதிகப் பாட்டு ஒன்றும், நூற்பாட்டு முப்பதுமாகிய முப்பத்தோர் அகவற் பாக்களை உடையது. அம்முப்பது பாட்டுகளுள் ஒவ்வொன்றுஞ் சிலப்பதிகாரம்போல் கதையைத் தழுவிப் பெயரிடப்பட்டு, ஒவ்வோர் அத்தியாயம்போல் அமைந்திருக்கின்றது.

அவை : 1. விழாவறை காதை, 2. ஊரலர் உரைத்த காதை, 3. மலர் வனம் புக்க காதை, 4. பளிக்கறை புக்க காதை, 5. மணி மேகலா தெய்வம் வந்துதோன்றிய காதை, 6. சக்கர வாளக் கோட்ட முரைத்த காதை, 7. துயிலெழுப்பிய காதை, 8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை, 9. பீடிகை கண்டு பிறப் புணர்ந்த காதை, 10. மந்திரங் கொடுத்த காதை, 11. பாத்திரம் பெற்ற காதை, 12. அறவணர்த் தொழுத காதை, 13. ஆபுத்திரன்றிற மறிவித்த காதை, 14. பாத்திர மரபு கூறிய காதை, 15. பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை, 16. ஆதிரை பிச்சை யிட்டகாதை, 17. உலக வறவி புக்க காதை, 18. உதய குமாரன் அம்பலம் புக்க காதை, 19. சிறைக் கோட்டம் அறக் கோட்ட மாக்கிய காதை, 20. உதய குமாரனைக் காஞ்சனன் வாளால் எறிந்த காதை, 21. கந்திற்பாவை வருவதுரைத்த காதை, 22. சிறை செய் காதை, 23. சிறை வீடு காதை, 24. ஆபுத்திரனுடைந்த காதை, 25. ஆபுத்திரனோடு மணிபல்லவ மடைந்த காதை, 26. வஞ்சிமாநகர் புக்க காதை, 27. சமயக் கணக்கர்தந் திறங் கேட்ட காதை, 28. கச்சிமாநகர் புக்க காதை, 29. தவத் திறம் பூண்டு தருமங் கேட்ட காதை, 30. பவத்திற மறுகெனப் பாவை நோற்ற காதை என்பன.

இந்நூல் கோவலனுடைய காதற்கணிகையின் செல்வப்புதல்வியும், தன் தந்தை பாண்டியனுற் கொல்விக்கப்பட்டதைக் கேட்டு உலக இன்பங்களை இளமைப் பருவத்திலேதானே துறந்து தவ ஒழுக்கத்தை மேற்கொண்டவளுமாகிய மணிமேகலையின் இனிய சரிதையைக் கூறுவது. இது பஞ்ச காவியங்களுள், ஒன்ருகிய பெருங்காவியம். இந்நூலால் தமிழர்களின் நாகரிக நிலைமைகள் பல நன்கு விளங்கும்.

இந்நூலின் ஒரு பாட்டின் சில அடிகளை அடியிற் காண்க :

நான்காவது

பளிக்கறை புக்க காதை

'பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டின நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பனிமல ரிடைநின்
ரெருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்ன மாங்கினி திருப்பக்
கரைநின் ருலு மொருமயி றனக்குக்
கம்புட் சேவற் கனைகுரன் முழவாக்
கொம்ப ரிருங்குயில் விளிப்பது காணய்
இயங்குதேர் வீதி யெழுதுகள் சேர்ந்து
வயங்கொளி மழுங்கிய மாதர்நின் முகம்போல்

விரைமலர்த் தாமரை கரைநின் ருேங்கிய
கோடுடைத் தாழைக் கொழுமட லவிழ்ந்த
வால்வெண் சுண்ண மாடிய திதுகாண்.'

இறையனர் அகப்பொருள்

இறையனர் அகப்பொருள் : இந்நூல் இறையனரால் அருளிச் செய்யப்பட்டது. ஈண்டு இறையனர் என்றது மதுரையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் சோமசுந்தரக் கடவுளை என்பர். இறையனர் என்பார் சோமசுந்தரக் கடவுள் அல்லர்; ஒரு புலவரே என்பர் சிலர். இஃது அகப்பொருள், புறப்பொருள் என்னும் பொருள்வகை இரண்டனுள் அகப்பொருள் இலக்கணங் கூறுவது. இந்நூல் அறுபது சூத்திரங்களை உடையது; தமிழ்ப்புலவர்கள் யாவராலும் பொன்னேபோற் போற்றப்படுவது. இதற்குள்ள உரை மிகச்சிறந்தது. அது கடைச் சங்கத்துப் புலவர்களுள் ஒருவராகிய **மதுரைக் கணக்காயனர் மகனர்—நக்கீரனர்** இயற்றிய தென்பர்.

இதன் சூத்திரங்கள் சிலவற்றை அடியிற்காண்க :

'அன்பி னைந்திணைக் களவெனப் படுவது
அந்தண ரருமறை மன்ற லெட்டினுட்
கந்தருவ வழக்க மென்மனர் புலவர்.' (1)

'அதுவே,
தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்.' (2)

'முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி.' (3)

'ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேத்துத்
தான்குறை யுறுதல் தோழிக் கில்லை.' (4)

'முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றாது.' (5)

திருவள்ளுவ மாலை

திருவள்ளுவ மாலை : இந்நூல் நாமகளும், இறையனாரும், உக்கிரப் பெருவழுதியாரும், கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தோன்பதின்மரும் பேருக் கொன்றாக இயற்றிய ஐம்பத்திரண்டு வெண்பாக்களை உடையது. அசரீரி கூறியதைக் கூறும் வெண்பா ஒன்றும் இதன் முகப்பில் இருக்கின்றது. அதனையும் கூட்டித் திருவள்ளுவ மாலையின் செய்யுட்கள் ஐம்பத்து மூன்று என்று கொள்ளுதலு முண்டு.

நாற்பத் தொன்பது புலவர்களாவார் : 1 கபிலர், 2. பரணர், 3. நக்கீரர், 4. மாமூலனார், 5. கல்லாடர், 6. சீத்தலைச் சாத்தனார், 7. மருத்துவன் தாமோதரனார், 8. நாகன் தேவனார், 9. அரிசில் கிழார், 10. பொன் முடியார், 11. கோதமனார், 12. நத்தத்தனார், 13. முகையலூர்ச் சிறு கருந்தும்பியார், 14. ஆசிரியர் நல்லந்துவனார், 15. கீரந்தையார், 16. சிறு மேதாவியார், 17. நல்கூர் வேள்வியார், 18. தொடித்தலை விழுத்தண்டினார், 19. வெள்ளி வீதியார், 20. மாங்குடி மருதனார், 21. எறிச்சலூர் மலாடனார், 22. போக்கியார், 23. மோசி கீரனார், 24. காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார், 25. மதுரைத் தமிழ் நாகனார், 26. பாரதம் பாடிய பெருந்தேவனார், 27. உருத்திர சன்ம கண்ணர், 28. பெருஞ்சித்திரனார்,

29. நரி வெரூஉத்தலையார், 30. மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார், 31. மதுரை யறுவை வாணிகன் இளவேட்டனார், 32. கவி சாகரப் பெருந்தேவனார், 33. மதுரைப் பெருமருதனார், 34. கோவூர் கிழார், 35. உறையூர் முதுகூற்றனார், 36. இழிகட் பெருங்கண்ணனார், 37. செயிர்க் காவிரியார் மகனார்-சாத்தனார், 38. செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார், 39. வண்ணக்கஞ் சாத்தனார், 40. களத்தூர் கிழார், 41. நச்சுமனார், 42. அக்காரக்கனி நச்சுமனார், 43. நப்பாலத்தனார், 44. குலபதி நாயனார், 45. தேனீக்குடிக் கீரனார், 46. கொடிஞாழன் மணி பூதனார், 47. கவுணியனார், 48. மதுரைப் பாலாசிரியனார், 49. ஆலாங்குடி வங்கனார் என்பவர்கள்.

இந்நூலின் இரண்டு செய்யுட்களை அடியிற் காண்க:

'பூவிற்குத் தாமரையே' பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற் கருமுனியா யானைக் கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.' (1)

—கவிசாகரப் பெருந்தேவனார்

'அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.' (2)

—கோவூர் கிழார்

பெருந்தேவனார் பாரதம்: கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரில் பெருந்தேவனார் என்னும் பெயரை யுடைய புலமிக்கோர் இருவர் இருந்தனர். அவருள் ஒருவர் பாரதத்தைத் தமிழில் வெண்பாவாற்

பாடியவர்.. அதனுல் அவர் பாரதம்பாடிய பெருந்தேவனுர் என வழங்கப்பட்டனர். மற்ெறாருவர் கவிசாகரப் பெருந்தேவனுர் என்பவர். அப்பாரதம் இறந்துவிட்டது. இப்பொழுது வழங்கும் பாரதவெண்பா கடைச்சங்கக்காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின் தமிழ் நாட்டை வென்று தங்கள் தனிச்செங்கோல் செலுத்திய பல்லவ அரசர்களுள் நந்திவர்மன் என்னும் பெயரையுடையவர்களாயிருந்த சிலருள் ஓரரசன் காலத்தில் இருந்த மற்ெறாரு பெருந்தேவனுரால் இயற்றப்பட்டது. இப்பெருந்தேவனுர் கூறிய பரிபாலகர் புகழில் அவ்வரசனைப் புகழ்ந்து கூறி யிருக்கின்றார். இவர் கூறிய பரிபாலகர் புகழை அடியிற் காண்க:

'வண்மையாற் கல்வியான் மாபலத்தா லாள்வினையால்
உண்மையாற் பாரா ளுரிமையாற்-றிண்மையாற்
றேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றின் வென்றானே
டியார்வேந்த ரேற்பா ரெதிர்.'

"என்பது எல்லையி னிறைந்த எண்டிசை யுலகத்து மலையுமலையு முள்ளிட்ட மண்மிசை முழுது மறையது வளர்க்க அல்லி, பீடத் தரிவைக்குத் தன் அழகமர் தோளே யாலய மாக்கிய பல்லவர் கோமான் பண்டிதராலயனைப் பரவினேம்."

திருவாளர், தஞ்சை, கே-வி-ஸ்ரீநிவாசப் பிள்ளை அவர்கள் எழுதிய தமிழ் வரலாற்றில் பாரதம் பாடிய பெருந்தேவனுரைப் பற்றிக் கூறி யிருப்பதனுல் மேற் கூறியவை இனிது விளங்கும். அவர் கூறி யிருப்பதை அடியிற் காண்க:

"பாரதம் பாடிய பெருந்தேவனார்:—சங்க காலத்தில் பாரதத்தைச் செய்தவர் இவர். இவர் மொழி பெயர்ப்பு இக்காலத்துக் கிடைக்கவில்லை. வேள்விக்குடி சாஸன முதலியவற்றிற் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவராகச் சுட்டப்படுபவர் இவரே. இக்காலத்தில் வழங்கும் பாரத வெண்பாவைப் பாடிய பெருந்தேவனார் வேறு. அவரைச் சிலர் இரண்டாவது நந்தி வர்மன் காலத்தினர் என்றும், சிலர் மூன்றாவது நந்தி வர்மன் காலத்தினர் என்றும் கூறுவர். அவர் கூற்றின்படி இவர் கி. பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டினர் ஆவர். ......கி. பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதியிலோ அதற்குப் பின்னரோ ஒரு பெருந்தேவனார் இருந்துளார். அவர் வீர சோழியத்திற்கு உரை எழுதியவர்... சங்க காலத்தில் பெருந்தேவனார் எனப் பெயரிய வேறு புலவர் இருந்தனர் என்றும் தெரிகிறது."

பன்னிரு பாட்டியல்: இது, பொய்கையார், பரணர், இந்திர காளியார், அவிநயனார், அகத்தியர், கல்லாடர், கபிலர், சேந்தம்பூதனார், கோவூர்க்கிழார், சீத்தலையார், மாபூதனார், பல்காயனார், பெருங்குன்றூர்க் கிழார் என்னுமிவர்கள் இயற்றிய பாட்டியல்களினின்று திரட்டிய சூத்திரங்களை யுடையது என்ப. இதன் தொன்மையிற் பலர் ஐய முறுகின்றனர். ஆயினும், இதனாலேதான் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பவற்றின் இலக்கணங்கள் இனிது விளங்குவன வாயின.

நூல் முற்றிற்று.

அநுபந்தம்

1. முரஞ்சியூர் முடிநாகராயர்:—இப்பெயர்கொண்ட புலமிக்கோர் இருவர் இருந்திருக்கின்றனர். அவருள் ஒருவர் முதற் சங்கத்துப் புலவர்களுள் ஒருவரா யிருந்தவர். மற்றொருவர் பாண்டவர்களும், துரி யோதனன் முதலிய நூற்றுவரும் தம் பெரும் படைத் திரளோடு கூடிப் போர் புரிகையில் அவ் விருபடைகளுக்கும் உணவளித்தவனாகிய **சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப்** பாடியவர். முதற் சங்கத் திருந்தவரும் உதியன் சேரலாதனைப் பாடியவரும் ஒருவரே என்ன லாகாதோ எனின், முதற்சங்கம் இராமயணத்திற்கு முற்பட்ட காலத் திருந்தது ஆதலாலும், பாரதம் இராமாயணத்திற்கு மிகவும் பிற்பட்ட தாதலாலும் அங்ஙனம் கொள்ளு தல் வலியுடையதன்று என்க.

2. புலவராற்றுப்படை:—திருமுருகாற்றுப்படை யைப் பற்றிக் கூறுகையில் கந்தழியாற்றுப்படை என்பதோர் ஆற்றுப் படையின்று; புலவராற்றுப் படை என்பதுதான் உண்டென்பன விளக்கப்பட்டன. இலக்கண விளக்கத்தினும் அங்ஙனமே புலவராற்றுப் படையே கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:

> 'விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முழை
> அரும்பொற் புலவரை யாற்றுப் படுத்தலும்.'

(இலக்கண விளக்கம்—பொ. அ. பு. இ. 12. சூ.)

இதற்கந்நூலிற் காட்டப்பட்ட உதாரணம் வருமாறு:

> 'வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்வி
> னெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்

கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
அருளீயு மாழி யவன்.'

(புறப்பொருள் வெண்பா மாலை—பாடாண் படலம் 42-ம் செய்யுள்)

3. கோடி நிலை, கந்தழி, வள்ளி

'கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.'

(தொல்காப்பியம்—போ. அ. பு. இ. 33ம்-சூ.)

இதற்கு இளம்பூரணர் உரை வருமாறு :

"இது, சார்ந்து வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) வடுநீங்கு சிறப்பின் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற முதலன மூன்றும்—குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்—பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி வருங் காலத்துக் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும்.

உதாரணம்

'பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல—ஓங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி.'

இது கொடி நிலை.

(பு. வெ. மா. பா. ப. 39-ம்-செ)

'அன்றெறிந் தானு மிவனு லரண்வலித்
தின்றிவன் மாறு யெதிர்வார்யார்—கன்றும்
அடையார் மணிப்பூ ணடையாதார் மார்பிற்
சுடராழி நின்றெரியச் சோ.'

இது கந்தழி.

(பு. வெ. மா. உழிஞை. ப. 7-ம்-செ)

வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்துழிக் கண்டு கொள்க"

இனி மேற் காட்டிய சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரை வருமாறு :

"இது தேவரு மக்களு மெனப் பகுத்த முறைமையானே அப்பகுதி யிரண்டும் கூறி, இன்னும் அத்தேவரைப்போல் ஒருவழி பிறக்கும் பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண்டிணைக்குரியர் என்கின்றது.

(இ-ள்.) கொடிநிலை—கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் ; கந்தழி—ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்; வள்ளி—தண்கதிர் மண்டிலம்; என்ற வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்—என்று சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே—முற்கூறிய அமரரோடே கருது மாற்றாற் றோன்றும்.

உதாரணம்

'மேகத்தான் வெற்பா னிமையான் விழுப்பனியா
னாகத்தான் னீமறைய நாட்கதிரே—யோகத்தாற்
காணாதார் நின்னை நிலையாமை கட்டுரைப்பர்
நாணாத கண்ணெனக்கு நல்கு.'

இது கொடிநிலை வாழ்த்து.

'சார்பினாற் றோன்றா தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.'

இது கந்தழி வாழ்த்து.

'பிறைகாணுங் காலத்தன் பேருருவ மெல்லாங்
குறைகாணு தியாங்கண்டு கொண்டு—மறைகாணு
தேய்ந்து வளர்ந்து பிறந்திறந்து செல்லுமென்
றுய்ந்தது நன்மாயை யாம்.'

இது வள்ளி வாழ்த்து."

புறப்பொருள் வெண்பா மாலை—பாடாண் படலம்:

கொடி நிலை—கொளு

'மூவர் கொடியுள்ளு மொன்றொடு பொறீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று.'

(இ-ள்.) அரி அயன் அரன் என்னும் மூவர்கொடியுள்ளும் ஒன்றோடுவமித்துப் பலரும் பொருந்துதல் வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்தது. (எ-று)

வருமாறு:

"பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல—ஓங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி" (39-ம்-செ)

கந்தழி—கொளு

'சூழநேமியான் சோவெறிந்த
வீழாச்சீர் விறன்மிகுத்தன்று.'

(இ-ள்.) வளைந்த திகிரியை யுடையவன் சோ வென்னும் அரணத்தினை அழித்த கெடாத தன்மை யினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது. (எ-று.)

'மாயவன் மாய மதுவான் மணிநிரையு
ளாயனு வெண்ண லவனருளான்—காயக்
கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ.' (40-ம்-செ)

வள்ளி—கொளு

பூண்முலையார் மனமுருக
வேள்முருகற்கு வெறியாடின்று.

(இ-ள்.) ஆபரணத்தினுற் சிறந்த முலையினை யுடையார் நெஞ்சு நெகிழ வேலினையுடைய குமரனுக்கு வெறி யென்னுங் கூத்தை யாடியது.

வ-று. 'வேண்டுதியா னீயும் விழைவோ விழுமிதே
ஈண்டியம் விம்ம வினவளையார்—பூண்டயங்கச்
சூலமோ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனோ டாடும் வெறி.'

வீரசோழியம்: பொருட் படலம், 21-ம்சூத்திரஉரையில், "கொடிநிலையாவது, கொடியது தன்மை கூறுவது; கந்தழியாவது, செருவிற் றிட்ப முடைமை; வள்ளியாவது, முருக வேளைக் குறித்தது." என்பன அம்மூன்றையும் பற்றிக் கூறப்பட் டிருக்கின்றன.

இலக்கண விளக்கத்துட் கூறப்பட்டிருப்பனவற்றை அடியிற் காண்க:

இலக்கண விளக்கம்: (புறத்திணையியல் 19ம்-சூ.)

கொடி நிலை

'மூவர் கொடியுளு மொன்றொடு பொரீஇ
மேவர வுரைத்த வியன்கொடி நிலையும்.'

கந்தழி

'சோவினை யழித்த துளவணி மாயோன்
மேவரு விறலினை வியந்தகந் தழியும்.'

வள்ளி

'எரிசுடர் வேலர்க் கிளகிய வுள்ளத்
தரிமலர்க் கண்ணிய ராடிய வள்ளியும்.'

இம்மூன்றினுக்கும் புறப்பொருள் வெண்பா மாலையிற் காட்டிய உதாரணங்களே இலக்கண விளக்கத்தினுங் காட்டப்பட் டிருக்கின்றன.

திருமுருகாற்றுப்படையைப் பற்றிக் கூறியவிடத்து நச்சினார்க்கினியர் கந்தழியைக் குறித்தனர். கந்தழியைப் பற்றி நச்சினார்க்கினியர் கொண்ட கருத்துக்கும், உரையாசிரியர், புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர், வீர சோழிய உரையாசிரியர், இலக்கண விளக்க ஆசிரியர் ஆகிய இவர்கள் கொண்ட கருத்துக்கும் உள்ள வேற்றுமை மிகப் பெரிது. அதனை விளக்கவே உரையாசிரியர் உரை, நச்சினார்க்கினியர் உரை முதலியன ஈண்டெடுத்துக் காட்டப்பட்டன. கொடி நிலையும், வள்ளியும் கந்தழியுடன் கூறுதற் குரியனவா யிருத்தலின், அவையும் ஈண்டெடுத்துக் குறிக்கப்பட்டன. அன்றியும், நச்சினார்க்கினியர் காட்டிய உதாரணச் செய்யுட்கள் முன்னையோர் செய்யுட்களா என்பதும் ஆய்தற்குரியதே.

4. முதுநாரை, முதுகுருகு: மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் அவர்கள் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையிற் கண்ட நூல்களின் விவரணம் என்றெழுதியவற்றுள், பெருநாரையும், பெருங்குருகும் தலைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்ட இசைத் தமிழ் நூல்கள் எனவும்; இவற்றிற்கு முறையே முது நாரை, முதுகுருகு என்னும் பெயருமுண்டு எனவுங் கூறி யிருக்கின்றனர். இஃதாய்தற்குரியது.

5. அவிநயம்: அவிநயனார் இயற்றமிழ் இலக்கணங்களுள் யாப்பிலக்கணமே யன்றி மற்றை இலக்கணங்

களையும் இயற்றியிருக்கின்றனர் என்பதும், அவை அவிநயம் என்னும் பெயரான் ஒரு நூலாக வழங்கியிருந்தன என்பதும் மகா மகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் அவர்கள் பதிப்பித்த நன்னூல் உரைகள் இரண்டினாலுந் தெரிய லாயின.

O-1A:9 N28

சுபம்.

121022